# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 05 கார்த்திகை 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை 01 டிசெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த

## மேலும் 3 பேர் நேற்றும் கைது

கைக்குண்டு, வாள்களும் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.1
யாழ்ப்பாணத்தில் நடந்த வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நேற்றும் 3 இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர். வாள்வெட்டுக் களுடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்யும் நட வடிக்கையின் தொடர்ச்சியாகவே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டார்கள். >> 25

புதிய அரசமைப்பை அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் ஏற்கவேண்டி

## ரணில், சம்பந்தன், தேரர்கள் அலரி மாளிகையில் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1
புதிய அரசமைப்பு மற்றும் சமகால அரசி யல் நிலவரங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையி லான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அஸ்கிரிய, மல்வத்து பௌத்த பீடங்களின் இரண்டாம் நிலை தேரர்களுக்கும் இடை யில் தலைமை அமைச்சர் ரணில் விக்கி ரமசிங்க தலைமையில் அலரிமாளிகை யில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம் பெற்றது.
கூட்டத்தின் ஆரம்பத்தில் புதிய அரச மைப்பு இப்போதைக்குத் தேவையில்லை எனப் பௌத்த பீடங்களின் தேரர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், நல்லிணக்கத்தைக் கட்டியெ ழுப்பவும், மூவின மக்களும் சுதந்திரமாக வாழவும் புதிய அரசமைப்பு மிகவும் அவ சியம் எனச் சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் தலை >> 25

243 உள்ளூராட்சி மன்றங்களுக்கு

## 18 முதல் 21 வரையும் வேட்பு மனுத் தாக்கல்

கொழும்பு, டிசெ. 1
அரசிதழ் (வர்த்தமானி) மீதான இடைக்காலத் தடை உத்த ரவு நீக்கப்பட்டுள்ளதையடுத்து, எஞ்சிய 243 >> 25

## தடை நீக்க உத்தரவில் நீதிபதிகள் கையெழுத்து இடாததால் பதற்றம்

இறுதியில் அமைச்சரின்
உறுதிமொழியை நம்பி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 1
உள்ளூராட்சித் தேர்தலுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை மனுதாரர்கள் திரும்பப் பெற்றதை அடுத்து அர சிதழ் (வர்த்தமானி) மீது விதிக்கப்பட்டிருந்த >> 25

தடைவிதிக்கக் கோரிய மனு திரும்பப் பெறப்பட்டது

## 336 சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல்

அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து சுமுக முடிவு

கொழும்பு, டிசெம்பர் 1
உள்ளூராட்சி அதிகார சபைகளின் வட்டார எல்லைகள், உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் உள்ளடக்கப் பகுதிகளைத் திருத்தி, பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த அதிசிறப்பு அரசிதழுக்கு (வர்த்தமானிக்கு)தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மனுதாரர்கள் திரும்பப் பெற்றதை அடுத்து அரசிதழ் மீது பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நீக்கியது. இதையடுத்து அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கான ஏது நிலை ஏற்பட்டுள்ளது.
உள்ளூராட்சி அமைச்சரால் வெளியிடப்பட்ட மேற்படி அரசிதழ் அதிகாரமற்றது என்று கட்டளை பிறப்பிக்குமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த 13ஆம் திகதி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு கடந்த 22ஆம்திகதி மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.
இதனை அடுத்து அரசின் பங்காளிக் கட்சியான சுதந்திரக் கட்சியே தேர்தலை நடத்தாது தடுப்பதற்காக இத்தகைய நாடகமாடுவதாகக் கடும் கண்டனங் >> 25

27 வருடங்களின்
பின் வயாவிளானில்

## 29 ஏக்கர் காணி நேற்று விடுவிப்பு

யாழ், டிசெ. 1
இராணுவத்தினர் வசம் இருந்த 70 பேருக்குச் சொந்தமான 29 ஏக்கர் காணி வயாவிளானில் நேற்று விடுவிக்கப்பட்டது. இதற்கான நிகழ்வு வயாவிளான் உத்தரிய மாதா ஆலய முன்றிலில் நேற்று நடைபெற்றது.
1990ஆம் ஆண்டு இராணுவத்தினரால் இந் >> 04

## "ஒகி" புயல் பாதிப்பு தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 1
கொழும்பிலிருந்து மேற்குப் பக்கமாக 400 கிலோ மீற்றர் தொலைவில் 'ஒகி' புயல் நேற்று இரவு 10 மணிக்கு நிலை கொண்டிருந்ததாகத் தெரிவித்த வளி மண்டலவியல் திணைக்களம், அது மேலும் நகர்ந்து செல்வதாகவும் இதனால் தென்பகுதியில் >> 25

12 மாவட்டங்களைப் புரட்டிப் போட்டது 'ஒகி'

## 7 பேர் சாவு, 26 பேர் காயம், பெரும் பொருள் சேதம்

யாழ்ப்பாணம், டிசெ. 1
தென்பகுதியைப் புரட்டிப்போட்டது 'ஒகி' புயல். 12 மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 7 பேர் உயிரிழந்தனர். 26 பேர் காயமடைந்தனர். 5 பேர் காணாமற் போயினர். 4 ஆயிரத்து 886 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 781 பேர் பாதிக்கப்பட்டனர். 202 வீடுகள் முழுமையாக அழிவடைந்தன. 3 ஆயிரத்து 250 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.
புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்க அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் >> 25



சம்பந்தனின் தலையீட்டை அடுத்து
அமைச்சர் நிமல் நடவடிக்கை

## இ.போ.ச. ஊழியர்கள் போராட்டம் வெற்றி

வழமைக்குத் திரும்பின அரச பஸ் சேவைகள்

யாழ்ப்பாணம், டிசெ.1
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியப் பணியாளர்கள் மேற்கொண்டுவந்த சேவைப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்தது. அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற போக்குவரத்துச் சபை முன்வந்ததை அடுத்து போராட்டத்தைக் >> 25

பயணிப்பது முட்கள்
நிறைந்த பாதைதான், ஆனால்

## மைத்திரியுடன் முரண்பாடில்லை

ரணில் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தனக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று வெளியாகிவரும் தகவல்களை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நிராகரித்தார்.
"புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்காக நானும் அரச தலைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இது புதியதொரு அனுபவம். தவறுகள் இடம்பெறலாம். அவற்றை சரிசெய்து கொண்டு முன்நோக்கிப் பயணிப்போம்" >> 25


எளிமையான லீசிங்
DFCC ஈசி லீசிங்




▪ தனியார் கார், பேருந்து மற்றும் வணிக வாகனங்களுக்கான லீசிங் வசதி ▪ இயந்திரங்களுக்கான லீசிங் வசதி ▪ கவர்ச்சிகரமான வட்டி வீதம் ▪ வேகமான மற்றும் தனிப்பட்ட சேவை ▪ நாடளாவிய ரீதியிலான 139 சேவை மையங்கள்.

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விஜயம் செய்யுங்கள்.
www.dfcc.lk
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு




### காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

## விரைவானவிசாரணை வேண்டிக் கவனவீர்ப்பு

அம்பாறை,டிசெ.1

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தை விரைவாக ஆரம்பித்து முறையான விசாரணைகளை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் அம்பாறை மாவட்ட அமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்கவேண்டும்”, “அரசியல் கைதிகளை உடனடியான விடுதலை செய்யவேண்டும்”, “நிலைமாறு கால நீதிக்கான அமைச்சு உருவாக்கப்படவேண்டும்” என்பன போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் முன்வைத்தனர். (ற-ரி5)

### வவுனியா சிறுமி வன்புணர்வு

# 10 ஆண்டு கடூழிய சிறை விதித்தது மேல் நீதிமன்று

வவுனியா, டிசெ.1

சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய நபருக்கு 10 ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது வவுனியா மேல் நீதிமன்றம்.

2009ஆம் ஆண்டுசெட்டிகுளம்மெனிக் பாம் பகுதியில் தந்தை மற்றும் சிறிய தாயுடன் வசித்த 9 வயது சிறுமி கடத்தப்பட்டு ஆண்டியா புளியங்குளம் காட்டுப் பிரதேசத்தில் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார். சிறுமியின் இனப்பெருக்கத் தொகுதியும், சமிபாட்டுத் தொகுதியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு கொழும்பு மருத்துவமனையில் தொடர்ச்சியாக 2 வருடங்களுக்கு சிகிச்சை பெற்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் ஒருவரைக் கைது செய்தனர். அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்றுவந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2016ஆம் ஆண்டு 2 குற்றச்சாட்டுக்கள் அடங்கிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது.

இந்த வழக்கு ஆரம்பத்தில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் விளக்கத்துக்கு எடுக்கப்பட்டிருந்தது. வழக்கின் சந்தேகநபர் மீது 2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி அரசடிக்குளம் பகுதியில் ஒரு சிறுவனை பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாக்கிய பிறிதொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கில் சந்தேகநபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு 10 வருடகாலகடூழியச்சிறைத்தண்டனை கடந்த மே மாதம் 22ஆம் திகதி தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றவாளியாக குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்ட காரணத்தால் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரனின் கோரிக்கையின் பேரில் இந்த வழக்கை விசாரிப்பதற்காக மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ரி. எல். ஏ மனாப் நீதிச் சேவை ஆணைக்குழுவால் விசேடமாக நியமிக்கப்பட்டார்.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ரி. எல்.எ.மனாப் குற்றவாளிக்கு 10 வருட கால கடூழிய சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் என்றும் மேல் நீதிமன்ற நீதிபதி ரி. எல். ஏ மனாப் உத்தரவிட்டார்.

தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் 2 மாத சாதாரண சிறைத்தண்டனையும், சிறுமிக்கு நட்டஈடு வழங்கத் தவறும் பட்சத்தில் 2 வருட கால கடூழிய சிறைத்தண்டனையும் அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. (ற)



### 75 மில்லியன் சொத்துக் குவிப்பு

## வீரவன்சவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, டிசெ. 1

சட்டத்துக்குப் புறம்பான வழிகளில் சொத்துச் சேர்த்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றில் இலஞ்ச ஊழல் விசாரணைக் குழுவினரால் நேற்றுக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

விமல் வீரவன்ச அமைச்சராக இருந்த காலப் பகுதியில், 2009ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் 2014ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், சம்பாதிக்கப்பட்ட வழி முறையை வெளிப்படுத்த முடியாத வகையில் சேர்க்கப்பட்ட 75 மில்லியன் ரூபா பணம் மற்றும் சொத்துக்கள் தொடர்பிலேயே இந்தச் சொத்துக் குவிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 26 குற்றச்சாட்டுக்களை விமல் மீது சுமத்தியுள்ள இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, அவற்றை நிரூபிப்பதற்காக 32 சாட்சிகள், 13 ஆவணங்கள் மற்றும் 40 தடயப் பொருள்களின் பட்டியலையும் உயர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளது. (5,31)



இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினேன் நேற்று மாலை உதயன் பணிமனைக்கு வருகை தந்தார். அரசியல் கள நிலமைகள் தொடர்பாகவும், ஊடக சுதந்திரம் தொடர்பாகவும் அவர் ஆர்வத்துடன் கேட்டறிந்தார். யாழ்ப்பாணத்தில் கடந்த 3 நாள்களாகத் தங்கியுள்ள அவர், வடக்கு முதலமைச்சர், யாழ். ஆயர் உள்ளிட்ட பலதரப்பினரையும் சந்தித்தார். (ற)

## ஆஸி. செல்ல முயன்றவர்கள் கைது

கொழும்பு, டிசெ.1

சட்டவிரோதமாக படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 31 பேர் ஆராச்சிக்கட்டுவ பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 28ஆம் திகதி முந்தல்உடப்புப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாகப் பயணித்த படகானது புயலில் சிக்குண்டதால் ஆராச்சிக் கட்டுவ கலுல்எலிய தீவில் கரையொதுங்கியபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.


35 பேர் வரை பயணம் மேற்கொண்ட போதிலும், 31 பேரை மாத்திரமே பொலிஸார் கைது செய்தனர். ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் உடப்பு, முந்தல் மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரியவந்தது. (ற-ரி5)






நீதி கோரும் சகோதரிகளாக நாம் ஒன்றிணைவோம் எனும் கருப் பொருளில் சமூக வன்முறைகளுக்கு நீதிகோரி நேற்று மட்டக்களப்பு கிரானில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. தெற்காசிய பெண்கள் தினத்தையொட்டி இடர் முகாமைத்துவப் பெண்கள் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மூவின சமூகங்களையும் சேர்ந்த பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ற-ரி5)



## சில்லாலையில் நடமாடும் சேவை

சில்லாலை.டிசெ.1
சில்லாலைப் பகுதியில் பொலிஸாரின் நடமாடும் சேவை நேற்று இடம்பெற்றது.
148,149 கிராம சேவைப் பிரிவுகளில் இந்தச் சேவை நடத்தப்பட்டது. இதன்போது மருத்துவ சேவையும் இடம்பெற்றது.
இளவாலைப் பொலிஸாரால் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.(ற-ரி2,26)

## வழிகாட்டல் செயலமர்வு

இவ்வருடம் ஜி.சி.ஈ. சாதாரணதர பரீட்சைக்கத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு நேற்று இடம்பெற்றது.
வல்வெட்டித்துறை, நகராட்சி மன்ற பொது மண்டபத்தில் இடம்பெற்றது.
மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெறும் வகையில் பிரபல ஆசிரியர்களால் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.
மூன்று நாட்களாக இடம்பெற்ற செயலமர்வு நேற்றுடன் நிறைவு பெற்றது.
உள்ளூராட்சி மாதத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் இச் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.
(ற-ரி2,26)



# ஹெரோயினுடன் இருவர் கைது




யாழ்ப்பாணம், டிசெ. 1
வியாபார நோக்கத்துக்காக ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர்.
திருநகர் பகுதியைச் சேர்ந்த 27, 33 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.
யாழ்ப்பாணம் திருநகர் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ஹெரோயின் பைக்கற்றுக்கள் இரண்டு கைப்பற்றப்பட்டன.
690 கிராம் எடையுள்ள அவற்றின் பெறுமதி 10 இலட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ரி2,26,8)

# பயணத்தின்போது குழந்தைகளுக்கு தலைக்கவசம் அணிவியுங்கள்

சாவகச்சேரி டிசெ.1
சிறு பிள்ளைகளை மோட்டார் சைக்கிள்களில் ஏற்றிச் செல்லும்போது அவசியம் தலைக்கவசம் அணிந்த நிலையில் அழைத்துச் செல்லுமாறும், அவ்வேளையில் எதிர்பாராமல் விபத்து ஏற்பட்டால் குழந்தையின் உயிருக்கு ஆபத்து ஏற்படாது என சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.
மோட்டார் சைக்கிள் செலுத்துபவரினதும் பெற்றோரின்அசண்டையீனம் பிள்ளையின் உயிருக்கு உலை வைத்துவிடும். இதனைக் கருத்திற் கொண்டு பிள்ளைகளை எங்கு அழைத்துச் சென்றாலும் அவர்களுக்கும் தலைக்கவசம் அணிந்து கொண்டு செல்லுமாறும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.
மிருசுவில் கெற்பெலிப் பகுதியில் நேற்றுக் காலை முன்பள்ளியில் பிள்ளையை விடுவதற்காக ஏற்றிச் சென்ற வேளையில் நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியது.
தலைக்கவசம் அணியாத நிலையில் கொண்டு செல்லப்பட்ட நான்கு வயதுக் குழந்தைக்கு தலையிலும், முகத்திலும் பலத்த காயங்கள் எற்பட்டன.
இதனால் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குழந்தையை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்தவமனைக்கு அனுப்பிய பின்னர் மருத்துவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். (ரி2,9)

## விபத்தில் இருவர் உயிரிழப்பு

தம்புள்ள.டிசெ.1
தம்புள்ளை, ஹபரண பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
திருகோணமலையில் இருந்து தம்புள்ளை நோக்கி சென்ற கார் ஒன்றும் கண்டியில் இருந்து திருகோணமலை நோக்கி வந்த தனியார் பேருந்தும் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.



விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளதாக ஹபரணை பொலிஸார் தெரிவித்தனர்.
காயமடைந்த காரின் சாரதியும் மற்றுமொருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.
காரில் பயணித்த மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளதுடன் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
தனியார் பேருந்தில் பயணித்த நிலையில் காயமடைந்த 7 பேர் தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.
பேருந்தின் சாரதியை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
கண்டி தனியார் பல்கலைக்கழகம் ஒன்றின் மாணவர்கள் மூன்று பேருந்துகளில் திருகோணமலைக்கு சுற்றுலாப் பயணம் சென்றிருந்த வேளையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. (ற-ரி2)

## பேருந்து மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ.1
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்து மீது இன்று அதிகாலை கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்து மீதே இனந்தெரியாதோரால் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
இந்த சம்பவம், வல்லைவெளிப் பகுதியில் அதிகாலை 5 மணியளவில் நடந்துள்ளது.
தாக்குதலில் பேருந்தின் கண்ணாடி சேதமடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் பேருந்தின் சாரதியால் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-26)

# சிறப்புத் தேவையுடைய பிள்ளைகள் ஆண்டவனின் அருட்கடாட்சம்

கொழும்பு.டிசெ.1
இந்த நாட்டில் ஊனமுற்ற பிள்ளைகள் என்று ஒருவரும் இல்லை. மனிதநேயம் மற்றும் மனிதாபிமானம் இல்லாத ஏனையவர்களுக்கு உதவி செய்யாத கொடூர குணம் படைத்த மனிதர்களே ஊனமுடையவர்கள். விசேட தேவையுடைய பிள்ளைகள் அனைவரும் ஆண்டவனின் அருட்கடாட்சம் பெற்று வழிபடக்கூடிய பிள்ளைகள்.
இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் உப தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
பன்னாட்டு சிறப்புத் தேவையுடையவர்களுக்கான தினம் நேற்று கல்வி அமைச்சின் மூலமாக பத்தரமுல்லை அபேகமவில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப்பிரிவு தெரிவித்தது.
ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது-
ஏனைய மாணவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளுடனும் முடிந்தால் அதற்கு மேலாகவும் இதனை முன்னெடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.
ஏனென்றால் இந்தப் பிள்ளைகள் அனைவரும் இறைவனின் குழந்தைகள். அவர்களை நாங்கள் சிறப்பாக கவனித்துக் கொள்ள வேண்டும்.
ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 3 ஆம் திகதி மாற்றுத் திறனாளிகளுக் கான தேசிய தினமாக பெயரிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் இன்று (நேற்று) அபே கம வளாகத்தில் மகாவலவ்வ நாட்டிய மண்டபத்தில் நடைபெறுகின்றமை ஒரு சிறப்பம்சமாகும். இத்தேசிய தின விழாவின் தொனிப்பொருளானது சிறந்த நிலைபேறான சமூகத்தை நோக்கி செல்லுதல் என்பதாகும்.
இன்றைய தினம் (நேற்று) மாற்றுத் திறனாளிகள் உள்ள பாடசாலைக்கு கல்வி உபகரணத் தொகுதிகளை வழங்குதல். எதிர்வரும் டிசெம்பர் 1, 25 ஆம் திகதிகளில் மாற்றுத் திறனாளிகளின் உதவியோடு மரக் கன்றுகளை நடுதல், டிசெம்பர் 3 ஆம் திகதி முக்கிய நிகழ்வாக சமூக சேவை, சமூக நலன் மற்றும் மலைநாட்டு உரிமைகளுக்கான அமைச்சு மூலமாக பொது விளையாட்டு நிழ்வுகளும் இடம்பெறவுள்ளன.
இன்று (நேற்று) நடைபெறுகின்ற நிகழ்சியின் போது சிறப்பு தேவைகளுக்கான பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை இலகு படுத்துவதற்காக அந்த பாடசாலைகளில் 300 விசேட கல்வி பிரிவுகளுக்கு 150 மில்லியன் ரூபா பெறுமதியான தகவல் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உபகரணங்களை வழங்குதல் மற்றும் தேசிய பாடசாலைகளில் 19 விசேட கல்விப் பிரிவுகளை புதுப்பித்து மற்றும் நவீனமயப்படுத்துவதற்கான காசோலைகளும் வழங்கி வைக்கப்படுகின்றன.
சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் பாடசாலை பிள்ளைகளுடன் கல்வி நடவடிக்கைகளில் கலந்துக் கொள்ளும் போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறைத்து அவர்களின் கல்வி நடவடிக்கைகளை இலகுவாக்கி கல்வி மட்டத்தை உயர்த்துவது இந்தத் திணைக்களத்தின் குறிக்கோளாகும்.
இங்கு கணனிகளோடு பிரேல் எனும் மென்பொருள் வீடியோ கம்ரா (USO ஃ pen drive) ஸ்மாட் அலுமாரிகள் காட்ரீடர் ஹெட் போன் மற்றும் LED TVபோன்ற தகவல் தொடர்புடைய தொழில் நுட்ப பொருட்களை பகிர்ந்தளிக்கவும் நாங்கள் அமைச்சு என்ற வகையில் தீர்மானித்திருக்கின்றோம்.
சிறப்புத் தேவைகளுடைய மாணவர்களுக்காக அரசின் மூலமாக வருடந்தோறும் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளில் இருந்து அரச பாடசாலைகளில் சிறப்புக் கல்வி பிரிவின் நவீன மயப்படுத்துல் மற்றும் புதுப்பித்தல் புதிய சிறப்பு கல்விப் பிரிவுகளை நிர்மாணிக்கவிருக்கிறோம்.
கல்விப் பொருட்களை வழங்குதல் மாகாண மட்டத்தில் மூக்கு கண்ணாடிகள் மற்றும் செவிப்புலன் உபகரணாங்களை வழங்குதல் சிறப்புக் கல்வி முகாம்களை நடத்துதல் சிறப்புக் கல்வி தொழில் தொடர்புடைய மனித வள அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ள நாம் தீர்மானித்திருக்கின்றோம்.
சிறப்புக் கல்வி, தொழிலாளர்களுக்கிடையே அறிவை பகிர்ந்துக் கொள்ளுதல் மற்றும் கல்வியை வலுவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு 2018 ஆம் வருடத்திலிருந்து மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தவும் கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது- என்றார் (ரி2)

# மகிந்த காலத்து பிணைமுறி வழங்கல் பிரமிட் மோசடிக்குச் சமாந்தரமானது

## தற்போதைய விசாரணை முடிந்ததும் அன்றைய காலத்து மோசடி தொடர்பில் விசாரணை நடக்கும் சபையில் ரணில் நீண்ட விளக்கம்

கொழும்பு, டிசெ. 1
மகிந்த காலத்தில் மத்திய வங்கியால் முன்னெடுக்கப்பட்ட பிணை முறிகளில் பெரும் ஊழல் மோசடிகள் நடைபெற்றுள்ளன. பிரமிட் வியாபார மோசடிக்கு சமாந்தரமானது. அது தொடர்பில், தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணை முடிந்ததும் விரிவான விசாரணை ஆரம்பிக்கப்படும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சிறப்பு அறிக்கையை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**நீதி நிலமை**

2014ஆம் ஆண்டு எமது நாட்டின் மொத்த வெளிநாட்டுக் கடன் 3 ஆயிரத்து 113 பில்லியனாக காணப்பட்டது. 2014ஆம் ஆண்டில் மொத்தக் கடன் தேசிய உற்பத்தியில் 71.3 சதவீதமாகும். தலாதேசிய வருமானத்தில் 10.4வீதம் கடன் செலுத்துவதற்கே செலவாகியிருந்தது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக அரசின் வருமானம் செலவை செலுத்துவதற்கே பற்றாக்குறையாகக் காணப்பட்டது. அரசின் செலவுகளுக்கு மேலதிக கடன்களைப் பெறவேண்டிய நிலமை இருந்தது.

2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகள் தொடர்பிலான கோவையை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்டேன். இந்தக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகளின் போது தனியார் (தனிப்பட்ட) நேரடி பிணைமுறிகளே அதிகம் விநியோகிக்கப்பட்டுள்ளன. எவ்வித வெளிப்படைத் தன்மையும் இல்லை. இந்தக் காலப் பகுதியில் விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகளில் 90 சதவீதமானவை நேரடி தனிப்பட்ட பிணைமுறிகளாகவே விநியோகிக்கப்பட் டுள்ளன.

**கடன்கள்**

ஏலவிற்பனை முறையில் விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகள் 435.5 பில்லியன் மாத்திரமே. 2015ஆம் ஆண்டு 4 சந்தர்ப்பங்களில் மாத்திரமே தனியார் நேரடி பிணைமுறி விநியோகம் நடைபெற்றுள்ளன. அதன் பெறுமதி 157.5 பில்லியனாகும். தற்போதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள திறைசேரி பிணைமுறிகளுக்காக 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2045ஆம் ஆண்டுவரை செலுத்த வேண்டிய மொத்த தொகை மற்றும் வட்டி தொடர்பில் மேலாண்மை அறிக்கையை மத்திய வங்கியிடம் பெற்றுக்கொண்டுள்ளேன். 2045ஆம் ஆண்டுவரை பிணைமுறிகளுக்காக 4 ஆயிரத்து 145 பில்லியனும், வட்டியாக 3 ஆயிரத்து 86 பில்லியனும் செலுத்த வேண்டியுள்ளது. இந்தக் காலப்பகுதியில் பிணைமுறைகள் இல்லாது மேலதிக கடன்களையும் பெறவேண்டிய நிலைமை ஏற்படும். எதிர்கால செலவினங்களும் மேலாண்மை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இந்தத் தொகைகளையும் சேர்க்கும் போது பெரிய கடன் தொகையைச் செலுத்த வேண்டிவரும். இவற்றை மக்கள்தான் செலுத்தவும் வேண்டும்.

**எமது தீர்மானம்**

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தப் பிணைமுறி விநியோகங்கள் தொடர்பில் ஆய்வுக்குட்படுத்திப் பார்த்தோம். நிதிச் சபையின் ஊடாக தனியார் நேரடி பிணைமுறிகள் விநியோகிப்பது தொடர்பில் எவ்வித தீர்மானங்களோ வரையரைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. குறுகிய கால தீர்வுகளுக்காக நிதியை திரட்டுவதே திறைசேரியின் தீர்மானமாக இருந்தது. தனியார் நேரடி பிணைமுறிகளை விநியோகிப்பதற்கு எவ்வித அனுமதியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறெனில் என்ன நடந்துள்ளது? நாணய சபையின் அனுமதியின்றி வெளிப்படைத்தன்மையற்று தமக்குத் தேவையான வகையில் வட்டி வீதங்களை நிர்ணயித்து தமக்குத் தேவைப்பட்டுவர்களுக்கு தொடர்ச்சியாக பிணைமுறிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டு நாங்கள் இந்த அரசை பொறுப்பேற்கும் முன்னர் நடைமுறையில் இருந்த இந்த முறைமை பிரமிட் ஊழலுக்குச் சமாந்தரமானது. பெற்றுக்கொண்டுள்ள கடனையும் வட்டியும் செலுத்தவும் பொருளாதாரதையும் வலுப்படுத்த 2025ஆம் ஆண்டுவரை தொலைநோக்குடைய பொருளாதாரக் கொள்கையை முன்கொண்டுசெல்வோம். இந்தக் கடன்சுமை மக்கள் மீதே சுமத்தப்படும்.

**புதிய விசாரணை**

பிணைமுறி விநியோகம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கும் அரச தலைவர் ஆணைக்குழு, 2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை இடம்பெற்ற பிணைமுறி மோசடிகள் குறித்து விசாரணை செய்ய நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். இந்தக் காலப் பகுதியில் நாடாளுமன்றத்திற்கு அறிவிக்காது பெற்றுக்கொண்ட கடன் மற்றும் விநியோகிக்கப்பட்ட பிணைமுறிகள் குறித்து நாடாளுமன்ற அரசநாணய குழுவின் மூலம் விசாரணைக்கு உட்படுத்த எதிர்பார்க்கிறோம்.

இதேவேளை பிணைமுறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்ய எமது ஆட்சியில் அரசதலைவர் ஆணைக்குழுவை அமைத்து விசாரணை செய்துள்ளோம். ஆனால், மகிந்த ராஜபக்ச காலத்தில் இவ்வாறு விசாரணை செய்திருந்தால் விசாரணை செய்தவர்கள் லசந்த விக்ரமதுங்க சென்ற பாதையில்தான் செல்ல வேண்டியிருந்திருக்கும் - என்றார். (5.31)

## வானிலை அறிவித்தல்களை தமிழில் வெளியிடுவதற்கு திணைக்களத்தில் தமிழ் அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை

கொழும்பு, டிசெ. 1
வளிமண்டலவியல் திணைக்களத்தில் தமிழ் மொழி தெரிந்த அதிகாரிகளின் பற்றாக்குறையால் வானிலை முன்னறிவித்தல்கள்மற்றும்இயற்கை இடர்கள் குறித்து முன்னெச்சரிக்கைகளை தமிழ் மொழியில் வெளியிட முடியாததுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரேமலால் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இடர் நிலமைகள் குறித்து முன்னறிவித்தல்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்றது. இந்த அறிவித்தல்கள் தமிழ் மொழியில் வெளியிடப்படாமையினால் தமிழ் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி பகுதிகளில் குறிப்பிட்ட நேரத்திற்குள் வானிலை முன்னெச்சரிக்கைகள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்ட போதும் தமிழ் மொழி மூலம் இறுதியாக கடந்த 21ஆம் திகதியே முன்னறிவித்தலொன்று விடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தற்போதைய இடர் நிலமைகள் தொடர்பாக தமிழ் பேசும் மற்றும் வேறு மொழி தெரியாதவர்களுக்கு அது தொடர்பான உத்தியோகபூர்வ தகவல்களை அறிந்துக்கொள்வதில் சிக்கல் நிலமைகள் ஏற்பட்டுள்ளன என்பதை நாமும் ஏற்றுக்கொள்கின்றோம்.

வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு தமிழ் தெரிந்த அதிகாரிகள் 4 பேராவது இருக்க வேண்டும். ஆனால் குறிப்பிட்ட கடமைக்காக ஒருவர் கூட கிடையாது. இதற்கான நியமனங்களை வழங்க வேண்டிய பொறுப்பு அரசு மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் பொறுப்பாகும். அவர்க்ள் நியமனங்களை வழங்கி ஊழியர்களைப் பெற்றுத் தந்தால் எங்களால் அதனை செய்ய முடியும். அதனை செய்யாது எங்களால் தமிழ் மொழியில் முன்னெச்சரிக்கைகளை விடுப்பது சிக்கலானதே. இவ்வாறான நெருக்கடி நிலைமைகளில் மக்கள் உடனடியாக தெளிவு பெரும் வகையில் மூண்டு மொழிகளிலும் அறிவித்தல்கள் விடுக்கப்பட வேண்டும். இதனை அரசு கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் - என்றார். (5,31)

## மானிப்பாய் விபத்தில் 17 வயது மாணவன் சாவு

மானிப்பாய், டிசெ.1
மானிப்பாய், ஆலடியில் நேற்று முன்தினம் மாலை நடந்த விபத்தில் 17 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்தார்.

உதயசூரியன் வீதி, உடுவில் பகுதியை சேர்ந்த அடம்ஸ் நீல்சன் லியனாடோ அலோசியஸ் என்பவரே உயிரிழந்தார்.

மானிப்பாயிலிருந்து உடுவிலுள்ள தனது வீட்டுக்கு மாணவன் ஸ்கூட்டி வகையைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளை வேகமாக செலுத்திச் சென்றார். பிரதான வீதியால் துவிச்சக்கர வண்டியில் வந்த பெண்ணொருவர் குறுக்கு வீதிக்கு திடீரெனத் திரும்பியதால் மோட்டார் சைக்கிளைக் கட்டுப்படுத்த முடியாது துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்து நடந்தது என்று கூறப்படு கின்றது.

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி சிறுவன் உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த புதுமடம், உடுவில் தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த 33 வயதுடைய அமிர்தரஞ்சினி சுரேந்திரன் என்ற பெண் தொடர்ந்தும் யாழ். போதனா வைத்தியசாலையில் 24ஆம் விடுதியில் சிகிச்சை பெறுகின்றார். (ற-37)

## மகிந்தவின் கட்சி களத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 1
சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்சவின் சிறி லங்கா பொது மக்கள் முன்னணி சார்பாக அந்தக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் தம்பிதுரை ரஜீவ் (ஈபிடிபி, மகேஸ்வரி நிதியத்தின் முன்னாள் இணைப்பாளர்) நேற்று மாலை 3 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கட்டுப்பணம் செலுத்தினார்.



சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை ஈ.பி.டி.பி. மற்றும் சிறிலங்கா பொது மக்கள் முன்னணி ஆகியவை மாத்திரமே கட்டுப் பணம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றையதினம் மகிந்தவின் கட்சி வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த போது வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரும் ஈபிடிபி முன்னாள் உறுப்பினரும் நெடுந்தீவு பிரதேச சபை முன்னாள் தலைவர் றெக்சியன் கொலை வழக்கில் சந்தேகநபரான கமலும் உடனிருந்தார். (உ-5)

## 29 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப் பிரதேசம் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டிருந்தது. மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் அடிப்படை வசதிகள் இன்றித் தங்கியிருந்து பெரும் துன்பப்பட் டனர்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் படிப்படியாக மெதுவாகக் காணிகள் விடு விக்கப்பட்டு வருகின்றன. நேற்றைய விடுவிப்பு 16ஆவது கட்டமாக நடந்துள்ளது. வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வயாவிளான் (ஜே/244) கிராம அலுவலர் பிரிவில் 29 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட்டது.

காணி விடுவிப்புக்கான சான்றிதழை, யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனிடம் ஒப்படைத்தார்.

வடமூலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, அதனுடன் இணைந்த தேவாலயம், 70 பேருக்குச் சொந்தமான காணி என்பன விடுவிக்கப்பட்ட நிலப் பகுதியினுள் அடங்கியிருக்கின்றன. (உ-5,26,32)

## கலை இலக்கியப் பெருவிழா பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், டிசெ.1
2017ஆம் ஆண்டுக்கான மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா தொடர்ந்து நான்கு தினங்கள் பருத்தித்துறை கலாசார அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஐ.பரமேஸ்வரன் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக கலாசார அதிகார சபைத் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரச அதிபருமான சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார்.

மாதனை சனசமூக நிலைய மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும், கலாசார அதிகாரசபை ஒருங்கிணைப்பாளருமான பொன் சுகந்தன் தலைமையில் கூத்து, நடனம் போன்ற கலை நிகழ்வுகள் இரண்டாம் நாள் நிகழ்வாக நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. முதன்மை விருந்தினராக பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் கலந்து கொள்ளவுள்ளார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பருத்தித்துறை பிரதேச செயலக உதவித்திட்டமிடற் பணிப்பாளர் கே.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள மூன்றாம்நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார். 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் கலை விழாவும், நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளன.

புலோலி, புற்றளை கலாசார மத்திய நிலையத்தில் இறுதி நிகழ்வாக பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் பருத்தித்துறை பிரதேசசெயலரும், கலாசார அதிகாரசபைத் தலைவருமான ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் 4ஆம் திகதி திங்க ட்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெ றவுள்ளது.

முதன்மை விருந்தினராகப் கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அனுஷா கோகுல பெர்னாந்து கலந்து கொள்ளவுள்ளார்.

அனைவரையும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (எ)

## ‘ஆதிசிவன் பாத அமுதம்’ மலர் வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 1
வவுனியா, தோணிக்கல் திருவருள்மிகு விசாலாட்சி சமேத விஸ்வநாதர் திருக்கோவிலின் ‘ஆதிசிவன் பாதஅமுதம்’ மலர் வெளியீட்டு நிகழ்வு, எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆதிசிவன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபைச் செயலாளர் ல.சுரேந்திர சேகரன் தெரிவித்தார்.

ஆலய பரிபாலனசபையின் தலைவர் து.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா நகரசபைச் செயலாளர் இ.தயாபரன் கலந்துகொள்வார்.

நிகழ்வில் த.சிவகுமாரன் நடுவண்மையில் ‘ஆன்மிக பண்பாட்டு விழுமியங்கள் தற்கால சூழலில் மங்கி மறைகின்றதா? நின்று நிலைக்கின்றதா?’ என்னும் பொருளில் பட்டிமன்றம் இடம்பெறும். அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### விதை வெங்காயத்தின் விலையேற்றத்தால்

## பெரும்போக வெங்காயச் செய்கை குடாநாட்டில் ஆபத்தில்

### விவசாயிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1
யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்போக வெங்காயப் பயிர்செய்கைக்கான விதை வெங்காயம் 50 கிலோ 20ஆயிரம் ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ளது. இந்த நிலைமையில் இந்த வருடம் பெரும்போக வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில், காலபோகத்தின் போது வெங்காயச்; செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்படுவது வழமை. சின்ன வெங்காயம், வேதாள வெங்காயம் என இரண்டு வகையான வெங்காயப் பயிர்செய்கை மேற்கொள்வர். இந்த வெங்காயங்களை அறுவடை செய்து களஞ்சியப்படுத்தி உறங்குகாலம் நிறைவடைந்த நிலையில் விதையாக நடுகை செய்வர்.

இந்த வருடம் சிறுபோக வெங்காயச்செய்கை கடும் வரட்சி மற்றும் காலநிலை முரண்பாடுகளினால் பாதிப்படைந்த நிலையில் விதை வெங்காயமாக களஞ்சியப்படுத்தப்படவில்லை. விதை வெங்காயத்தின் விலை தற்போது 50கிலோ 20ஆயிரம் ரூபாவரை அதிகரித்து இருப்பதோடு தேவையான அளவுக்கு பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உள்ளூர் சந்தைகளில் 1கிலோ யாழ்ப்பாண வெங்காயத்தின் விலை 400 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. உரிய அளவு விதை வெங்காயத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான நிலை யாழ்ப்பாண மாவட்ட மரபு வழி வெங்காயச் செய்கையில் எதிர்பாராத விளைவுகளை எற்படுத்துகின்றது எனவும், வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளையும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கி இருக்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-11)



யாழ்ப்பாணம் நீர்வேலி கரந்தன் கலைவாணி சனசமூக நிலையத்தின் கட்டடத் திறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கலைவாணி சனசமூக நிலையத்தின் தலைவர் சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் புளொட் அமைப்பின் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)

## தென்மராட்சிக் கல்வி வலயத்தின் மாற்றுத் திறனாளிகள் தின விழா

தென்மராட்சி, டிசெ. 1
தென்மராட்சிக் கல்வி வலய விசேட கல்வி அலகினால் மாற்றுத் திறனாளிகள் தினவிழா அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் இ.வாசுகி தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்துகொண்டார்.

நிகழ்வில் நவீல்ட் பாடசாலை மாணவர்களின் தனி மற்றும் குழு நடனங்களும், சைகை மொழிப் பாட்டும் இடம்பெற்றன.

நிகழ்வில் மாற்றுவலுவுடையோர் தினத்தையொட்டி விசேட கல்வி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)



## வடக்கு மாகாண பொலிஸாரின் விடுமுறை ரத்து தளர்த்தப்பட்டது

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் விடுமுறை ரத்து தளர்த்தப்பட்டு அவர்களுக்கான வழமையான விடுமுறைகள் வழங்கப்பட்டு வருவதாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் சமூக விரோதச் செயல்கள் காரணமாக மாகாணத்தில் கடமையாற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன. அத்துடன் அனைத்து இடங்களிலும் பொலிஸ் ரோந்துகள் இடம்பெற்றதுடன் மாலை நேரங்களில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்ப டுத்தப்பட்டிருந்தன. இந்த நிலையில் சமூக விரோதச் செயல்களுடன் தொடர்புடைய பலர் கடந்த சில தினங்களில் கைது செய்யப்பட்டனர் எனவும் அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சில ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-8)

## சுன்னாகம் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 1
சுன்னாகம் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கட்டட உரிமையாளர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாடு தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
கடந்த 27ஆம் திகதி மாவீரர் தினமன்று புன்னாலைக்கட்டுவன் பகுதியில் எனது கடைக்கு முன்னால் வைத்து சிலரைப் பொலிஸார் தாக்கினர்.

எனது கடைக்கு முன்னால் சம்பவம் நடப்பதால் நான் எனது மோட்டர் சைக்கிளுடன் அங்கு சென்று சம்பவம் தொடர்பில் அங்கிருந்த பொலிஸாரிடம் கேட்ட போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் தகாத வார்த்தைகளால் ஏசி என்னையும் தாக்கினர்.

இதனால் நிலைகுலைந்த நான் உடனடியாக மோட்டார் சைக்கிளைப் போட்டு விட்டு பயத்தில் அந்த வழியே வந்த வாகனத்தில் ஏறித் தப்பிச் சென்று விட்டேன்.

பின்னர் பொலிஸாரின் அவசரச் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் பிரிவுக்குச் சென்று அங்கு நடந்தவற்றை கூறினேன்.

பின்னர் சட்டத்தரணி ஒருவருடன் மோட்டார் சைக்கிளை மீட்கச் சென்றபோது சுன்னாகம் பொலிஸ் பிரிவின் அதிகாரி, எனது மோட்டார் சைக்கிளில் இருந்து 200 மில்லிக்கிராம் கஞ்சா போதைப்பொருளை மீட்டதாகப் பொய்யான குற்றச்சாட்டுச்சுமத்துகின்றனர் - என்று நேற்றுமுன்தினம் கடை உரிமையாளர் முறை யிட்டுள்ளார். (எ-8)

## பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு


யாழ்ப்பாணம், டிசெ.1
யாழ்ப்பாண விழிப்புலனற்றோர் சங்கத்தினால் 2017ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஏ.எஸ். அற்புதராஜ் தலைமையில் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் (ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்) நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம், யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் மதிப்புறு விருந்தினராக சேகர் மோட்டோஸ் உரிமையாளர் வே.நடராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்ப்பாண விழிப்புலனற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 1200 | 1000 |
| நண்டு | 400 | 400 | 600 | 500 |
| கணவாய் | 600 | 500 | 900 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 600 | – |
| சீலா | 350 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 600 | 600 |
| முரல் | 300 | 350 | 500 | – |
| கும்பிளா | 250 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 300 | 300 | 600 | 400 |
| திரளி | 200 | 200 | 300 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | – |
| சூடை | 100 | 120 | 200 | 200 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 300 |
| திருக்கை | 250 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 180 | 300 | – |
| கொய் | 100 | 100 | 100 | 100 |
| பாலை | 150 | 200 | 400 | 400 |
| வாளை | 150 | 200 | 300 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 120 | 80 | 80 | 80 |
| கத்தரி | 140 | 100 | 150 | 140 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 240 | 300 | 300 | 200 | 200 |
| பாகல் | 350 | 340 | 400 | 250 | 340 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 140 | 200 | 180 | 160 | 180 |
| சி.வெங்காயம் | 350 | 300 | 350 | 380 | 160 |
| பூசணி | 80 | 80 | 60 | 70 | 60 |
| தக்காளி | 90 | 120 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 | 60 |
| கீரை | 50 | 50 | 60 | 30 | 50 |
| பொன்னாங்கானி | 50 | 50 | 40 | 35 | 40 |
| ப.மிளகாய் | 600 | 800 | 800 | 600 | 700 |
| புடோல் | 100 | 120 | 120 | 100 | 80 |
| கோவா | 160 | 160 | 140 | 150 | 140 |
| வெண்டி | 100 | 130 | 160 | 120 | 100 |
| போஞ்சி | 180 | 160 | 220 | 160 | 180 |
| லீக்ஸ் | 140 | 200 | 200 | 220 | 240 |
| தேங்காய் | 75 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 50 | 80 | 80 | 70 | 50 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | – | 20 |
| கறிமிளகாய் | 310 | 300 | 250 | 300 | 350 |
| கரட் | 200 | 200 | 200 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 220 | 300 | 500 | 100 | 320 |

# சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவகம் நடத்தியவருக்கு ரூ.5,000 தண்டம்

தென்மராட்சி, டிசெ. 1

நாவற்குளியில் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் உணவகம் நடத்தியவருக்கு சாவகச்சேரி நீதிமன்று 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கைதடி நகரப் பகுதியில் உள்ள உணவகம் நீதிமன்றால் சீல் வைக்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கைதடி மற்றும் நாவற்குளி ஆகிய இடங்களில் உள்ள உணவகங்கள் சிற்றுண்டி நிலையங்கள் பலசரக்கு விற்பனை நிலையங்கள் போன்றவற்றை நடத்துபவர்களுக்கு கருத்தரங்குகளை நடத்தி உணவு கையாளும் நிலையங்களின் சுகாதாரம் தொடர்பான விளக்கங்களும் வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் அண்மையில் நாவற்குளியில் உள்ள உணவகத்தில் பரிசோதனை மேற்கொண்ட வேளையில் அவிக்காத இறைச்சிக்குப் பக்கத்தில் றொட்டி வைத்திருந்தமை, சமையலறைக்குள் நாய்கள் நடமாடியமை, கழிவு நீரை திறந்த நிலையில் வெளியேற்றியமை, தனிநபர் சுகாதாரம் பேணாத (நகம் வெட்டப்படாத) சிப்பந்திகளை பணியில் அமர்த்தியிருந்தமை, நிலையத்தில் இலையான் பெருக்கம் காணப்பட்டமை, போன்றவை காணப்பட்டதால் நிலைய உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சுமத்தப்பட்ட ஐந்து குற்றச்சாட்டுக்களையும் உரிமையாளர் ஏற்றுக்கொண்டதால் வழக்கை விசாரித்த நீதிமன்ற பதில் நீதிவான் ப.குகனேஸ்வரன் ஐந்து குற்றங்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (எ.9)

## விபத்துகளில் நால்வர் காயம்

தென்மராட்சி, டிசெ.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் கச்சாய் மற்றும் எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்களில் காயமடைந்த நால்வர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்கள் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

கச்சாய் பகுதியில் சாலை வளைவில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் ஆசிரியர் ஒருவரும் மாணவர் ஒருவரும் காமடைந்தனர் எழுதுமட்டுவாழ் சந்திக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்தில் வாங்குவதற்காக சமிக்ஞையின்றி மோட்டார் சைக்கிளைத் திருப்பிய போது பளையை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (4-9)

## நீர் இறைக்கும் இயந்திரம் திருடிய நபர் விளக்கமறியலில்

சாவகச்சேரி டிசெ.1

சாவகச்சேரி பகுதியில் கிணற்றடியில் பொருத்தப்பட்டிருந்த 23 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தைத் திருடிய நபரையும் நாவற்குளிப் பகுதியில் நான்கு வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்தவர்களைத் தாக்கி அங்கிருந்த உடைமைகளை அடித்துச் சேதப்படுத்திய இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய சாலையில் தனியார் முன்பள்ளி இயங்கும் வீட்டில் உள்ள கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் நேற்று முன்தினம் பட்டப்பகலில் திருடப்பட்டது.

இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதை யடுத்து சம்பவம் தொடர்பாக பொலிஸார் இருவரைக் கைது செய்து நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் ஒருவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு மற்றவரை 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

நாவற்குளி ஐயனார் கோவிலடிப் பகுதியில் உள்ள நான்கு வீடுகளுக்குள் கடந்த 26ஆம் திகதி அத்துமீறி நுழைந்த இருவர் அங்கிருந்தவர்களைத் தாக்கி அங்கிருந்த உடைமைகளையும் அடித்துச் சேதப்படுத்தினர். விடயம் தொடர்பாக நான்கு வீடுகளின் உரிமையாளர்களும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அந்த இருவரையும் கைது செய்த பொலிஸார் நேற்று நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

## நாற்றுக்களுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.1

அழிவடைந்த வயல்களுக்கு நெல் நாற்றுக்களை நடுவதில் சிரமம் ஏற்படுகிறது. நாற்றுக்கள் பெறுவதில் தட்டுப்பாடு நிலவுகிறது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

குடாநாட்டில் பெய்து வரும் மழை காரணமாக தென்மராட்சியில் சிறு வயல் வெளிகளில் உள்ள நெற்பயிர்கள் அழிந்துள்ளன.

குறிப்பாக மட்டுவில் ,சரசாலை, சரசாலை வடக்கு ஆகிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் மழைவெள்ளம் தேங்கி பயிர்கள் சேதமடைந்துள்ளன. இதனால் அழிவடைந்த நிலங்களில் விவசாயிகள் நெல் நாற்றுக்களை நட்டு வருகின்றனர். எனினும் போதியளவு நெல் நாற்றுக்களைப் பெறுவதிலும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என விவசாயிகள் தெரிவித்தனர். (21-131)

## தென்மராட்சி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான உதவிப் பொருள்கள் வழங்கப்படும்

சாவகச்சேரி, டிசெ.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் வாழ்வாதார உதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான உதவிப் பொருள்கள் இன்று காலை 8.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு மற்றும் தேசிய சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் ஆகியவற்றினால் வழங்கப்பட்ட 6 படகு வெளியிணைப்பு இயந்திரங்கள். 22 தையல் இயந்திரங்கள், பாக்கு வெட்டும் இயந்திரம், மென்பானக் குவளைகள் தயாரிக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரத்தின் குழாய்கள் உட்பட பல்வேறு பொருள்கள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலர் தே.பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்பட்டது. (எ.9)

## வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம் வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் ஜெ.தருமராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக சங்கானை கோட்டக்கல்வி பணிப்பாளர் றோபேட் உதயகுமார் கலந்துகொள்ளவுள்ளார் என பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது. (எ)

## வருமானப் பரிசோதகர் தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டம்

வடக்கு மாகாண வருமானப் பரிசோதகர் தொழிற்சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ.115)

இது புதுசு



ஆண்களுக்கான காலணிகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இ.போ.ச வின் போராட்டத்தால் ஏற்பட்ட வெற்றிடத்தில்

# போக்குவரத்தை 3 நாள்களும் திறம்படக் கையாண்ட தனியார்

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடக்கில் 3 நாள்களாக ஏற்பட்ட போக்குவரத்து நெருக்கடியைத் தனியார் பேருந்துகள் திறம்படச் சீர் செய்திருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

தனியார் பேருந்து புறக்கணிப்பு என்றால் அரச பேருந்துகளில் பயணிப்பது சிரமமாக இருக்கும் ஆனால் இம்முறை அதை உணர முடியவில்லை என்றனர் பயணிகள்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண பணியாளர்கள் கடந்த 3 நாள்களாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். அதனால் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பருவகாலச் சீட்டில் பயணிப்பவர்களே அதிகம் நெருக்கடிகளை எதிர்கொண்டனர். ஏனையவர்களால் வழக்கம் போலவே பயணிக்க முடிந்துள்ளது.

நெருக்கடியை இல்லாமல் செய்யவே அனைத்துப் பேருந்துகளும் களத்தில் இறங்கின என்று சாரதிகள் தெரிவித்தனர்.

"அகில இலங்கை போக்குவரத்துக் கழக வடக்கு மாகாண சங்கத்தின் கீழ் பதிவில் உள்ள 531 பேருந்துகளும் மக்களின் சேவைக்காக களமிறக்கப்பட்டன" என்று அதன் தலைவர் எஸ். சிவபரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது எமது சங்கத்தில் 531 பேருந்துகள் பதிவில் உள்ளன. நாளாந்தம் சராசரியாக 300 பேருந்துகளே சேவையில் ஈடுபடுவது வழமை. 3 நாள்களாக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனையடுத்து தனியார் பேருந்துகள் அனைத்தும் உடனடியாகவே களத்தில் இறக்கப்பட்டன.

அனைத்துப் பேருந்துகளும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது மட்டுமன்றி ஒரு சேவையில் ஈடுபட்ட பல பேருந்துகளுக்கு இரண்டு சேவைகளும் வழங்கப்பட்டு பணி இடம்பெற்றன. இதனால் பயணிகளின் நெருக்கடிகளை முடிந்த வரை தவிர்த்துள்ளோம்.

மாணவர்களின் பரீட்சைக் காலத்தைக் கருத்திற்கொண்டு மாணவர்களையும் உத்தியோகத்தர்களையும் ஏற்றியிறக்குவதில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் பணித்திருந்தோம் - என்றார்.

இது மட்டுமன்றி, "யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளும் தற்போது 10 நிமிடங்களுக்கு ஒருதடவை பேருந்துகளை பணியில் ஈடுபடுத்தியிருந்தோம். நாளாந்தம் 350க்கும் மேற்பட்ட பேருந்துகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன" என்று யாழ்ப்பாண மாவட்ட கூட்டிணைக்கப்பட்ட தனியார் பேருந்துகளின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் தற்போது 590 சிற்றூர்திகள் பதிவில் உள்ளன. வழமையாக நாள் ஒன்றுக்கு 200 தொடக்கம் 250 சிற்றூர்திகளே பணியில் ஈடுபடும். 3 நாள்களாக 350க்கும் மேற்பட்ட சிற்றூர்திகளைப் பணியில் ஈடுபடுத்தியிருந்தோம். சாதாரண நாள்களில் 15 நிமிடத்துக்கு ஒரு தடவை பேருந்து பணி இடம்பெறும். கடந்த சில நாள்களாக இலங்கைப் போக்குவரத்துச்சபையினரின் பணிப்புறக்கணிப்புக் காரணமாக 10 நிமிடத்துக்கு ஒரு தடவை பேருந்துகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன - என்றார். (4,101)

# தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிறு தினங்களில் மூடப்படும்

## நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்கிறார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கு மாகாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் பிற்பகல் 6 மணிக்குப் பின்னரும் காலை 6 மணிக்கு முன்னரும் செயற்படுவதை நிறுத்தவும் ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங்கவும் மிக விரைவில் நியதிச் சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங்க வேண்டும் எனவும் நேரம் தொடர்பாகவும் பலதரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தை நானும் வலியுறுத்துகின்றேன்.

எமது மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பெற்றோர்களின் முகங்களைக் கூடப் பார்க்க முடியாது தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்கின்றனர். வாரத்தில் விடுமுறையான தினமும் மாணவர்கள் ஒய்வு இல்லாது இவ்வாறு தனியார் கல்வி நிலையங்களுக்குள் இருப்பதை ஏற்க முடியாது. அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டில் இருந்து படிக்கின்றார்களோ, விளையாடுகின்றார்களோ எதுவாயினும் அவர்கள் வீட்டில் பெற்றோருடன் ஓய்வாக இருக்க வேண்டும். ஆகவே அன்றைய தினத்தில் எந்த வகுப்புகளையும் நடத்தத் தடை விதிக்கப்படும் வகையில் நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

> வாரத்தில் விடுமுறையான தினமும் மாணவர்கள் ஓய்வு இல்லாது இவ்வாறு தனியார் கல்வி நிலையங்களுக்குள் இருப்பதை ஏற்கமுடியாது.

நாம் கொண்டு வரவுள்ள நியதிச் சட்டத்தின் ஊடாக தனியார் கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்துவதுடன் மட்டுமல்லாது மாணவர்களுக்கான ஒழுக்கக் கோவையும் உருவாக்கப்படவுள்ளது. அவற்றின் ஊடாக எமது மாணவர்களின் ஒழுக்கம், கலாசாரம் பேண நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

இவை தொடர்பான கோரிக்கை ஒன்றை வடக்கு மாகாண சபையின் 93 ஆவது அமர்வில் சர்வேஸ்வரன் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# நோயாளர்கள் குவிவதனால் பார்வையிட வருவதை தவிருங்கள்

## யாழ். போதனா வைத்தியசாலை கோரிக்கை

வடக்கில் பருவமழை தற்போது ஆரம்பித்துள்ளதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனால் மருத்துவமனையிலுள்ள நோயாளர்களைப்பார்வையிடுவதை இயன்றளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மழையின் பின்னரான சூழ்நிலைகளால் போதனா மருத்துவமனையில் மிகுந்த நெருக்கடியான நிலையில் நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க வேண்டியுள்ளது. எனவே பொதுமக்கள் நோயாளிகளைப் பார்வையிட வருவதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். ஒரு நோயாளியைப் பார்வையிடுவதற்கு இருவர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

மகப்பேற்று விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட ஒருவருடன் ஒருவர் மாத்திரமே நிற்பதற்கு அனுமதிக்கப்படுவர். குழந்தைகள் பிறக்கின்றபோது மருத்துவமனைக்கு வருகைதந்து பார்வையிடுவதையும் இயன்றவரை தவிர்த்து வீடு சென்ற பின்னர் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமக்கள் நோயாளியைப் பார்க்க வரும் போது தாம் கொண்டுவரும் உணவு, உடை முதலான பொருள்களைக் கொடுத்துவிட்டு விரைவாக விடுதிகளை விட்டு வெளியேறி மருத்துவ சேவையை வழங்க ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் - என்றுள்ளது. (எ-4)



# சபை உறுப்பினர்களின் வரவு முழுமை இல்லாத நிலையில் வடக்கு மாகாண அமர்வுகள்

## சுட்டிக்காட்டுகிறது பேரவைச் செயலகம்

யாழ்ப்பாணம்.டிசெ.1

வடக்கு மாகாண சபை அமர்வுகள் வருடாந்தம் அதிகரிக்கின்றபோதும் உறுப்பினர்களின் வருகை என்பது ஆரம்பத்தில் இருந்து முழுமை இல்லாத நிலையிலேயே காணப்படுகின்றது என்று மாகாண சபை பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபை அமர்வுகளில் உறுப்பினர்களின் வருகை மற்றும் விடுப்புகள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கேட்கப்பட்ட கேள்விக்கே இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள நிறை குறைகளை தெரிவிக்கவும் தீர்மானங்களை நிறைவேற்றவும் அதன் ஊடாக முடிவுகளைப் பெறுவதற்கும் வடக்கு மாகாண சபை தோற்றம் பெற்றது. 2015ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சபை அமர்வு தொடக்கம் இதுவரை 110 அமர்வுகள் நடைபெற்றுள்ளன. நடைபெற்ற எந்தவொரு அமர்விலும் சபையின் உறுப்பினர்கள் முழுமையாகப் பங்குபற்றவில்லை. தனிப்பட்ட விடுப்புகள் காரணமாக சிலர் சபை அமர்வுகளுக்கு வருகை தரவில்லை.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற 23 அமர்வுகளில் உறுப்பினர்களின் வருகை 76 வீதமாகக் காணப்பட்டது. 2016ஆம் ஆண்டு 38 அமர்வுகள் நடைபெற்றன. இவற்றில் உறுப்பினர்களின் வருகை 72 வீதமாகக் காணப்பட்டது. 2017ஆம் ஆண்டு இதுவரை 49 அமர்வுகள் நடைபெற்றன. உறுப்பினர்களின் வருகை 76 வீதமாக காணப்படுகிறது. நடப்பு வருடத்தில் சிறப்பு அமர்வுகள் இடம்பெற்றமையால் அதிக எண்ணிக்கையான அமர்வுகள் நடைபெற்றன. ஆனால் சபை அமர்வுக்கு உறுப்பினர்களின் வருகை முழுமையாக இல்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

வடக்கில்

# முன்பள்ளி கற்பித்தலை ஊக்குவிக்க ஆலோசனைக் குழு

*மாகாண அமைச்சர் சபைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது*

யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகளின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கு மாகாண கல்வி அமைச்சால் 'முன்பள்ளி கல்வி ஆலோசனைக்குழு' உருவாக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 56 ஆவது அமைச்சர் சபைக் கூட்டத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

முன்பள்ளி ஆலோசனைக் குழு அமைக்க மாகாண அமைச்சால், அமைச்சர் சபையில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்கமைய 2015ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வடக்கு மாகாண முன்பள்ளி கல்வி நியதிச் சட்டத்தின் பகுதி 3இன் 8ஆம் இலக்கத்தின் படி மாகாணத்திலுள்ள முன்பள்ளிகள் அலகுக்கென முன்பள்ளி கல்வி ஆலோசனைச் செயற்குழுவை அமைச்சர் தலைமையில் நியமிக்க சபையில் தீர்மானிக்கப்பட்டது.

நடப்பு வருடத்தின் ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற அமைச்சர் சபைக் கூட்டத்தில் செயற்குழு பற்றிய விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அதன் பின்னர் செயற்குழு அமைப்பதற்கான தீர்மானங்கள் தற்போது நிறைவேற்றப்பட்ட நிலையில் செயற்குழுவின் வேலைகளை தொடர்வதற்கு வடக்கு மாகாண சபையின் அனுமதியைப் பெறுவதற்கு தற்போது அமைச்சர் சபை அனுமதி வழங்கியுள்ளது.

முன்பள்ளி ஆலோசனைக் குழு, முன்பள்ளிகளின் கற்றல் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்த உதவியாக அமையும். இதுவரை காலமும் கல்வி வலய மட்டத்தில் ஆசிரிய ஆலோசகர்கள் செயற்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-ரி)

## தனியார் பேருந்தை கடத்த முற்பட்டவர் வசமாக மாட்டினார்

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணிகளை ஏற்றி இறக்கும் சேவை யில் ஈடுபடும் தனியார் பேருந்தைக் கடத்திச் செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் பொம்மைவெளியைச் சேர்ந்த ஒருவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் வைத்து குறித்த பேருந்து மீட்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது: ஈ.ஆர்.7811 இலக்க மன்னார் மாவட்டத்துக்குச் சொந்தமான பேருந்து மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணிகளை ஏற்றி வந்தது. பயணிகள் அனைவரையும் யாழ்ப்பாணத்தில் இறக்கி விட்டு யாழ்ப்பாணம் முற்றைவெளிப் பகுதியில் பேருந்தை நிறுத்திவிட்டு சாரதியும் நடத்துநரும் மதிய போசனத்திற்காக உணவகம் ஒன்றுக்குச் சென்றனர். இதனை அவதானித்த பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த ஓர் இளைஞர் நிறுத்தி வைத்திருந்த குறித்த பேருந்தை திறப்பு இன்றி களவாடிச் சென்றார். சென்றநிலையில் சகதியில் பேருந்து புதையுண்டது. புதையுண்ட சமயம் அந்தப் பகுதியால் பயணித்த ஏனைய பேருந்து உரிமையாளர்கள் பேருந்தின் சாரதியோ அல்லது நடத்துநரோ இன்றி பிறிதொருவர் பேருந்தைச் செலுத்துவதைக்கண்டு சந்தேகமடைந்து சாரதிக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தபோதே சாரதி நிலமையை அறிந்து சம்பவ இடத்துக்கு ஓடிச் சென்றார். இதன்போது பேருந்தினை களவாட முயன்றவர் கையும் களவுமாக வகையாக மாட்டிக் கொண்டார். பொலிசாரை அழைத்துக் களவாட முயன்றவரை ஒப்படைத்தனர். பணம், நகை, சைக்கிள், மோட்டார் சைக்கிள் எனக் களவாடிய நிலையில் பட்டப்பகலில் பேருந்தையும் களவாட முயன்றமை யாழ்நகரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(எ-101)







# எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், டிசெ.1

பன்னாட்டு எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று விழிப்புணர்வு நடைபவனி நடத்தப்பட்டது.

பாலியல் தொற்று நோய் தடுப்பு சிகிச்சை பிரிவு மருத்துவர் பிரியந்த பட்டகல தலைமையில் நடைபவனி நடைபெற்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக ஆரம்பித்த நடை பவனி மின்சார நிலைய வீதியூடாகச் சென்று வேம்படிச் சந்தியை அடைந்து பின்னர் தாதியர் பயிற்சி கல்லூரியில் நிறைவடைந்தது. அங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றன.

“எமது நாட்டில் 4 ஆயிரத்து 200 பேர் வரையில் எச்.ஐ.வி தொற்றுடன் இருக்கலாம் என்று தொகையிடப்பட்டுள்ளது. அனைவரும் பரிசோதனைகள் செய்ய வேண்டும். பரிசோதனை தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை. பரிசோதனை மேற்கொள்பவர்களின் விவரம் முழுமையாக பாதுகாக்கப்படும். எச்.ஐ.வி. தொற்றுடையவர்களை பாகுபாடு காட்டாமல் பராமரிக்க வேண்டும்.” என்று மருத்துவர் பிரியந்த பட்டகல தெரிவித்தார்.





“எச்.ஐ.வி. தொற்றை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் நோயை முற்றாகக் கட்டுப்படுத்தி சுகதேகியாக வாழ்வதற்கான சிகிச்சை முறைகள் உள்ளன. தொற்றைக் கட்டுப்படுத்தி நீண்ட நாள் வாழ்வதற்குரிய சிகிச்சை முறைகளும் தற்போது உள்ளன. இலங்கை முழுவதும் எச்.ஐ.வி. தொற்றுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும், தடுக்கவும் போதிய வழிமுறைகள் உள்ளன. எச்.ஐ.வி. தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இது தொடர்பான பரிசோதனைகளைச் செய்துகொண்டு சுகதேகி என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். மக்கள் அது தொடர்பாக அச்சப்பட வேண்டியதில்லை. பொதுமக்கள் எச்.ஐ.வி. தொடர்பான முழுமையான விளக்கங்களை அறித்து வைத்துக் கொள்ள வேண்டும்” என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், பிரதி பணிப்பாளர், சுகாதார உதவி பணிப்பாளர், தாதியர்கள், மாணவர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், பிராந்திய சுகாதார சேவைத் திணைக்கள ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ற)

### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்

# 8 ஆயிரம் பேருக்கு எச்.ஐ.வி. பரிசோதனை

## தயக்கம் தேவையில்லை என்கிறது பாலியல் நோய் தொற்றுத் தடுப்புப் பிரிவு

யாழ்ப்பாணம்.டிச.1

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 8 ஆயிரத்து 094 பேருக்கு எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையை மேற்கொள்ள தயக்கம் எதுவுமின்றி துணிந்து முன்வாருங்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பாலியல் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு கோரியுள்ளது.

வடக்கில் இந்தத் தோற்றுக் காரண மாக இதுவரை 35 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று புள்ளி விவ ரங்கள் குறிப்பிடுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்துவது மிக அவசியம். அதனால் உங்களுக்கு இந்தத் தொற்று ஏற்பட்டிருக்கும் என்று நீங்கள் கருதினால் எந்த விதத் தயக்கமுமின்றி முன்வா ருங்கள் என்று தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு கோரியுள்ளது.

இதுதவிர, இது தொடர்பான புள்ளி விவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பாலியல் தடுப்பு நோய்ப் பிரிவு 2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியோரும் எச்.ஐ.வி பரிசோதனைக்கு ஓரளவு வருகை தந்து பரிசோதனை மேற்கொண்டனர். பின்னர் எச்.ஐ.வி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் சிலர் பரிசோதனை மேற்கொள்ள முன்வந்தனர். தற்போது படிப்படியாக பரிசோதனைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வசதி கருதி அனுராதபுர மருத்துவமனைக்கும் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்குச் செல்கின்றனர்.

விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலை, மற்றும் பொது அமைப்புக்களில் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 2 ஆயிரத்து 655 பேருக்கும், கர்ப்பிணித் தாய்மார்களின் வழமையான பரிசோதனையில் 4 ஆயிரத்து 307 பேருக்கும், இந்தியாவில் இருந்து வருகை தந்த 266 பேருக்கும், தாமாகவே முன்வந்து பரிசோதனை மேற்கொண்ட 35 பேருக்கும், கைதிகளின் மருத்துவ பரிசோதனையில் 219 பேருக்குமாக 8ஆயிரத்து 94 பேருக்கு எச்.ஐ.வி பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-ரி)

## புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரினது மறியல் மீள நீடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

அரியாலை மணியந்தோட்டம் பகுதியில் இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சிறப்பு அதிரடிப்படையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 14ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அரியாலை கிழக்கு மணியம்தோட்டம் வசந்தபுரம் 1ஆம் குறுக்கு வீதிப் பகுதியில் கடந்த ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி, 24 வயதுடைய டொன்பொஸ்கோ டினேசன் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாண தலைமையகப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் சிறப்பு அதிரடிப்படையின் புலனாய்வு அதிகாரி உள்பட இருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று இடம்பெற்றது. சந்தேகநபர்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மன்றில் முற்படுத்தப்பட்டனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் தொடர்வதாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டது. அதனால் சந்தேகநபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார்.

(எ-8)



## தாஜுதீனின் அலைபேசி ஆராயப்படுகிறது

கொழும்பு, டிசெ. 1
ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் அலைபேசி மற்றும் அழைப்புகள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.
அந்த விசாரணைகளுக்கான மேலதிக கால அவகாசம் தேவைப்படுவதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தார்.
இந்த வழக்கு, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜெயராம் ட்ரொஸ்கி முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்கண்ட அறிவிப்பு விடுக்கப்பட்டது.
கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருள்கள் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள வசீம் தாஜுதீனின் அலைபேசியைப் பரிசீலிப்பதற்காக பொலிஸ் கணினிப் பிரிவுக்கு அனுப்புவதற்கு உத்தரவிடுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம், கடந்த அமர்வில் அனுமதி வழங்கியிருந்த நிலையிலேயே மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.
மேலும், முன்னாள் பிரதான சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகரவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நாளொன்றுக்கு 6 மணித்தியாலங்கள் வரை வாக்குமூலம் பெறப்படுவதாகவும் அதை 3 மணித்தியாலங்களாகக் குறைக்குமாறும் சமரசேகரசார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி ஷாவேந்திர பெர்னான்டோ கோரினார்.
அதன்பின்னர், வழக்கின் தற்போதைய நிலை தொடர்பான மேலதிக விசாரணை அறிக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. வழக்கு ஜனவரி 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (5)

ஐ.நா. சபை

## தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள்

பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 1
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.
கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது, இந்த விவகாரத்தை தாம் எழுப்பியதாக, ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்தார்.
ஒக்ரோபர் மாதத் தொடக்கத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக்கு, மேற்கொண்டிருந்த பயணத்தின் போது, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்று அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவிடம் எடுத்துக் கூறியிருந்தேன்.
இராணுவத்தினர் வசமுள்ள அனைத்து தனியார் காணிகளையும் விடுவித்தல், காணாமற் போனோர் பணியகத்தைச் செயற்படுத்தல், பயங்கரவாத த்தடைச்சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியதாக அந்த வாக்குறுதிகள் அமைந்துள்ளன.
தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும், இலங்கையில் நல்லிணக்கம், மனித உரிமைகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளுக்கும் பிரிட்டன் தொடர்ந்து உதவும், என்றும் அவர் தெரிவித்தார். (5)

## பியரால் சபையில் மூண்ட சண்டை

நிதி மற்றும் ஊடக அமைச்சால் இன்று (நேற்று) வெளியிடப்பட்ட மதுவரி தொடர்பான வர்த்தமானியில் அரிசி, சோளம் மற்றும் பழங்கள் பியர் உற்பத்திக்கான மூலப்பொருள்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது அரிசித் தட்டுப்பாடு உள்ள நிலையில் பியர் உற்பத்திக்கு அரிசி பயன்படுத்தப்படுவது பாரதூரமான விடயமாகும். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் எமக்கு விவாதம் நடத்த அனுமதிக்க வேண்டும் என்று மகிந்த அணி கோரியது.
இதற்கு ஆளும் தரப்பினரும் ஆராய்ந்து பதிலளிப்போம் என்றதால், இரு தரப்புக்கும் இடையில் வாக்குவாதம் மூண்டது. நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை ஒழுங்குப் பிரச்சினையை மகிந்த அணிநாடாளுமன்ற உறுப்பினர் எழுப்பினார்.
'நிதி மற்றும் ஊடக அமைச்சால் இன்று (நேற்று) வெளியிடப்பட்ட மதுவரி தொடர்பான வர்த்தமானியில் அரிசி, சோளம் மற்றும் பழங்கள் பியர் உற்பத்திக்கான மூலப்பொருள்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. தற்போது நாட்டு மக்கள் மூன்று வேளை உண்ணுவதற்கு உணவின்றி வாடுகின்றனர்.
மேலும் தட்டுப்பாட்டினால் வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும் நிலையில் பியர் உற்பத்திக்கு அரிசி பயன்படுத்தப்படுவது பாரதூரமான விடயமாகும்- என்றார்.
சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, நாம் எந்த சந்தர்ப்பத்திலும் விவாதம் செய்வதற்கு தயாராக உள்ளோம். இது தொடர்பாக கட்சித் தலைவர் கூட்டத்தில் ஆராய்ந்து தீர்மானம் எடுப்போம் - என்றார். (5.31)

விளக்கமறியலிலுள்ள

# கொமடோர் தஸநாயக்கவுக்கு கடற்படையில் புதிய பதவி?



கொழும்பு, டிசெ. 1
ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமடோர் டி.கே.பி.தஸநாயக்கவுக்குப் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.
கடற்படையின் கோட்டையில் சிறப்புக் கடமைகளுக்குப் பொறுப்பாக எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.
கொழும்பில் வைத்து மாணவர்கள் உள்ளிட்ட 11பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நடைபெற்று வருகின்றது.
இந்த வழக்கில் கொமடோர் தஸநாயக்க உள்ளிட்ட 6 சந்தேக நபர்களும் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பிரதான சந்தேக நபரான ஹெட்டியாராச்சி பியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வருகின்றார்.
இவ்வாறானதொரு நிலையில் விளக்கமறியலில் உள்ள தஸநாயக்கவுக்கு கடற்படையில் புதிய பதவி வழங்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
குற்றச்சாட்டுத் தொடர்பில் கடற்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்படும் போது முதலில் அவர் பதவியில் இருந்து இடை நிறுத்தப்படுவார். அவருக்குச் சம்பளத்தில் அரைவாசியே வழங்கப்படும். கடற்படையினரால் அடிப்படை விசாரணை ஆரம்பிக்கப்படும். தஸநாயக்கா விடயத்தில் இந்த நடைமுறை எதுவும் பின்பற்றப்பட வில்லை என்று பாதுகாப்புத்துறையின் உயர் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். (5.31)

## இறம்பொடையில் பிரபல்யமான ஆலயம் தமிழர்களிடையே பாகுபாடு காட்டுகின்றது

மக்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 1
கண்டி-நுவரெலியா முதன்மை வீதியில் இறம்பொடையில் அமைந்துள்ள பிரபலமான ஆலயத்தில், பெருந்தோட்டத் தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள் என்று தமிழ் மக்களிடையே பாகுபாடு காட்டப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் மிகவும் சிறப்பாக அனைத்து த்தரப்பினரையும் ஒன்றிணைத்துச்செயற்பட்ட ஆலயமானது கடந்த சில மாதங்களாக மலையகப் பெருந்தோட்டத் தமிழர்கள் எனவும் யாழ்ப்பாணத் தமிழர்கள் எனவும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு ஒரு விதமாகவும் மலையகப் பெருந்தோட்டத் தமிழர்களுக்கு ஒரு விதமாகவும் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.
ஆலயங்களில் எந்தவிதமான பாகுபாடுகளும் இன்றி வழிபாடுகளும் ஏனைய விடயங்களும் நடைபெற வேண்டும் என்பதே நடைமுறை. ஆனால் ஆலய நிர்வாகத்தினர் ஏன் இப்படித் திடீரென்று செயற்படுகின்றனர் என்பது புரியவில்லை.
தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டிய இந்தக் காலகட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகளால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ் சுமத்தியுள்ளனர்.
"பெருந்தோட்டப் பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்த இந்த ஆலயத்தின் அனைத்து ஆயுட் கால உறுப்பினர்களுக்கும் எந்தவிதமான அறிவித்தலோ அல்லது எந்தவிதமான விடயங்கள் தொடர்பாகவுமோ அறிவிக்கப்படுவதில்லை" என்று பெயர் குறிப்பிட விரும்பாத ஆயுட் கால உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.
இந்த விடயங்கள் தொடர்பில் ஆலய நிர்வாகத்தின் பதில் கிடைக்கப்பெறவில்லை. (5)


மரண அறிவித்தல்கள்

திருமதி மரியம்மா (இரத்தினம்) அம்புறோஸ்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா (இரத்தினம்) அம்புறோஸ் நேற்று (30.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற அம்புறோஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற எடிசன் மற்றும் எட்வின் பீரிஸ், செலஸ், டெல்மினா ஆகியோரின் அன்புத் தாயும், இமெல்டா, செல்வநாயகி, ஜெனோவா, இராஜசேகரம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (01.12.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித செபமாலை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித செபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
அந்தோனியார் வீதி,
பண்டத்தரிப்பு.
தகவல்:
பேரன் (குயின்ரஸ்)
077 271 8424




பிறப்பு 06 . 11 . 1952
இறப்பு 30 . 11 . 2017

தம்பன் ஐயாத்துரை

காந்தி வீதி, துன்னாலை மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பன் ஐயாத்துரை 30.11.2017 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பன் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - இலஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஜனிகாந்தன் (இ.போ.ச.நடத்துனர் பருத்தித்துறை சாலை) அன்புத் தந்தையும், செந்தினியின் அன்பு மாமனும், ரஜந்தன் (மாணவன் நெல்லியடி மத்திய கல்லூரி), கஜிந்தன (மாணவன் நெல்லியடி மத்திய கல்லூரி), கிஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2017) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
காந்தி வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
தகவல்
ரஜனிகாந்தன் (மகன்)
076 798 6257

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த (02.11.2017) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் கறுப்பையாதேவர் சிவலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (01.12.2017) வெள்ளிகிழமை காலை 7.00மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 03.12.2017 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்திகேட்டு எமக்குப் பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும், நேர் முகத்திலும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும்,தொலை தூரங்களிலிருந்து அன்னாரைத் தேடிவந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி னோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் 31 ஆம் நாள் நினைவுதினமான இன்று அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இந்த அழைப்பைத் தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இராமநாதன் லேன்,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24.02.1985

ஆண்டவன் அடியில் 01.12.2016



## அமரர் சச்சிதானந்தம் கஜந்தன்

திதி: பூர்வபட்ச துதியை



பாதி வழியில் நீ எமை விட்டுச் சென்றாயே
பதை பதைத்து துடிதுடித்துப் போனோமே
தனிமையில் நாம் உனை நினைத்து
வாய்விட்டு புலம்புவதை யாரறிவார்
கண்மணியே! என உனைக் கருவில் சுமந்தவள்
எந்நாளும் வாய்விட்டு கதறுவது கேட்கவில்லையா?
உம் ஆத்ம சாந்திக்காக இறைவனை
வேண்டி நிற்கின்றோம்.

இல.49, வன்னேரிக்குளம், கிளிநொச்சி.

குடும்பத்தினர்.
077 085 8242

# 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## தேவசுதா (நதியா) வடிவேற்கரசு (வைத்தீஸ்வரன்)



மலர்வு 02.02.1987
உதிர்வு 01.12.1998

திதி : 01.12.2017
(கார்த்திகை பூர்வபக்க திரயோதசி)

உன் உயிர் பிரிந்து, ஆண்டுகள் 19 ஆனாலும்
என்றும் உன் நினைவுகளுடனே,
உயிர் வாழ்வேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

அம்மா
செல்வராணி வடிவேற்கரசு
(வைத்தீஸ்வரன்)
'சித்தம்பாதி'
கரணவாய் தெற்கு,
கரவெட்டி

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 12 . 1935



மறைவு 17 . 11 . 2002

அமரர்

## சுப்பிரமணியம் கந்தசாமி

சா/ இந்து ஆரம்ப பாடசாலை
ஓய்வு பெற்ற ஆசிரியர்
திதி : திரியோதசி

இரு கைகள் தாண்டியும் இருதயம் தைக்கும் வலி
இறைவன் எமக்களித்த வரத்தை இயற்கை
பறித்தெடுத்த தேனோ? நீங்கள் போன வழி
அறியாது விழி கனத்து நிற்கின்றோம்.
பதினைந்து ஆண்டுகளாய் வற்றாத கண்ணீர்
அருவிகளுடன்

4ம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# நீங்கா நினைவுகள்

31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு — 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





திருமதி மாணிக்கம் சின்னமணி
தோற்றம் 27.11.1941
மறைவு 01.11.2017

செல்வி மாணிக்கம் சுமதி
தோற்றம் 21.12.1970
மறைவு 05.08.1990

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

01.10.2017 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் மாணிக்கம் சின்னமணி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.12.2017) வெள்ளிக்கிழமை நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அந்நாளில் அமரர் மாணிக்கம் சுமதி அவர்கள் வீரச்சாவடைந்த 27 ஆம் ஆண்டு நிறைவையும் நினைவு கூருகின்றோம்.

வராத்துப்பளை, பருத்தித்துறை.
077 283 3155

க.மாணிக்கம்
குடும்பத்தினர்.

## ஐ.நா. பணிக்குழு இலங்கை வருகிறது

தன்னிச்சையான தடுத்து வைப்புகள் தொடர்பான, ஐ.நா. பணிக்குழு அடுத்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழுவின் மூன்று உறுப்பினர்கள், இலங்கையில் எதிர்வரும் 4ஆம் நாள் தொடக்கம் 15ஆம் நாள் வரை தங்கியிருந்து மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஜோஸ்அன்ரனியோ குவேரா பேர்முடாஸ், லேஹ் ரூமி, எலினா ஸ்டரெய்னோர்ட் ஆகியோரே வரவுள்ளனர்.

இவர்கள், சிறைச்சாலைகள், பொலிஸ் நிலையங்கள் போன்ற தடுப்பு மையங்கள், இளைஞர் நிறுவகங்கள் மற்றும் உளவியல் குறை பாடுள்ளவர்களையும் சந்திக்கவுள்ளனர்.

இவர்கள் தமது பயணத்தின்போது மேற்கொண்ட மதிப்பீடுகள் குறித்து வெளிப்படுத்தும் செய்தியாளர் சந்திப்பை டிசெம்பர் 15ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க நினைவு மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இலங்கைப் பயணம் குறித்த இந்தக் குழுவின் இறுதி அறிக்கை, 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (5)

# அரசுக்கு அடுத்த தலையிடி

## அரச மருந்தாக்க கூட்டுத்தாபனம் தொழிற்சங்க நடவடிக்கைக்கு எச்சரிக்கை

அரச மருந்தாக்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படாதவிடத்துத் தொழிற் சங்க. நடவடிக்கையில் இறங்கவுள்ளதாக அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத் தொழிற்சங்க ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரச மருந்தாக்க கூட்டுத்தாபனம் கடந்த் ஆண்டு ஆயிரத்து தொள்ளாயிரம் மில்லியன் ரூபா இலாப மீட்டியது. இதேவேளை அரச மருந்தாக்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் அந்த இலாபத்தில் பங்கு வழங்கப்படுமெனச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார். அது இன்னமும் வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் அரச மருந்தாக்க கூட்டுத்தாபன ஊழியர்கள் தற்போது எழுபது சதவீதச் சம்பள உயர்வுக் கோரிக்கையை விடுத்துள்ளனர். ஆனாலும், 30 சதவீத சம்பள உயர்வை மட்டுமே வழங்க முடியுமெனத் திறைசேரி தெரிவித்துள்ளது.

தமது கோரிக்கை நிறை வேற்றப்படாதவிடத்து தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத் தொழிற்சங்க ஒன்றியம் எச்சரித்துள்ளது. (5.31)


### வரன் தேடுவோம் வாழ்வில் மாற்றத்தை காண வாருங்கள்

2017 மார்கழி 01.02.03 (வெள்ளி.சனி.ஞாயிறு) ஆகிய தினங்கள் மட்டும் பதிவுகள் இலவசம் பதிவு செய்ய தேசிய அடையாள அட்டை ஜாதகக்குறிப்பின் பிரதி. புகைப்படம் என்பவற்றை வழங்கி பதிய முடியும்.

**நேரம் :- காலை 9.00 - மாலை 4.00 வரை**

**நேரில் வாருங்கள் மாற்றத்தை காணுங்கள்.**

**கௌசிகா திருமண சேவை**

169. பிரதான வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய்.

(அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்.


### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் பிற்போடல்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் 2018/2019 ஆம் ஆண்டிற்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 02.12.2017 நடைபெறவிருந்தது தவிர்க்க முடியாத காரணத்தினால் இக்கூட்டம் பிற்போட ப்பட்டுள்ளது. இக்கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்க ப்படும் அனைத்து பெற்றோர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

ஐ.தயானந்தராஜா
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி


### பிரத்தியேக வகுப்புக்கள்

மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப **தரம் 06 - O/L கணிதம், வரலாறு** வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து தனியாகவோ, குழுவாகவோ ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும்.

தொ.பே.: 077 968 2097

### விற்பனைக்கு

Lumala பெண்கள் சைக்கிள், கண்ணாடி சாப்பாட்டு மேசை, உடற்பயிற்சி இயந்திரம் (Orbitat Elite) விற்பனைக்கு உண்டு. **T.P:- 076 660 4584**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



10.30 AM / 1.30 / 4.30 / 7.30 / 10.00 PM



10.30 AM / 1.30 / 4.30 / 7.30 / 10.00 PM



10.30 AM / 1.30 / 4.30 / 7.30 / 10.00 PM

விசாரணை ☎ 021- 2227712

MajesticCineplexSL
www.ceylontheatres.lk


### ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

*நகராட்சி மன்றம் வவுனியா*

வட்டாரம் : 03 வீதி :- ஹொரவப் பொத்தானை வீதி
ஆதன இலக்கம் :- 294,296,298, 298/1
ஆதன விவரம் :- 294 - ஓடிட்ட வீடும் நிலமும்
296 - ஓடிட்ட வீடும் நிலமும்
298 - கன்னார்த்தகடிட்ட வீடும் நிலமும்
298/1 - தகரக்கூரையிட்ட வீடும் நிலமும்

வவுனியா நகராட்சி மன்ற எல்லைப் பிரதேசத்துக்குள் அமைந்துள்ள மேற்காட்டப்பட்ட ஆதனங்கள் அனைத்தும் எமது நகராட்சிமன்ற ஆதனவரிப் பதிவேட்டில் எஸ்.பஸ்தியாம்பிள்ளை இராக்கினி அம்மா என்ற பெயரில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனங்களுக்குத் தனது பெயரை உட்புகுத்துமாறு சுந்தரலிங்கம் மேரி எலிற்ரா என்பவர் " கண்காணித்தீவு" வளவு இல 294, ஹொரவப்பொத்தானை வீதி, இறம்பைக்குளம், வவுனியாவைச் சேர்ந்த இராசநாயகம் மேரி விக்ரரின் ஆகிய தனது தாயின் மூலம் 2014.10.27 ஆம் திகதி சட்டத்தரணி குரூஸ் றோயிஸ் றெஜி அவர்களால் எழுதப்பட்ட இல. 2078 வெளிப்படுத்தல் நன்கொடை உறுதி மூலம் விண்ணப்பித்துள்ளார். இவ் உறுதியின் கீழ்க் கண்டவாறு சில வெளிப்படுத்தல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் ஆதனம் 1992ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15 ஆம் திகதி வவுனியா பிரசித்த நொத்தாரிசு நற்குணம் மசினட் சேவியர் சொர்ணபாலா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6192 ஆம் இலக்க நன்கொடை உறுதிப்படி எனது பெறாமகனாகிய காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை அன்ரன் அவர்களின் ஆட்சியும் சொந்தமுமாகியதென்றும் காலஞ்சென்றவர் 2011 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் திகதி வவுனியா புனித அந்தோனியார் ஆலய அருட்தந்தை அவர்கள் முன்னிலையில் அவர்கட்கு கொடுத்த வாக்குறுதி பிரகாரம் பஸ்தியாம்பிள்ளை அன்ரன் அவர்களின் இறப்பின் பின்னர் இவ் வாதனம் எனது ஆட்சியின் சொந்தமாகியதென்றும் வெளிப்படுத்தி இந் நன்கொடை உறுதி முடித்துக் கொள்கின்றேன் என்ற விவரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

மேற்குறித்த வெளிப்படுத்தல் நன்கொடை உறுதியில் குறிப்பிட்ட ஆதனமானது வட மாகாணம் வவு னியா மாவட்டம். வவுனியா தெற்கு தமிழ் பிரதேச செயலாளர் பிரிவு கிழக்கு மூலை தெற்கு. வவுனியா நகரட்சி மன்றம் பகுதியில் இல.244A இறம்பைக்குளம் கிராம சேவை அலுவலர் பகுதி யில் இறம்பைக்குளம் கிராமத்தில் ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள காணித்துண்டு இதன் விஸ்தீரணம் இரண்டு றூட் எட்டு பேர்ச்சஸ் (2R 8P) இதன் எல்லைகள் வருமாறு.

**வடக்கு** - ஹொரவப்பொத்தானை வீதி **கிழக்கு** - சார்ஜன் போலின் ஆதனம்
**மேற்கு** - பல்கரியாவின் உரிமையாளரின் ஆதனம் **தெற்கு** - V.வேதநாயகத்தின் ஆதனம்

இதில் கிழக்குப் பக்கமாகப் பிரிக்கப்பட்டதான மூன்றில் ஒரு பங்கு 1/3 ஆதனம் இதன் எல்லைகளாவன

**வடக்கு :** ஹொரவப்பொத்தானை வீதி **கிழக்கு** - சார்ஜன் போலின் ஆதனம்
**மேற்கு :** சீனிவாசகம் சொலமனின் ஆதனம் **தெற்கு:**-V.வேதநாயகத்தின் ஆதனம்

இவ் எல்லைப்படி இது முழுவதும் இதற்குரியவைகளாகும். உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.N.ஜெகதீஸ்வரன் அவர்களால் 24.02.2015 ஆம் ஆண்டு அளந்து தயாரிக்கப்பட்ட 0085115 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள குருமன்காடு இறை நிலத்தின் அளவுப் பிரமாணம் றூட் 35 பேர்ச் 42 உம் அதற்குரியவைகளும் எல்லைகளாக **கிழக்கு** L.F.நடேமூர்த்தி. A.ஜேசுமாலா. J.பத்மஜோதி என்பவர்களின் ஆதனம் **வடக்கு** - ஹொரவப்பொத்தானை வீதி. **மேற்கு** - A.யேசுமலர். J.பத்மஜோதி. V.வேதநாயகம் என்பவர்களின் ஆதனம். **தெற்கு** - S.சொலமன் என்பவரின் ஆதனமுமாகும்.

எனவே மேற்குறித்த ஆதனத்தை தற்போது உரிமை கோருபவரான "கண்காணிவளவு" இல.294. ஹொரவப்பொத்தானை வீதி. இறம்பைக்குளம். வவுனியாவைச் சேர்ந்த சுந்தரலிங்கம் மேரி எலிற்ரா (அ.அ.இல: 726503487V) என்பவர் தனது பெயருக்கு உரிமை மாற்றம் செய்யுமாறு (ஆதன இடாப்பில் குறிப்பிடப்பட்ட பெயரான S.வ்ஸ்தியாம்பிள்ளை இராக்கினி அம்மா என்ற பெயரி லிருந்து சுந்தரலிங்கம் மேரி எலிற்ரா என்ற பெயருக்கு மாற்றம் செய்யுமாறு நகராட்சிமன்றத்திடம் கோரிக்கை விடுத்து விண்ணபித்துள்ளார்.

இப்பெயர் மாற்றம் தொடர்பாக வவுனியா நகராட்சிமன்றமானது பரிசீலனை செய்துள்ளதுடன் குறித்த பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை பாராட்டுபவர்கள் எவராவது இருந்தால் இப்பத்திரிகையில் ஆதனவரி அறிவித்தல் பிரசுரித்த நாளிலி ருந்து 30(முப்பது) நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட் சேபனை தெரிவிக்கவோ அல்லது உரிமை கோரவோ இல்லையெனில் குறித்த ஆதனமானது கண் காணி வளவு இல.294, ஹொரவப்பொத்தானை வீதி. இறம்பைக்குளம். வவுனியாவைச் சேர்ந்த சுந்தரலிங்கம் மேரி எலிற்றா எனும் பெயருக்குப் பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

எதிர்காலத்தில் மேற்குறித்த பெயர்மாற்றத்தினால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளுக்கும் வவுனியா நகராட்சிமன்றம் பொறுப்பாளியாகமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்.நகராட்சிமன்றம், வவுனியா.


AgoySoft




Our Services

- Custom Software Development
- Web Development
- Web Designing
- Web Applications
- Mobile App Development
- SEO
- E-Marketing
- Technivcal Support

info@agoysoft.com
273,Aadiyapatham Road,Kokuvil
Fb.com/agoysoft
021 205 2393

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு
அசத்தலான தள்ளுபடி

**05.12.2017 தொடக்கம்**
**15.01.2018 வரை**



சிறுவர்களுக்கான ஆடை தினுசுகள்
பெண்களுக்கான சாறிகள், சல்வார்கள்,
பிளவுஸ், Top கள் மற்றும்
அனைத்து விதமான
ஆடைகளையும்
ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங்
அனைத்து ஆடைகளையும்
ஒரே கூரையின்
கீழ் பெற்றுக் கொள்ளலாம்.




**ஸ்ரீ லலிதா பெஷன்**
இல.165, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**லலிதா ரெக்ஸ்**
இல. 5,6 நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

021 222 5260

Facebook : UTHAYAN_PRINT
Twitter : UTHAYANPRINT

# இரண்டாக உடைந்தது விமல் வீரவன்ச அணி



கொழும்பு, டிசெ. 1
தேசிய சுதந்திர முன்னணி பயங்கரவாத அமைப்பாக மாறியுள்ளது. கட்சியின் செயலர் விலகவில்லை. அவரைப் பலாத்காரமாக விலகவைத்தனர்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் பியசிறி விஜய நாயக்க தெரிவித்தார்.

கம்பகாப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய சுதந்திர முன்னணியில் நான் வகித்து வந்த தேசிய அமைப்பாளர் பதவி, கட்சியின் மையக் குழு உறுப்பினர் பதவி, அரசியல் சபை உறுப்பினர் பதவி உட்படக் கட்சியில் எனது உறுப்புரிமை என்பவற்றை நிறுத்தியுள்ளதாகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

என்னை இடைநிறுத்திய இவர்களின் செயற்பாடானது தவறாகும். கட்சியின் அரசியற் சபையின் கூட்டுப்பொறுப்பின் அடிப்படையில் செயற்பட்டு இவர்கள் இந்தக் கடிதத்தை எனக்கு அனுப்பவில்லை.

இதற்கு முன்னர் கட்சியில் இருந்த நந்தன குணதிலக்க, அச்சல சுரங்க ஜாகொட, கமல் தேசப்பிரிய ஆகியோருக்குச் செயற்பட்டதைப் போன்று எனது விடயத்தில் செயற்படவில்லை. இவர்கள் கட்சியின் அடிப்படை விதிமுறைகளை மறந்து இவ்வாறான கடிதம் அனுப்புவதென்பது தேசிய சுதந்திர முன்னணி திரிவுபடுத்தப்பட்ட கட்சியாக மாறி இருப்பதை உணர்த்துகின்றது.

கட்சியின் தலைவர் விரிவான குற்றப்பத்திரிகை எனக்கு அனுப்பாமல் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கி, என்னுடைய அறிவிப்புக்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமானால் அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். கட்சியின் செயலர் அண்மையில் அந்தப் பதவியில் இருந்து விலகினார். அவர் விலகவில்லை. அவரை விலகுமாறு தெரிவித்து உதேஷான்த்த குணசேகர, நிமல் பியதிஸ்ச குழுவினர் அரசியல் சபைக் கூட்டத்தின்போது தாக்க முற்பட்டுள்ளனர். அவரை அச்சுறுத்தியே பலாத்காரமாக அவரிடமிருந்து பதவி விலகற் கடிதத்தை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதன் உண்மை நிலையை செயலர் மக்களுக்கு தெரிவிக்கவேண்டும். அத்துடன் தேசிய சுதந்திர முன்னணியின் நடவடிக்கைகள் கட்சியின் யாப்புக்கு முரணாகவே இருக்கின்றன.

கட்சி இன்று பயங்கரவாத அமைப்பாக மாறியுள்ளது - என்றார்.

**பின்னணி**

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் நாடாளுமன்றத்தின்மீது குண்டுபோட்டாவது அதனைத் தடுப்போம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார். இது அவரது தனிப்பட்ட கருத்து என்றும் கட்சியின் கருத்தல்ல எனவும், அவ்வாறு விமல் தெரிவித்தது தவறு என்றும் தேசிய அமைப்பாளர் பியசிறி செய்தியாளர் சந்திப்பில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து விமலின் கட்சிக்குள் மோதல்கள் வெடித்தது. பியசிறிக்கு ஆதரவாகக் கட்சியின் செயலர் செயற்பட்டிருந்த நிலையில் கடந்த வாரம் அவர் பதவி விலகுவதாக அறிவித்திருந்தார்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே அவர் பதவி விலகுவதாகக் கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து (ஜே.வி.பி), மகிந்த ஆட்சிக் காலத்தில் 2006 ஆம் ஆண்டு விமல் வீரவன்ச பிரிந்து சென்று தேசிய சுதந்திர முன்னணியை உருவாக்கியிருந்தார். (5.31)

## முஸ்லிம்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பயங்கர ஆயுதங்கள்

### பொதுபலசேனா புதுக் குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 1
பன்னாட்டு இஸ்லாமியப் பயங்கரவாதிகளின் ஆயுதங்கள் இலங்கைக்குள் வந்துள்ளது. இலங்கையில் கைத்துப்பாக்கிக்கே அனுமதியில்லாத நிலையில் மோசமான ஆயுதங்கள் எவ்வாறு முஸ்லிம் நபரின் கைகளுக்குக் கிடைத்தது.

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெளிநாட்டில் இருந்து மிகவும் பயங்கரமான ஸ்நைப்பர் ரக இயந்திரத் துப்பாக்கி நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. முஸ்லிம் நபர் ஒருவரே இந்தத் துப்பாக்கியைப் பெற்றுள்ளார். இது தொடர்பில் சகல தகவல்களும் எம்மிடம் ஆதாரத்துடன் உள்ளது. பாதுகாப்பு அமைச்சைத் தாண்டி எவ்வாறு இந்தத் துப்பாக்கி இலங்கைக்குள் அனுமதிக்கப்பட்டது?

இலங்கையில் சாதாரண கைத்துப்பாக்கி பயன்படுத்தவே அனுமதி இல்லாத நிலையில் இவ்வாறான மோசமான துப்பாக்கி எவ்வாறு அனுமதிக்கப்பட்டது. இந்தத் துப்பாக்கி மூலமாக வெடிச்சத்தம் கேட்காது சுடும் சில கருவிகளும் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனைப் பயன்படுத்தி யாரை வேண்டும் என்றாலும் இலக்கு வைக்க முடியும். அரச தலைவர்களை, அரசியல் வாதிகளை, முக்கிய பிரமுகர்களை, வியாபாரிகளை என எவரையும் சுட முடியும். இது சாதாரண விடயம் அல்ல. எம்மைக்கூட இலக்கு வைக்கக் கூடும் என்ற அச்சமும் உள்ளது. இந்த நாட்டில் பல்வேறு இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் உள்ளன. நாம் இந்த நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாத செயற்பாடுகள் குறித்துத் தொடர்ச்சியாக அடையாளப்படுத்திவருகின்றோம். எம்மைப்போன்ற நபர்களைக் கூட கொலை செய்ய வாய்ப்புக்கள் உள்ளது. அரசு இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும். சாதாரண விடயமாக இவற்றைக் கருதக்கூடாது. உலகத்தில் இன்று இடம்பெறும் சம்பவங்கள், இஸ்லாமிய பயங்கரவாத செயற்பாடுகளின் காரணமாக இடம்பெறும் அழிவுகள் அனைத்தையும் நாம் அறிந்துள்ளோம். அவ்வாறு இருக்கையில் இலங்கையிலும் அவ்வாறன ஒரு சூழலை உருவாக்க எவரும் இடமளிக்கக் கூடாது - என்றார். (5.31)

## 19.35 மில்லியன் யூரோ கடன்தரும் ஆஸ்திரியா

ஆஸ்திரிய அரசு இலங்கைக்கு 19.35 மில்லியன் யூரோ வட்டியில்லாக் கடன் வழங்க முன்வந்துள்ளது.

கட்டுநாயக்கப் பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தைத் தரமுயர்த்தல் மற்றும் அரச மருத்துவமனைகளுக்கு நோயாளர் காவு வண்டி (அம்புலன்ஸ்) கொள்வனவுக்கு பயன்படுத்தப்படவுள்ளது. கடன் உதவி தொடர்பான ஒப்பந்தம் நிதி மற்றும் ஊடக அமைச்சின் செயலர் ஆர்.எச்.எஸ் சமரதுங்கவிற்கும் ஆஸ்திரியத் தூதரகத்தைச் சேர்ந்த பிரதி வர்த்தக கவுன்சிலர் சிக்பிரட் விட்லெசிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5.31)

## ரணிலுடன் ரணசிங்க நேரில் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 1
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்கவுக்கும் இடையில் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. கடற்படைத் தளபதியாக சிரிமேவன் ரணசிங்க பதவியேற்ற பின்னர் முதன்முறையாகத் தலைமை அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சந்திப்பின் போது புதிய கடற்படைத் தளபதிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நினைவுச்சின்னத்தையும் வழங்கியிருந்தார். இலங்கைக் கடற்படையினரின் செயற்பாடுகள் மற்றும் கடற்படையைப் பலப்படுத்த அரசால் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் மற்றும் உதவிகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப் பட்டது. (5.31)

## 850 பௌத்த விகாரைகளுக்கு 425 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, டிசெ. 1
நாடு முழுவதிலும் உள்ள 13 ஆயிரம் மதத் தலங்களைப் பேணிப்பாதுகாத்துப் பராமரிக்கும் அபிவிருத்தி நடவடிக்கையின் இரண்டாம் கட்ட நிகழ்வு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெறவுள்ளது. மத்திய கலாசார நிதியத்தின் பங்களிப்புடன் இடம்பெறும் இந்தத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வை மையப்படுத்தி 850 பௌத்த விகாரைகளைப் பராமரிப்பதற்கு 425 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் காணப்படும் பௌத்த விகாரைகள் மட்டுமன்றி, ஏனைய மத வழிபாட்டுத் தலங்களையும் மறுசீரமைத்துப் பக்தர்கள் தமது மத ரீதியான கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு வழிசெய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (5.31)

# இனங்கள் ஒவ்வொன்றும் மற்றைய இனத்தை சந்தேகத்துடனேயே பார்வை

### ஜே.வி.பியின் சுனில் எம்.பி. கவலை



கொழும்பு, டிசெ. 1
எமது நாட்டில் ஓர் இனம் மற்றைய இனத்தின் மீது நம்பிக்கையற்றுக் காணப்படுகின்றது. இப்போதும் இந்த நிலைமையே இருக்கின்றது. இவ்வாறு கவலை வெளியிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, எமது முன்னணியின் கடைசி உறுப்பினரின் இறுதி மூச்சு உள்ளவரை நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்க மாட்டோம் என்றும் குறிப்பிட்டார்.

சோசலிச இளைஞர் சங்கத்தால் 'பலஸ்தீனத்தைச் சுதந்திரமாக வாழவிடு' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடுசெய்யப்பட்ட பலஸ்தீன நட்புறவு தினம் நவம்பர் 29, கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இறப்பு உண்டு. அது இயற்கையானதாக இருக்க வேண்டும். செயற்கையாக இருக்கக் கூடாது. அதிகார வர்க்கத்தினரது திட்டமிடப்பட்ட போரினால் எவரும் உயிரிழக்கக் கூடாது.

அது பலஸ்தீனமாக இருக்கலாம். இலங்கையாக இருக்கலாம். உலக வரைபடத்தில் எந்த நாடாகவும் இருக்கலாம். உலகில் எங்குமே செயற்கையாக உயிரிழப்பு ஏற்படக்கூடாது.

அரசியல் வேலைத்திட்டங்களுக்காக, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போர் நடத்தக் கூடாது.

மக்களாட்சியையும், சுதந்திரத்தை நிலை நிறுத்துவதற்காக நாம் போராடுவோம். பலஸ்தீனம், கியூபா, வெனிசுலா போன்ற நாடுகளுக்கு நாம் ஆதரவு வழங்குவோம். இது அமெரிக்க மக்களுடனான பிரச்சினை அல்ல. அந்த நாட்டு அரசுடனான பிரச்சினை. உலகில் போர் காணப்பட்டால், தமது ஆயுத வியாபாரத்தை மேற்கொள்ள முடியும். இதன் மூலம் ஆயுதங்களை, வெடி குண்டுகளை விற்கலாம். இதற்குப் பலிக்கடாவாக ஆகுவதற்கு அப்பாவி மக்கள் உலகில் பலர் காணப்படுகின்றனர். இந்த உயிரிழப்புக்கள் இயற்கையானவை அல்ல. இதற்காக மில்லியன் கணக்கான பணம் செலவிடுகின்றது. ஓர் உயிரைப் பறிப்பதற்குப் பணம் செலவிடுகிறது.

எமது நாட்டில் போர் நிறைவடைந்துள்ளது. மீண்டுமொரு போரை மக்கள் விரும்பவில்லை. எனினும் அரசியல்வாதிகள் அவ்வாறானதொரு நிலை தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். அதற்கு மக்கள் இடமளிக்கக் கூடாது.

நாங்கள் பிறப்பின் போது சுதந்திரமானவர்கள். ஆனால் அவற்றை மாற்றி வைப்பவர்கள் அதிகார வர்க்கத்தினராகும். அது அவர்களின் தந்திரமாகும். எமது இனங்களுக்கிடையே பிளவுகள், பிரிவுகள் ஏற்படாமல் இருப்பது நல்லது. மக்கள் விடுதலை முன்னணியின் கடைசி உறுப்பினரின் இறுதி மூச்சு உள்ளவரை நாட்டைப் பிரிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை - என்றார். (5.31)

# கொட்டித் தீர்க்கின்றது கனமழை 7 பேர் சாவு; 20,000 பேர் பாதிப்பு

## உடனடியாக ரூபா 10 ஆயிரம் வழங்க அரசு பணிப்பு

யாழ்ப்பாணம்.டிசெ.1

நாட்டில் தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளனர். 4 ஆயிரத்து 886 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

நாட்டின் பல பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்துவருகின்றது. வெள்ளத்தாலும், மண்சரிவாலும் மக்கள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

இடர் உதவிப் பணிகளுக்காக முப்படையினரின் உதவிகளைத் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார். தென் கொரியா பயணம் மேற்கொண்டுள்ள அவர் தொலைபேசி மூலம் இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அரச தலைவர் செயலாளருடன் தொடர்புகொண்டு இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 10 ஆயிரம் ரூபா உதவி நிதியை வழங்க தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சீரற்ற காலநிலையால் 18 ஆயிரத்து 781 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 26 பேர் காயமடைந்துள்ளனர். 5 பேர் காணாமல்போயுள்ளனர். பாதிக்கப்பட்ட 179 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 36 பேர் 9 தற்காலிக அமைவிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 202 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 3 ஆயிரத்து 250 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேல் மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம், ஆகிய மாகாணங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை விடப்பட்டது. திட்டமிடப்பட்டிருந்த இறுதித் தவணைப்பரீட்சைகள்யாவும்பிற்போடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்திருந்து.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, நுவரேலியா, பதுளை, மொனராகலை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் பெங்களூரில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் நோக்கி வந்த இரண்டு விமானங்கள் காலநிலை சீரின்மையால் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்துக்கு திருப்பப்பட்டன.



மலையத்தில் பெய்துவரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் மிக வெகுவாக உயர்ந்துள்ளது. கொத்மலை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டால் கொழும்பு பதுளை வீதியில் போக்குவரத்து·நெரிசல் ஏற்பட்டது என்று தெரியவருகின்றது.

அக்கரப்பத்தனையில் மரம் சரிந்து விழுந்ததில் தொலைத் தொடர்பு நிலையமும், தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றும் சேதமடைந்தன. பல பகுதிகளுக்கான தொலைபேசித் தொர்புகள் பாதிக்கப்படுள்ளன. டயமகவில் மரம் சரிந்து விழுந்ததில் 3 வீடுகள் சேதமடைந்தன. மின்சார இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டன.

சீரற்ற காலநிலை குறித்து மக்கள் அனாவசியமாக அச்சமடையத் தேவையில்லை தேசிய இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா அறிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அது தொடர்பில் 1902 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு உடனடியாக அறிவிக்க முடியும் என்று உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன அறிவித்துள்ளார். பாதிப்புக்கள் இருக்குமாயின் அது தொடர்பில் கிராம உத்தியோகத்தர்களுக்கு முதலில் அறிவிக்கவேண்டும். உதவிகள் உடனடியாக வழங்கப்படும் என்பதுடன் இழப்பீட்டையும் உடனடியாக வழங்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.


இலங்கைக்குத் தென்மேற்குத் திசையில் வங்கக் கடலில் ஏற்பட்டிருக்கும் தாழமுக்கம் நாட்டைவிட்டு விலகிச் செல்கின்றது என்றும், இன்று மாலை மழைவீழ்ச்சி குறைவடையும் என்று குறிப்பிட்ட வானிலை அவதான நிலையம், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியை எதிர்பார்க்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது.


(ற-ரி4,ரி5)



















## ஆர்.கே. நகர இடைத்தேர்தல் அ.தி.மு.கவின் சார்பில் மதுசூதனன்

சென்னை, டிசெ. 1
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் வெற்றிடமாகியுள்ள ஆர்.கே. நகரில், அ.தி.மு. கழகத்தின் சார்பில் மதுசூதனன் போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.
கடந்த சில மாதங்களுக்கு முன்னரேயே ஆர்.கே. நகரில் இடைத்தேர்தல் நடத்தப்பட இருந்தது. அப்போது அ.தி.மு.கழகம் இரண்டாக உடைந்திருந்தது. ஓ.பி.எஸ். தரப்பின் சார்பில் மதுசூதனன் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டது. சசிகலா தரப்பில் இருந்து தினகரன் போட்டியிடுவார் என்றும் அறிவிக்கப்பட்டது. தினகரன், தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து தேர்தல் கைவிடப்பட்டது. தற்போது தேர்தல் மீண்டும் நடத்தப்படுகிறது. தினகரன் தனித்து விடப்பட்டுள்ளதால் அவர் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவார். அ.தி.மு. கழகத்தில் இருந்து மதுசூதனன் போட்டியிடுவார் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக தி.மு. கழகத்தில் இருந்து மருதுகணேஸ் என்பவர் வேட்பாளராக நிறுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பாலி வானூர்தி நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது

ஜகார்த்தா, டிசெ. 1
இந்தோனேசியாவின் பாலித் தீவில் உள்ள அகுங் எரிமலை கடந்த 22ஆம் திகதியில் இருந்து தனது உறங்கு நிலையைக் கலைத்துள்ளது. இந்த எரிமலையின் சீற்றத்தால் மூடப்பட்ட பாலி வானூர்தி நிலையம் தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.
எரிமலையில் இருந்து வெளியேறும் சாம்பர் துகள்களால் வானூர்திகளுக்கு எவ்விதச் சேதமும் ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்தே வானூர்தி நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது. (ம)



# போர் ஏற்பட்டால் வடகொரியாவை அழிப்போம் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் எச்சரிக்கை




வொஷிங்டன், டிசெ. 1
"போர் ஏற்பட்டால் வடகொரியாவை முழுவதுமாக அழிப்போம்" என்று தெரிவித்தார் ஐ.நா. சபைக்கான வடகொரியத் தூதுவர் நிக்கி ஹாலே.
வடகொரியாவின் ஏவுகணைச் சோதனையை அடுத்து, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்று உரையாற்றுகையிலேயே ஹாலே இவ்வாறு எச்சரித்தார். "அனைத்து நாடுகளும் வட கொரியாவுடனான வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து தொடர்புகளையும் துண்டிக்க வேண்டும். பதற்றமான சூழ்நிலையில் போர் மூண்டால் வட கொரியாவை முழுவதும் அழித்து விடுவோம்" என நிக்கி ஹாலே மேலும் தெரிவித்தார்.
வடகொரியாவின் இந்தச் சோதனைக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தென்கொரியா அதிபர் மூன் ஜெ இன், ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ் உள்ளிட்ட பலரும் தமது கண்டனத்தைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நீதிபதியின் கண்முன்னே விஷம் குடித்து உயிரை மாய்த்தார் இராணுவத் தளபதி



ஹேக், டிசெ. 1
போஸ்னியா இராணுவத்தின் முன்னாள் தளபதியான ஸ்லோபோதன் ப்ரால்ஜக், பன்னாட்டு நீதிமன்றில் நீதிபதி கண் முன்னே விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். இந்தச் சம்பவம் உலக அரங்கில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
கடந்த 1992 - 1995ஆம் ஆண்டுகளில் நடந்த போஸ்னியா போரின் போது குறிப்பிட்ட இனத்தவர்கள் போர் நெறிமுறைகளை மீறி படுகொலை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனை விசாரித்த பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் போஸ்னிய இராணுவத்தின் தளபதியாக செயல்பட்ட ஸ்லோபோதன் ப்ரால்ஜக் உள்பட 6 பேரை போர் குற்றவாளிகள் என அறிவித்தது. இதனை எதிர்த்து குற்றவாளிகள் தரப்பில் நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் உள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. இந்த விசாரணை நடந்து வரும் நிலையில், நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலையான ஸ்லோபோதன் ப்ரால்ஜக் நீதிபதியின் கண் முன்னே விஷம் குடித்துவிட்டு "நான் குற்றமற்றவன்" என்று தெரிவித்துவிட்டு உயிரிழந்தார். (ம)

## நிலச்சரிவில் சிக்கி 19பேர் உயிரிழப்பு

இந்தோனேசியாவில் துயரம்


ஜகார்த்தா, டிசெ. 1
இந்தோனேசியாவின் ஜாவாத் தீவுகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 19 பேர் உயிரிழந்தனர்.
இந்தோனேசியா நாட்டின் ஜாவாத் தீவுப்பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகின்றது. வெள்ளப்பெருக்கு காரணமாக மண்சரிவும் ஆங்காங்கே ஏற்படுகிறது. அவ்வாறு நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 19 பேர் உயிரிழந்தனர். (ம)





## 'தாட்' ஏவுகணை
## பரிசோதித்தது 

சியோல், டிசெ. 1
கண்டம் விட்டுக் கண்டம் பாயும்
கொரியா நேற்றுமுன்தினம் சோ
தாட் என்றும் ஏவுகணைத் த
சோதித்து பதிலடி கொடுத்தது தெ
பன்னாட்டுச் சட்டதிட்டங்கள், வி
வடகொரியா தொடர்ந்து ஏவுகணை
நடத்தி வருகிறது. வடகொரியாவை
கிய நாடுகள் சபை ஏகப்பட்ட பெ
களை விதித்துள்ளது.
குறிப்பாக வடகொரியாவின் முக்
றுமதிகள் முடக்கப்பட்டுள்ளன. 
ரியாவின் கப்பல்கள் தரித்துநிற்
நாடும் அனுமதிக்கக்கூடாது எ
ஐ.நா. சபை கட்டளையிட்டுள்ள
னும் வடகொரியாவை கட்டுப்
முடியவில்லை.
இந்தத் தடைகளுக்குப் பின்னர் க
விட்டுக் கண்டம் பாயும் ஏவுக
சோதனையொன்றையும், ஐ
குண்டுச் சோதனையொன்றை
கொரியா சோதித்திருந்தது. நேற்
தினம் மற்றுமொரு ஏவுகணைச்
னையை நடத்தியது. இதுவும் க
விட்டுக் கண்டம் பாய்ந்து செல்



வடகொரியா நேற்றுமுன்தினம் கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. அது தொடர்பான ஒளிப்படங்களை வெளியிட்டுள்ள பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ். (ம



# திலடி!

## கணைத் தடுப்பை
## தது தென்கொரியா

டம் பாயும் ஏவுகணையை வட
தினம் சோதித்துள்ள நிலையில்
ணைத் தடுப்புச் சாதனத்தை
டுத்தது தென்கொரியா.
டங்கள், விதிமுறைகளை மீறி
து ஏவுகணைச் சோதனைகளை
கொரியாவைக் கட்டுப்படுத்த ஐக்
ரகப்பட்ட பொருளாதாரத் தடை

ாவின் முக்கிய ஏற்
டுள்ளன. வடகொ
தரித்துநிற்க எந்த
க்கூடாது என்றும்
ியிட்டுள்ளது. எனி
வை கட்டுப்படுத்த

ப் பின்னர் கண்டம்
யும் ஏவுகணைச்
றையும், ஐதரசன்
யொன்றையும் வட
ந்தது. நேற்றுமுன்
ஏவுகணைச் சோத
. இதுவும் கண்டம்
ய்ந்து செல்லக்கூடி

யது. குறிப்பாக வடகொரியாவில் இருந்து ஏவினால் அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனைத் தாக்கவல்லது என்று சொல்லப்படுகிறது. இந்தச் சோதனை பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ள நிலையில் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும் 'தாட்' ஏவுகணைத் தடுப்பை தென்கொரியா சோதித்துள்ளது. தென்கொரியாவின் கிழக்கு கரையோரத்தில் இருந்து இந்த ஏவுகணை சோதிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



ளியிட்டுள்ளது
(ம)



# அணுவாயுத நாடானது வடகொரியா

*கிம் ஜோங் உன் அறிவிப்பு*

பியாங்யாங், டிசெ. 1

"வடகொரியா அணுவாயுத நாடாக மாறியுள்ளது" என்று பகிரங்கமாக அறிவித்தார் அந்த நாட்டின் அதிபர் கிம் ஜோங் உன்.

"அமெரிக்காவின் எந்தப் பகுதியையும் தாக்கும் அதிநவீன 'வசாங் 15' ஏவுகணை சோதனை வெற்றிகரமாக முடிந்துள்ளது. இதையடுத்து வடகொரியா அணுஆயுத சக்தி படைத்த நாடாகி உள்ளது. அமெரிக்காவின் மிரட்டல், படையெடுப்பில் இருந்து வடகொரியாவைப் பாதுகாக்கவே இந்தச் சோதனை நடத்திப் பார்க்கப்பட்டது. இதன் மூலம் பொறுப்புள்ள அணுச்சக்தி நாடாக வடகொரியா நடந்து கொள்ளும்" என்று கிம் ஜோங் உன் மேலும் தெரிவித்தார். (ம)

# செயற்கையான நெருக்கடி

ஜேர்மனியில் உள்ள ஸ்டாபென் நகரம் மெதுவாக அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

8 ஆயிரத்து 100 வீடுகள் கொண்ட இந்த நகரத்தில், 2007ஆம் ஆண்டு நிலத்தடி நீர் எடுப்பதற்கான பெரிய திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தால்தான் இன்று நகரில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகளில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளில் 270 கட்டடங்களில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நகரின் சில இடங்களில் கட்டிடங்கள் 62 செ.மீ. உயரத்துக்கு உயர்ந்துவிட்டன. பக்கவாட்டில் 45 செ.மீ. தூரத்துக்கு நகர்ந்துவிட்டன. இதில் இரண்டு வீடுகள் முற்றிலுமாக இடிந்துவிட்டன. இந்தப் பகுதியில் இருக்கும் ஒவ்வொரு கட்டடத்துக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினை. அதனால் இவற்றைப் பழுது பார்ப்பதற்கான வாய்ப்பும் இல்லை.

"ஒவ்வொரு நாளையும் திகிலுடனே கழித்துக்கொண்டிருக்கிறோம். எப்போது வேண்டுமானாலும் கட்டடம் இடியலாம், நிலத்துக்குள் புதையலாம். இயற்கை எழிலோடு மிக அழகான நகரமாக ஒரு காலத்தில் இருந்தது இந்தப் பகுதி. அதனால்தான் குடியேறினோம். அமைதியாகச் சென்றுகொண்டிருந்த வாழ்க்கையில், நிலத்தடி நீரை உறிஞ்சுவதற்காக மிகப் பெரிய இயந்திரங்கள் பூமியைத் துளைக்க ஆரம்பித்தன. அன்று முதல் எங்களின் நிம்மதி பறிபோனது. மெதுவாக ஒரு நகரம் அழிந்துவருவதைக் கண்டு வருகிறோம். சிலர் வேறு நகரங்களுக்குச் சென்றுவிட்டனர். ஆனால் எல்லோராலும் போக முடியாது. என்ன செய்வதென்று புரியவில்லை" என்கிறார் இந்த நகரில் வசிக்கும் காஸ்பர். (ம)





உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீண்டும் தொடங்கிய இடத்திற்கேயா?

கூட்டாட்சி (சமஷ்டி) அடிப்படையில் ஓர் அரசியல் தீர்வைக் கொழும்பு தரத் தவறினால் தமிழர்கள் தனிநாடு கோரவேண்டிய அவசியம் ஏற்படும் என்று தெரிவித்திருக்கிறார் சி.வி.விக்னேஸ்வரன். தன்னைச் சந்தித்துப் பேசிய ஆஸ்திரேலியத்தூதுவர் பைரஸ் ஹட்சனிடம் அவர் இதனை நேரில் தெரிவித்திருக்கிறார்.

முதலமைச்சரின் கருத்தைப் படித்ததும் உடனடியாகவே தமிழர்களின் மனதில் ஓடிய எண்ண ஓட்டம், ''மறுபடியும் முதல்லே இருந்தா?'' என்பதாகத்தான் இருக்கும்.

30 வருடங்களுக்கு முன்னர் 1976 வைகாசி மாதம் 14ஆம் நாளிலும் தமிழ்த் தலைவர்கள் வட்டுக்கோட்டையில் கூடி இப்படித்தான் சொன்னார்கள். அதற்கு முன்னர் கூட்டாட்சி கேட்டுக்கேட்டு, இணக்கப்பேச்சுக்களில் ஈடுபட்டு ஈடுபட்டு களைத்துப் போன தந்தை செல்வா உள்ளிட்ட தலைவர்கள் எல்லோருமாகக்கூடி, கூட்டாட்சி தரவில்லையானால் தனிநாடு என்று பெரும் அறிவிப்பை விடுத்தார்கள். அதனையே தமது பரப்புரையாக 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் முன்வைத்து அமோக வெற்றியையும் பெற்றுக் கொண்டார்கள்.

அதன் பின்னர் நடந்ததை ஒட்டுமொத்த உலகமும் அறியும். தலைவர்கள் ஆரம்பித்து வைத்த கனவை நனவாக்க இளைஞர்கள் பேரவாக் கொண்டார்கள். தினவெடுத்த தோள்களோடு தலைவர்களுக்குத் தம் குருதியால் பொட்டு வைத்தார்கள். வீரம் விளை நிலம் கொண்டது.

அதுவரையில் அமைதி வழியில் சென்று கொண்டிருந்த அரசியல் போராட்டம் வன்முறைப் பாதைக்குத் திசைமாறியது. இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கினார்கள். தலைவர்கள் அதனைப் புன்சிரிப்போடு வரவேற்றார்கள். பிடரி மயிரைத் தடவிக் கொடுத்தார்கள். ஆரம்பத்தில் எல்லாமும் நல்லவிதமாகத்தான் சென்று கொண்டிருந்தன. ஆனால், இளைஞர்கள் தங்கள் பாதையில் திடமாக நடக்கத் தொடங்கியபோது, ஆரம்பித்த வேகத்தைக் காணவில்லையே என்று தலைவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதபோது, தங்கள் செயல்களை இராஜதந்திரம் என்றார்கள் தலைவர்கள்.

ஆனால் இளைஞர்கள் தாம் நடக்க ஆரம்பித்த பாதையிலிருந்து விலகத்தயாராக இருக்கவில்லை. அவர்கள் தொடர்ந்து முன்னேறத் தொடங்கியபோது வன்முறை அந்தத் தலைவர்களில் சிலரையே கூடப் பலி வாங்கிக்கொண்டது. பின்னாள்களில் ஆயுதங்கள் வைத்ததே சட்டம் ஆயுதங்களை வைத்திருந்தவர்களே அதிகாரத் தலைமைகள் என்ற நிலை வந்தது. புலிகள் தலையெடுக்கும் வரை இந்த நிலை நீடித்தது. புலிகளின் காலத்தில் ஆயுதப் போராட்டம் ஒன்றே விடுதலையை வென்றெடுக்கும் என்று ஆணித்தரமாக நம்பப்பட்டது.

கடைசியில் முள்ளிவாய்க்கால் கரையோரம் அந்தக் கனவு மூழ்கடிக்கப்பட்டு மூச்சடைக்கப்பட்டது. அதிலிருந்து மெல்லமெல்ல எழுந்து நிற்கத்தலைப்பட்டது தமிழ் இனம். ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் கிடைத்த இடைவெளியைப் பயன்படுத்திக்கொண்டு தன்னை அது ஆசுவாசப்படுத்திக் கொள்ள முயற்சிக்கையில் மீண்டும் தனிநாடு என்கிற முழக்கத்தைக் கேட்க முடிகிறது.

ஆரம்பித்த இடத்திலேயே மீண்டும் தமிழ் இனம் வந்து நிற்பதை உணர முடிகிறது. தலைவர்கள் தாங்கள் என்ன சொல்கிறோம் என்பதையும் அதனை அடையும் செயலுறுதியோடுதான் சொல்கிறார்களா என்பதையும் ஆய்ந்துணர்ந்து சொல்ல வேண்டியது அவசியம்.

இளைஞர்களை உசுப்பேற்றிவிட்டால் அது எப்படி காட்டுத்தீயாய் பற்றி எரியும் என்பதை ஏற்கனவே ஒரு தடவை பார்த்திருந்தும் மீண்டும் மீண்டும் அது போன்ற உசுப்பேற்றல்களைச் செய்வதும் பேசுவதும் சரியானதா என்பதைத் தலைவர்கள் சிந்திக்கவேண்டும்.

தாம் பேசுவதன் விளைவுகளையும் எதிர்விளைவுகளையும் சிந்தித்துப் பேசவேண்டும். பேச்சுக்கும் செயலுக்கும் இடையே திருகுதாளம் விட முனைந்தவர்களுக்கு நடந்தவற்றை வரலாற்றில் இருந்து அறிந்துகொண்டு செயற்பட வேண்டும். அது முதலமைச்சருக்கும் பொருந்தும்.

# பொதுமக்களது உரிமையோடு அரசு விளையாடுகிறது

**சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் பவ்ரல் (PAFFREL) அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவிப்பு**



**கேள்வி:** உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு வருவது, அண்மைய நாள்களாக பொதுமக்கள் மத்தியில் பேசுபொருளொன்றாக ஆகியுள்ளமை தொடர்பான தங்களது கருத்து என்ன?

**பதில்:** தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு வருவதற்கான முக்கிய காரணம், தேர்தலை நடத்துவதற்கு ஆட்சியாளர்களுக்கு அரசியல் ரீதியான தேவை இல்லாதிருப்பதாகும். அரசு சுதந்திரக்கட்சி, ஐ.தே. கட்சி, ஜே.வி.பி. அல்லது வேறு இணைந்த தரப்புக்களால் நிர்வகிக்கப்படுமொன்றாக இருக்கக்கூடும். ஆனால் எத்தகையதொரு அரசானாலும் சரி, குறித்த சமயத்தில் தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பை அது கொண்டுள்ளது. இன்றைய அரசால் அது இயலாமல் போயுள்ளது.

**கே:** அத்தகைய நிலைக்கான காரணமென்ன?

**ப:** பல காரணங்கள் இருப்பது போன்றே அதற்கான பொறுப்பை, ஏற்க வேண்டிய தரப்புக்களும் இருக்கக்கூடும். கடந்த அரசின் காலத்தில் தேர்தல் எல்லைகளை நிர்ணயிக்கும் குழு நியமிக்கப்பட்டு, சகல தரப்புக்களது கருத்துக்கள் பெறப்பட்டு அதற்கமைய அதனது அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்று பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவை அரசியல் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதால்தான் மீண்டும் ஒரு தடவை அசோக பீரிஸ் தலைமையிலான குழுவொன்றை நியமிக்க வேண்டி ஏற்பட்டது. ஆதலால் அதற்கான பொறுப்பை கடந்த அரசும் ஏற்க வேண்டியுள்ளது.

2013ஆம் ஆண்டில் தேர்தல்கள் ஆணைக்குழு ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழில்நுட்பச் சிக்கல்களை தெளிவாக இனம்கண்டது. குறித்த சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான யோசனைகளும் முன்வைக்கப்பட்டன. ஆனால், இந்த ஆண்டுவரை அது நாடாளுமன்றத்திலோ, அமைச்சரவையிலோ சமர்ப்பிக்கப்பட்டுத் தீர்வு காண இயலாது போய்விட்டது.

### உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தாமைக்கான முழுப் பொறுப்பையும் இன்றைய அரசே ஏற்க வேண்டும்

**கே:** அதாவது இன்றைய அரசுக்கும் அதற்கான பொறுப்பு உள்ளதாகக் கூற வருகிறீர்கள். அப்படித்தானே?

**ப:** இந்த விடயத்தில் குறித்த பொறுப்பு பல தரப்புக்கள் மீது சுமத்தப்பட வேண்டும். ஆனால் அப்படிக்கூறி இன்றைய அரசால் தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள இயலாது. இன்றைய நிலையில் தற்போதைய அரசே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றாக வேண்டும். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் கடந்த காலத்தில் செயற்பட்ட விதத்தைப் பார்க்கும்போது இந்தத் தேர்தலை நடத்த அவருக்கு அரசியல் ரீதியான தேவை இருக்கவில்லை என்றே தோன்றுகிறது. அசோகா பீரிஸ் தலைமையிலான குழுவின் அறிக்கையை வெளியிட 14 மாதங்கள் எடுத்தது. குறித்த அமைச்சு தேவையான உதவிகளை வழங்கப் பின்னடித்ததாலேயே குறித்த அறிக்கையை வெளியிட இவ்விதம் காலதாமதமாகியதாக அசோக பீரிஸ் தெரிவித்திருந்தார். இத்தகைய குற்றச்சாட்டு ஆரம்ப முதலே முன்வைக்கப்பட்டு வந்ததுண்டு. இத்தகைய பின்னடைவுகள் காரணமாகவே தற்போதைய களநிலை உருவாகியுள்ளது.

குறித்த இந்த நிலைமை குறித்து 'பவ்ரல்' அமைப்பு வழக்குத் தாக்கல் செய்தது. அசோகா பீரிஸ் தலைமையிலான குழுவின் எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கையை ஒரு மாத காலத்துள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுமென சம்பந்தப்பட்ட அமைச்சர் நீதிமன்றத்தில் இணங்கிக்கொண்டமை 'பவ்ரல்' அமைப்புக்குக் கிட்டியதோர் வெற்றியாகும். ஆயினும் அத்தகைய வர்த்தமானி அறிவித்தலும் தாமதமாகவே அமைந்தது.

**கே:** எது எப்படி இருந்தபோதிலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட நேர்ந்துள்ளதல்லவா?

**ப:** புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழு அங்கு குறித்த தேர்தலை நடத்த மூன்று தடவைகள் முயற்சித்தது.

ஆனால்புதுக்குடியிருப்பைச்சேர்ந்த பொதுமக்களில் இருவர் தொடுத்த வழக்குக்காரணமாகஅந்தமுயற்சிகள்தடைப்பட்டன.

கே:தற்போதுஇங்குஇடம்பெற்றுள்ளதும் அன்று புதுக்குடியிருப்புப் பகுதியில் தேர்தலுக்கு ஏற்பட்ட தடைபோன்றது தான் எனக் கூறுகிறீர்களா?

ப: இப்போதும் அது போன்றே இடம்பெற்றுள்ளது. தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட தேர்தல்கள்ஆணைக்குழுசகலநடவடிக்கைகளையும்மேற்கொண்டுமுடித்திருந்தது. துரதிருஷ்டவசமாக, புதிய தேர்தல் நடைமுறை காரணமாக, தேர்தல் நடத்தப்படும் நாள் குறித்த முடிவை மேற்கொள்ள தேர்தல்கள் திணைக்களத்துக்கு அதிகாரம் இருக்கவில்லை. உள்ளூராட்சிமற்றும் மாகாண சபைகள் அமைச்சர் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுஉதவாவிடில்தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரால் தேர்தலுக்கானநாளைநிர்ணயிக்க இயலாது.

இத்தகையநிலையில்தான்குறித்த ஆறுமாவட்டங்களைச்சேர்ந்தஆறு பொதுமக்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அது அவர்களுக்குள்ள உரிமை என்பதைஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அசோகா பீரிஸ் தலைமையிலான குழுவுக்கு எல்லை நிர்ணயம் மேற்கொள்வதற்கான அதிகாரம்இருப்பினும், உறுப்பினர்கள் தொகையில் மாற்றம் செய்வதற்கான அதிகாரம் அந்தக் குழுவுக்குக் கிடையாது என்பதே அவர்களது ஆட்சேபனையாகும்.

**எல்லைகள் விரிவடையும்போதும் குறுகும்போதும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களது தொகையும் கூடிக் குறையும்**

கே: அசோகா பீரிஸ் குழுவின் முடிவுகளில்தவறுஇருக்கக் கூடுமா?

ப: எல்லைகள் குறுகும்போது அதற்குள் உள்ள மக்கள் தொகைக்கமைய உறுப்பினர்கள் தொகையும் குறைவடையும். அதேபோன்று முன்பிருந்தஎல்லைகள்விஸ்தரிக்கப்படும்போது அந்தப் பிரிவுக்கான உறுப்பினர்களது தொகை அதிகரிக்கும்என்பது சாதாரண மக்களுக்குப் புரியுமொரு விடயமே. குறித்த எல்லை நிர்ணயக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் அனுபவமும் திறமையும் மிக்கவர்களே. அந்த வகையில் அவர்களது முடிவுகளில்தவறு இருக்க இயலாது எனவே நம்புகிறேன்.

கே: தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதற்கான நேரடிப் பொறுப்பை அமைச்சர் பைசர் முஸ்தபாவே ஏற்க வேண்டுமென்றகுற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறதல்லவா?

ப: அமைச்சர் பைசர் முஸ்தாபாவே இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமெனவே நாமும் கூறுகிறோம். ஒன்றில் அவரது ஆதரவுடனேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கக்கூடும். அதேபோன்று அவரேதான்தேர்தலுக்கானவர்த்தமானிஅறிவித்தலைவிடுக்கவேண்டியவர் அவரொரு அரச தலைவர் சட்டத்தரணி அந்தஸ்து கொண்டவர். இது விடயத்தில் சிக்கல்கள் இருக்குமானால் அது அவருக்குத் தெரியாதிருக்காதா? ஆகவே எந்த வகையிலும் அமைச்சர் முஸ்தபாவால் இது விடயத்தில் பொறுப்பேற்பதிலிருந்து தப்பித்துக்கொள்ள இயலாது.

இது இந்த நாட்டின் 15 மில்லியன் வாக்காளர்களது வாக்குரிமை தொடர்பான பிரச்சினை. அது மட்டுமன்றி இதுவோர் தேசியப் பிரச்சினையும் கூட. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த இந்த ஆறு பேரும் தங்களது எந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்பதை நாட்டுக்குத் தெளிவுபடுத்தியாகவேண்டும். கடந்த இரண்டரை ஆண்டுகளாக இந்த நாட்டு மக்களதுவாக்குரிமைமறுக்கப்பட்டு வந்துள்ளதாகவே தோன்றுகிறது. புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கடந்த40ஆண்டுகள்வரைஉள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படவில்லை. மொத்தமுள்ள 341 உள்ளூராட்சிமன்றங்களில்70உள்ளூராட்சி மன்றங்கள் குறித்த பிரச்சினை காரணமாக, ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தாதிருப்பது நியாயமானதா? அசோக பீரிஸினது வர்த்தமானி குறித்தே ஆட்சேபனை கிளப்பப்பட்டுள்ளது. அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின்படியான சுதந்திர ஆணைக் குழுக்கள் தமக்கான சுதந்திரத் தன்மையுடன் செயற்படத்தக்க நிலை இந்த ஆணைக்குழுவுக்குக்கிட்டவில்லை என்பதே உண்மை.

கே: தற்போதைய நிலைமை பாரதூரமானஒன்றல்லவா?

ப: இம்முறை மட்டும்தான் இத்தகையசிக்கல்ஏற்படும். அடுத்து வரும்மாகாணசபைமற்றும்நாடாளுமன்றத் தேர்தல்களிலும் இந்தப் பிரச்சினை தலைதூக்கக்கூடும். அதாவதுஇத்தகையசிக்கல்கள்ஒரு தடவை மாத்திரமே ஏற்படும். புதியதொருநடைமுறையை அறிமுகப்படுத்தும்போது அதனை நிலைநாட்டும்பொறுப்புதேர்தல்கள்ஆணைக்குழுவைச் சேர்ந்தல்ல. அதனால் தான் தேர்தலை நடத்தும்வரை அமைச்சர் பைசர் முஸ்தாபா பக்கம் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. அதன்பின்னரான தேர்தல்களில் தேர்தல்கள் ஆணைக்குழு தனது அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள இயலும்.



**மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் தடை ஏற்பட்டுள்ளது**

கே: இத்தகைய நடைமுறையையே மாகாண சபைகளுக்கான தேர்தல்களிலும் பயன்படுத்த எதிர்பார்க்கலாமல்லவா?

ப: மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலை இவ்வருட இறுதிக்குள் நடத்திமுடிக்க வேண்டியிருந்தது. ஆனால் அவற்றை இப்போதுமேற்கொள்ளமுடியாது. புதிய தேர்தல் நடைமுறை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதிலும் சூழ்ச்சியான விதத்தில் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்துக்கு கண்டிப்பான வரையறை வகுக்கப்பட்டுள்ளது. அது குறித்து சவால் விடுப்பதற்கான நாட்டு மக்களுக்கிருந்தஉரிமைஇல்லாதொழிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நாட்டின் பிரஜைகளுக்குரிய உரிமையோடு அரசு விளையாடுகிறது.

கே: அதிகரிக்கப்பட்டுள்ளபெண்களுக்கான பிரதிநிதித்துவ நடைமுறைதற்போதுநடைமுறைப் படுத்தப்படவுள்ளதல்லவா?

ப: உண்மையான தலைமைத்துவம் முன்னிலைக்குக் கொண்டுவரப்படுமானால்மட்டுமே அதனால் பயனுண்டு அழகுக்காகவோ, காட்சிக்காகவோ, உறவுமுறைக்காக பெண்களுக்கு இடமளிக்கப்படுமானால் அது பிரச்சினையையே ஏற்படுத்தும்

கே: தேர்தல் நடைமுறையின் சாதகமான இலட்சணம் என்னவெனக் குறிப்பிடுவீர்களா?


ப: சாதகமான பல அம்சங்கள் உள்ளன. ஒரு தொகுதியில் வாழும் மக்களுக்குப் பொறுப்புக் கூறத்தக்கபிரதிநிதியொருவர்தெரிந்தெடுக்கப்படுவதுசிறப்புமிக்கது. ஒருமுறை தெரிவாகும் உறுப்பினர் பொதுமக்களுக்கு திருப்தியாகச் சேவையாற்றாவிடில்அடுத்தமுறை அவர் பதவி இழக்க நேரிடும். வாக்காளர்களுக்கு, வேட்பாளர் நன்கு நெருங்கியவராகஇருப்பதால்பரப்புரைக்கானசெலவுகுறைவடையும்.

கே: அதேவேளை பாதகமான விளைவுகளாக எவை அமையக்கூடும்?

ப: மக்களுக்குள்ள விருப்பு வாய்ப்பு இல்லாது போகும். கட்சிகள் பொருத்தமான வேட்பாளர்களைத்தேர்ந்தெடுத்துகளத்தில்இறங்குமானால்அதனால்கூடபிரச்சினை எதுவும் ஏற்படாது.

(நன்றி: மவ்பிம)

> 2013ஆம் ஆண்டில் தேர்தல்கள் ஆணைக்குழு ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழில்நுட்பச் சிக்கல்களைதெளிவாகஇனம் கண்டது. குறித்த சிக்கல்களுக்குத்தீர்வுகாண்பதற்கானயோசனைகளும் முன்வைக் கப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு வரை அது நாடாளுமன்றத்திலோ, அமைச்சரவையிலோ சமர்ப்பிக்கப்பட்டுத்தீர்வுகாண இயலாது போய்விட்டது.



## ஆசிரியருக்கான கடிதம்

### நாய்களின் தொல்லை தீரவே தீராதா?

நாய்களின் தொல்லைபற்றி நாளாந்தம் பல்வேறு செய்திகள் வெளிவருகின்றன. இதே நாய்த்தொல்லைகளை நாமும் அனுபவிக்க நேர்வதால் மீண்டும் அதேவிடயம் குறித்து பிரஸ்தாபிக்க வேண்டிநேர்ந்துள்ளது. அந்த வகையில் நாமும் ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கும் எழுதவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அண்மையில் ஒருவர் நாய்களது தொல்லைபற்றி எழுதியகடிதம்; உதயனது ஆசிரியருக்கான கடிதம் பகுதியில் பிரசுரமாகியிருந்தது. கட்டிவளக்கிறோம் என்கின்ற பெயரில் எங்களது அயலவர்கள் நாயைக்கட்டி வளர்க்கின்றனர். இதனால் தெரு நாய்களால் அசுத்தப்படுவதினின்றும் ஓரளவுக்காவது துப்புரவாகத்தான் உள்ளது. ஆயினும் தத்தம் வீடுகளில் அண்டை அயலவர்கள் கட்டிவளர்க்கும் அவர்களது வளர்ப்பு நாய்கள் பகலினும் இரவிலும் எழுப்புகின்ற கொடூரமான குலைப்புச்சப்தம் எமது மன அமைதியை சீரழிக்கின்றது. நிம்மதியாகத் தூங்கக் கூடமுடியாத நிலையை ஏற்படுத்துகின்றது.

சீனாவில் இத்தகைய நாய்களின் உரத்த குரப்பைக் கட்டுப்படுத்த குரல் நாண் அறுவைச்சிகிச்சை மேற்கொள்கின்றனர். இதனால் நல்ல வருமானம் கிடைப்பதால் இத்தகைய அறுவைச் சிகிச்சை செய்யும் போலி மருத்துவர்கள் பலர் அங்கு தொழில் புரிவதாக செய்திகள் வெளிவந்துள்ளன. வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளை மேற்கொண்டு அதற்கான உரிமங்களை உள்ளூராட்சிச்சபை அலுவலகங்களில் பெற்றுக்கொள்வது அவசியமென இவ்வாண்டின் முற்பகுதியில் வலி. கிழக்கு பிரதேச சபை பத்திரிகை மூலமாக அறிவித்தல் விடுத்திருந்தது. இருந்தாலும் குறித்தபிரதேசசபைக்கு உட்பட்ட கிராமத் தெருக்களில், ஒழுங்கைகளில் கட்டாக்காலி நாய்கள் பல சுதந்திரமாக உலா வருகின்றன. டெங்கு ஒழிப்பில் ஈடுபடும் பாதுகாப்பு தரப்பினர், பொலிஸ் தரப்பினர், உள்ளூராட்சித் தரப்பினர், சுகாதார தரப்பினர் வீட்டுத்தரிசனங்களின்போது இத்தகைய அனுமதியன்றி வளர்க்கப்படும் நாய்களையும் கட்டாக்காலி நாய்களையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் எமது பாடு நாய்படாப் பாடாகத் தொடரவே செய்யும்.

ஊரெழு மைந்தன்

# 'எய்ட்ஸ்' நோய் தொற்றிலிருந்து விடுபடுவோம்

## ஆரோக்கியமான சமூகத்தை காண்பதற்கான செயலூக்கம்



> எச்.ஐ.வி' தொற்றுக்கள் பல வழிகளில் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதால், எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எதிர்கால சந்ததியினரை பாதுகாத்துக் கொள்ள இன்றே ஒவ்வொருவரும் பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது. யாழ். போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள பாலியல் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினை அணுகி, காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இந்தப் பரிசோதனையை இலவசமாக மேற்கொள்ளமுடியும்.

கந்தையா கனகசபை

**இன்று பன்னாட்டு எய்ட்ஸ் தடுப்பு தினம்**

உலகளாவிய ரீதியில், ஒவ்வோர் வருடமும் டிசெம்பர் மாதம் 1ஆம் திகதி பன்னாட்டு எய்ட்ஸ் தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையிலே இன்று நாடு முழுமையுமாக எய்ஸ்ட் நோயிலிருந்து பொது மக்களைக் காப்பது குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சமூக விழிப்புணர்வூட்டும் தெருக்கூத்துக்கள், மக்கள் அறிவுறுத்தல் கூட்டங்கள் இடம்பெறுகின்றன.

**சமூகப் பாங்கான விழிப்புணர்வு**

எம்மை நேசிப்பவர்களுக்கு என்றும் நாம் விசுவாசமாக இருக்க வேண்டும். அவர்கள் தரும் அன்புக்குப் பாத்திரமானவர்களாக சிறந்த பின்னூட்டங்களை வழங்கியிருக்க வேண்டும். ஆக, எமை மட்டுமன்றி எம் அன்புக்குரியவர்களையும் 'எய்ட்ஸ்' நோயிலிருந்து பாதுகாத்திட செயல்முனைப்புப் பெற வேண்டும். விழிப்புணர்வோடு சமூகப் பாங்காய் எமது பொறுப்புகளை உணர்ந்து கடமையாற்ற வேண்டும். சமூக வெளியில் அறிவுடைய தனிமங்களாக சிறப்பிக்கப்படும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு பெறவேண்டும். அந்தப் புரிந்துணர்வின் வழி நன்மைகளையும், தீமைகளையும் உய்த்துணர்ந்து பாகுபடுத்தி, பொருத்தமான பாதைகளை தெரிவு செய்து கொண்டு பயணிக்கத் தங்களை கட்டமைத்தும், தகவமைத்தும் கொள்ள வேண்டும். ஓர் உயிரியாக, சமூகப் பிரச்சினைகளையும், பிறழ்வுகளையும், இயற்கையின் இயல்பூக்கமாக தொற்றிக் கொள்கின்ற நோய் நாடிகள் குறித்தும் அதீத கவனம் கொள்ள வேண்டும். குறிப்பாக, மேற்போந்த பிரச்சினைகளின் போக்கில் அதிக கரிசனைக்குரிய விடயமாக நோக்கப்பட வேண்டியது தொற்றும் மற்றும் தொற்ற நோய்களின் கணிப்பே.

**'எச்.ஐ.வி' நோய் நாடியின் பாதிப்பு**

இங்கு 'எய்ட்ஸ்' என்ற நோய் நாடியும் அதிக கவனிப்புக்கும், கணிப்புக்கும் உரிய படிநிலையே. எமைச் சூழ நடமாடித் திரிகின்றவர்களுள் எவராவது, விரும்பியோ விரும்பாமலோ ஆபத்தான பாலியல் தொடர்பு சந்தர்ப்பங்களுள் அகப்பட்டிருந்தால், உரிய மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது அவசியமாகிறது.

தவிர, இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், உலகை ஆட்கொண்டு உடல் ஆரோக்கியம் சார்ந்து இடர்மிகுதியை அதிகளவில் தந்த பயங்கர 'ஆட்கொல்லி' நோயாக எய்ட்ஸ் விளங்கியது. இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். எயிட்ஸ் நோய் குறித்து அனைவருக்கும் அறிவூட்ட வேண்டும். அவர்களது பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப் பணி செய்ய வேண்டும். விழிப்புணர்வால் வலுவூட்ட வேண்டும். இந்தக் கொடிய நோயினால் உயிரிழப்போரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேசெல்கிறது. இதுவரையான காலத்தில், எய்ட்ஸ் நோயானது உலகளாவிய ரீதியில் இரண்டரைக் கோடி மக்களை பலிகொண்டுள்ளது.

**வடமாகாணத்தில் 'எச்.ஐ.வி' வைரஸ் தொற்று**

இலங்கையை எடுத்துநோக்கின் எய்ட்ஸ் நோயால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்துக் காணப்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் புதிதாக ஆறு பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளமை இனம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களுள் மூவர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தகவலை, யாழ்.போதனா வைத்தியசாலையின் பாலியல் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி வெளிப்படுத்தியுள்ளார்.



வடமாகாணத்தைப் பொறுத்தவரையில், 1987 ஆம் ஆண்டிலிருந்து இருந்து அண்ணளவாக 80 பேர் வரை எயிட்ஸ் நோய் தொற்றுக்குள்ளாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், அவர்களுள் அண்ணளவாக 45 பேர் உயிரிழந்துள்ளனர். நடப்பு வருடத்தின் காலாண்டு முடிவில் நாட்டில் மொத்தமாக 2 ஆயிரத்து 688 பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 81 சிறுவர்கள் உள்ளடங்கியுள்ளதாக சுகாதார அமைச்சின் பால்வினை நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் எய்ட்ஸ் நோய்த் தொற்று குறைவடைந்திருந்த போதும், அதன் தாக்கமும் தொற்றும் படிப்படியாக அதிகரித்து வருவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். அறிமுகம் இல்லாதவர்களுடன் பாதுகாப்பற்ற உடலுறவை வைத்துக்கொள்வதே, இந்த நோய் அதிகளவில் பரம்பலடைவதற்கான முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது.

**எய்ட்ஸ் நோயை ஒழிக்கும் திட்டம் தேவை**

இந்தச் சந்தர்ப்பத்திலே, எய்ட்ஸ் நோயை எதிர்வரும் ஐந்தாண்டு காலப்பகுதியில் இல்லாது ஒழிக்கும் திட்டமானது இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ளது. பாலியல் தொழிலாளிகள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்கள் தொடர்பில் ஆய்வு நடத்தப்படவுள்ளதாகவும் தேசிய பால் மற்றும் எய்ட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் 'சிசிர லியனகே' தெரிவித்துள்ளார். கடந்த 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம், 15ஆயிரம் பாலியல் தொழிலாளர்களும், 10ஆயிரம் ஓரினச் சேர்க்கையாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே, 'எச்.ஐ.வி' நோய்த் தடுப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது, இந்தப் புள்ளி விவரத்தகவல்கள் முக்கியத்துவத்தோடு கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.

**நோய்த் தொற்று குறித்த கரிசனை**

இவ்வருடத்தின் இரண்டாவது காலாண்டுப் பகுதியில், எய்ட்ஸ் நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 678 எனவும், 'எச்.ஐ.வி' வைரசினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து688 எனவும் தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் தகவல் வெளியிட்டுள்ளார். 'எய்ட்ஸ்' அல்லது 'எச்.ஐ.வி' தொற்றுதலை தடுக்க ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பை பேணி நடக்க வேண்டும். ஆணுறை பாவித்தல் மற்றும் குருதி மாற்றீடு செய்யும் போது 'எச்.ஐ.வி' தொற்றாத குருதி என்பதை உறுதி செய்தல் போன்ற முதன்மைச் செயல்நிலைகளை கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். இந்த நோயை பூரணமாக குணப்படுத்த இதுவரை எந்தவொரு மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை.

**எம்மை நாமே பாதுகாக்க வேண்டும்**

'எச்.ஐ.வி' தொற்றுக்கள் பல வழிகளில் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதால், எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எதிர்கால சந்ததியினரை பாதுகாத்துக் கொள்ள இன்றே ஒவ்வொருவரும் பரிசோதனைகளை மேற்கொள்வது சிறந்தது. யாழ். போதனா மருத்துவமனையில் அமைந்துள்ள பாலியல் தொற்று நோய் தடுப்புப் பிரிவினை அணுகி, காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இந்தப் பரிசோதனையை இலவசமாக மேற்கொள்ளமுடியும். இங்கு 'எச்.ஐ.வி' தொற்றுக் குறித்த பரிசோதனையையும், சிகிச்சையையும் பெறுவோரின் தகவல்களில் இலக்கங்கள் மட்டுமே உபயோகிப்படுத்துவதால், அவர்களின் விவரங்கள் வெளிச் செல்லாது. ஆக, இந்த நோயிலிருந்து தப்பித்திருந்திட சிந்தித்து செயலாற்றுவோம். சமூகச் செயல்வெளியில் விழிப்புடனும், பொறுப்புடன் செயற்படுவோம். நோயின்றிய ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.

"பொறுப்புணர்வுடன் செயற்பட்டு,
சிறப்புடன் வாழ்வோம்.....!"



# தெய்வ பக்தி

## ஆத்மார்த்தமான அமைதியைத் தரும் சக்தி

### வழிபாடுகளை சரியான முறையில் மேற்கொள்வதற்கான வேண்டுதல்

க.நா.சபாரத்தினம்

தெய்வ பக்தி என்பது அமைதியை வேண்டும் பணிவிடையின் ஆத்மார்த்தமான கைங்கரியம். அந்தவகையிலே சைவ சமயிகள் ஒவ்வொருவரும் தாம் வணங்கும் இறைவடிவம் சார்ந்து பயபத்தியுடையவனாக விளங்குகிறான். அதன்படி பக்தியின் பயன் சொல்லி, ஆலய வழிபாட்டுக்குச் சென்று பிரார்த்தனைகளில் ஈடுபடுவதும், ஏனைய சமயப் பணிகளில் ஈடுபடுவதும் ஒவ்வொருவரும் மேற்கொள்கின்ற திருத்தொண்டின் நடைமுறையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

இந்தநிலையிலே இந்து சமய நடைமுறைகளில் மேலும் சில விடயங்களை அவதானிப்போமாகில், எமது நடைமுறைச் செயற்பாடுகளில் சில அறியாத, பிரித்து விளங்கிக் கொள்ள முடியாத தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. அதனால் ஏற்படும் துன்பங்களை நாம் அறியாமலேயே விட்டு விடுகிறோம். உண்மையில் இது கவலைக்குரிய விடயமாகும். அடியவர்களாக இவை குறித்து நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

**விபூதி பிரசாதம்**

விபூதிப் பிரசாதம் மகத்துவ குணமுடையது. சிவ சின்னங்களில் ஒன்றாக மேன்மையோடு பொருள்கொள்ளப்படுவது. அடியவர் பக்தியின் பயனுக்குரிய அருளாக வழங்கப்படுவது. அதனை நாம் பயபக்தியின் பேறாகவும், புனிதமுடைய கூறாகவும் நெற்றியில் அணிந்து பரவசமடைய வேண்டும்.

ஆக, ஆலயங்களில் விபூதிப் பிரசாதம் பொருத்தமுற வழங்கப்பெற்று அடியவர்களிடத்தில் அருளின் பூரணத்துவத்தை தந்திருக்க வேண்டும். அதனைப் பைகளில் பொதியிட்டு இலக்கணமற்ற பொருளுறலைத் தந்திருக்கக் கூடாது. குறிப்பாக பொதியிடப்படும் விபூதிப் பிரசாதம் ஆலயப் பெயருடன் தெய்வத்தின் படமும் பொறிக்கப்பட்டே வழங்கப்படுகிறது. ஆனாலும் அதன் பயனை அடியவர்கள் பெறும் போது, அந்தப் பொதியானது வீணே தூக்கி எறியப்படுகிறது. அதனை ஒருவரும் பத்திரப்படுத்திக் கொள்வதைக் காணமுடியவில்லை.

> ஆலய வழிபாட்டிலும், சமயம் சார்ந்த விடயங்களிலும் எமது செயற்பாடுகள் ஏனையவர்களுக்கு இடையூறாக இருந்துவிடக்கூடாது. இறைவன் மீதுள்ள பக்தியை பயனுள்ள சக்தியாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலமே ஆலய வழிபாட்டின் பூரணத்துவமான பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேபோன்று இறை அலங்காரம் சார்ந்த பட்டு, சந்தனம், சாம்பிராணி போன்ற பொருள்களின் தருகையும் இதே நிலையையே கண்டுகொள்கின்றன. இந்தச் செயல்நிலை பக்தியின் மகத்துவத்தை கீழ் நிலைப்படுத்தும் செயலுறுதியாகவே அமைந்துவிடுகிறது. இந்தப் போக்கில் மாற்றங் கண்டுகொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் ஆலயப பரிபாலகர்களும், அந்தண சிவாச்சாரியர்களும் கரிசனை கொள்ள வேண்டும். சமூக வெளியில் பயணித்திருக்கும் ஆன்றோர் இது குறித்து தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

**திருமுறை ஓதல்**

திருமுறை எனும் இறை துதி பேரன்பின் அளவளாவலாக இருக்க வேண்டும். ஆலயங்களில் திருமுறைப் பாராணயம் செய்யும் போது, அவற்றை பண்ணோடு படித்தல் சிறப்பு. திருமுறைகளை ஓதும் அருட் பணி நிலையில் தீட்சை நோக்குதற்குரிய பணிக் கூறாக அமைய வேண்டும். அதனை சரியான முறையில் செய்திருக்க வேண்டும். திருமுறைகைளைப் படிப்பதில், மூத்தோர் இளையவர்களுக்கு அதிக வகிபங்கினை வழங்க வேண்டும். முறைப்படியாக திருமுறைகளைப் பாராயணம் செய்யக் கற்றுத் தர வேண்டும். அதன்படி ஒழுகி நடந்திட நல் வழிப்படுத்தல்களை வழங்க வேண்டும்.



தவிர, ஆலயங்களில் அந்தணர்களுக்கு அடுத்தபடியாக பக்தி நிலையில் முதன்மை நிலை பெறுகின்ற அடியவர்களுள், இசை நயம் கொண்டு இறை அழகை திருமுறைகளின் பக்தி இயல் கொண்டு மேன்மை கொள்ளச் செய்கின்ற ஓதுவார்கள் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள். இங்கு, காளாஞ்சி எனும் உபகாரம் கொண்டு அவர்கள் அன்பு கொள்ளப்பட வேண்டும்.

**இறை தரிசனமும் தொண்டும்**

அதே போன்று ஆலயங்களை நாடி வருகின்ற அடியவர்கள் அனைவரும் இறை தரிசனம் கண்டு அமைதியை பெற்றிருக்க வேண்டும். அபிஷேகம், தீபாராதனை, இறை பிரசாதம் என அனைத்திலும் சமபங்கினை பகிர்ந்து கொள்ள வேண்டும். சுயநலம் காணாது அனைவரையும் பக்தியின் வழி கண்டுகொள்ள வேண்டும்.

அடியவர் திருத்தொண்டினை நோக்கின், திருப்பணி, சுவாமி காவுதல், குடை, கொடி, ஆலவட்டம் பிடித்தல் போன்ற அத்தனை இறை பணிவிடைகளையும் செய்ய விரும்புகின்ற அடியவர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இறை சந்நிதியில் ஏனையவர்களுடைய மனத்தாக்கத்துக்கு நாம் காரணமாக இருந்து விடக்கூடாது. திருப்பணி என்ற உயர்நிலையில் அனைவரையும் ஒன்றிணைத்துப் பயணிக்க வேண்டும். எந்தவிதமான பாகுபாடுமின்றி சிறந்த மனப்பக்குவத்தை பக்தியின் பால் வெளிப்படுத்த வேண்டும். இளையவர்கள் இந்தப் பணி நகர்வில் முன்னின்று உழைக்க வேண்டும்.

**சமய நிகழ்வுகளின் பயன்**

சமய தத்துவங்களை அறிந்திருப்பதற்கும், சமய வாழ்க்கையை பேணுவதற்கும் சமய அறிவு முக்கிய பொருளாக கொள்ளப்படுகிறது. இதனை உணர்த்த ஆலயங்களில் சமயம் சார்ந்த நிகழ்வுகள் இடம்பெற வேண்டும். குறிப்பாக, சொற்பொழிவுகள், நற்சிந்தனை நிகழ்வுகள், திருவாசக முற்றோதல் மற்றும் புராணங்களின் பாராயணம் என்பன இடைவிடாது ஆலயச் சூழமைவில் நடந்தேற வேண்டும். அடியவர்களைப் பக்தியின் பால் நல்வழிப்படுத்த வேண்டும். இதன் ஊடே எமக்குரிய சமய விழுமியங்களின் தாற்பரியங்களை உணர்ந்து செயலாற்றமுடியும்.

ஆலயங்களில் நாம் செய்கின்ற செயற்பாடுகள் பயனுள்ளதாக அமைய வேண்டும். நேர்த்திக்கடன்களை சரிவர பூர்த்தி செய்ய வேண்டும். ஆலயங்களுக்கு தேவையற்ற பொருள்களை நன்கொடையாக வழங்கி அவை பயன்படுத்தப்படாமலிருப்பது கவலைக்குரிய விடயம். அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பொருத்தமான அன்பளிப்புகளை ஆலய திருப்பணி காலத்தில் வழங்குதல் பயனுள்ளதாக அமையும்.

**பூரணத்துவமான அருளைப் பெறுவோம்**

எனவே, ஆலய வழிபாட்டிலும், சமயம் சார்ந்த விடயங்களிலும் எமது செயற்பாடுகள் ஏனையவர்களுக்கு இடையூறாக இருந்து விடக்கூடாது. இறைவன் மீதுள்ள பக்தியை பயனுள்ள சக்தியாக மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலமே ஆலய வழிபாட்டின் பூரணத்துவமான பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# தொழுகையே துணை

தொழுகை என்பது வெறும் சடங்கு, சம்பிரதாயமல்ல. அது எமது உடலையும், உள்ளத்தையும் பரிசுத்தப்படுத்தும் அற்புதக் கருவியாகும்.

மனிதன் இறைவனுக்குச் செய்ய வேண்டிய முதல் முக்கியக் கடமையே ஐந்து நேரத் தொழுகைகள்தான். இதன்மூலம் மனித வாழ்வில் தொழுகைக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதை நாம் நன்கு அறியலாம். இன்றைக்கு அந்தத் தொழுகைகளை நாம் சரிவர நிறைவேற்றுகிறோமா என்று ஒருகணம் சிந்திக்க வேண்டியதிருக்கிறது.

'(நம்பிக்கையாளர்களே) அனைத்து தொழுகைகளையும் (குறிப்பாக) நடுத்தொழுகையையும் (நேரம் தவறாமல்) பேணி(த் தொழுது) கொள்ளுங்கள். மேலும், (தொழுகையின் போது) அல்லாஹ்வுக்குப் பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள்'. (திருக்குர்ஆன் 2:238)

தொழுகை எப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. அதாவது தொழுகையின் காலநேரத்திலும், தொழுகையின் செயல் முறையிலும் நாம் மிகச்சரியாக இருக்க வேண்டும் என்பதே அது.




ஒருமுறை நபித்தோழர் ஒருவர் அரை குறையாக தொழுது கொண்டிருப்பதைக் கண்ட ஹுதைபா அல்யமான் என்ற நாயகத் தோழர், தொழுகைக்குப் பின் அவரை அழைத்து, 'தோழரே நீர் சரியாக தொழவில்லை. ஒரு வேளை நீர் சாவடைந்தால் நபியின் வழிமுறையை விட்டுவிட்ட நிலையில்தான் சாவடைவீர்' என்று கண்டித்தார்.

இந்த நிகழ்வு எமக்கு ஒரு செய்தியை அழுத்தமாகக் கூறுகிறது. அதாவது, 'நீங்கள் ஐங்காலத் தொழுகைகளை தொழுவது பெரிதல்ல. அதைசரிவர முறையாக, நிறைவாகச் செய்வதே பெரிது' என்கிறார் நபிகளார்.

தொழுகையின் சிறப்பை, மகத்துவத்தை நாம் நன்கு அறிய வேண்டும். அப்போதுதான் தொழுகைகளின் மீது மதிப்பும், மரியாதையும் உண்டாகும். 'சொர்க்கத்தின் சாவி தொழுகை' என்று நபிகளார் கூறினார். இதைவிட வேறு என்ன உவமை வேண்டும் எமக்கு.

'திக்ரு' எனப்படும் இறைத்தியானம் செய்வதால் கிடைக்கும் பலனை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

'மெய்யாகவே நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் அவர்கள் தாம்; (அவர்கள் முன்) அல்லாஹ்வின் திருப்பெயர் துதி செய்யப்பட்டால், அவர்களுடைய உள்ளங்கள் நிம்மதியடைந்து விடுகின்றன. (ஏனென்றால்) அல்லாஹ்வின் திருப்பெயரை துதிசெய்வதனால் (உண்மை நம்பிக்கையாளர்களின்) உள்ளங்கள் நிச்சயமாக நிம்மதி அடையும் என்பதை (நபியே! நீங்கள்) அறிந்து கொள்ளுங்கள்'. (13:28)

இன்றைக்கு மனிதன் நிம்மதியைத் தேடி அலையாத இடமில்லை. எங்கும் பிரச்சினை, குழப்பம், அமைதியின்மை. இந்த நிலையில் 'உங்களுக்கான நிம்மதி இதோ இந்த ஐந்து நேரத்தொழுகைகளில் இருக்கிறதே' என்று திருக்குர்ஆன் கூறுவதை நாம் கவனிக்காமல் இருப்பது ஏன்?

மொகமட் அமீர்



2016 – ஜப்பானில் பறவைக் காய்ச்சல். 3 லட்சம் கோழிகள் அழிப்பு.

## வரலாற்றில் இன்றைய தினம்
## 01.12.2017

1822 - பிரேசிலின் பேரரசராக முதலாம் பீற்றர் முடிசூடினார்.
1941 - இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவுக்கு எதிராகத் தாக்குதல் நடத்த ஜப்பான் அரசு அனுமதி.
1973 - கனடாவில் இருந்து பப்புவா - நியூகினியா சுதந்திரம் பெற்றது.
1974 - போஜிங் - 727 வானூர்தி விபத்துக்கு உள்ளாகியதில் அதில் பயணித்த 92பேர் உயிரிழந்தனர்.
1988 - பாகிஸ்தான் தலைமை அமைச்சரானார் பூட்டோ.
1999 - மடு தேவாலயத்தில் நடந்த தாக்குதலைக் கண்டித்து வடக்கு - கிழக்கில் போராட்டம்.
2016 - புதிய அரசமைப்பு தொடர்பாக பேச்சுக்கு அழைக்கிறார் அரச தலைவர்.
2016 - சம்பந்தன் சிங்களவருக்கும் தலைவர். சகல இனங்களுக்காகவும் அவர் குரல் கொடுக்க வேண்டும் என்று ஜெ.வி.பி. தெரிவிப்பு.
2016 - துருக்கி பாடசாலையில் தீ விபத்து. 12 மாணவர்கள் சாவு.

# கார்த்திகை மாத ராசிபலன்

நவம்பர் 17 முதல்
டிசெம்பர் 15 வரை



### மீனம்:

மீன ராசி அன்பர்களே!

சுக்கிரன் மற்றும் கேது ஆகியோரால் நன்மைகள் ஏற்படக்கூடும். மற்றக் கிரகங்கள் அவ்வளவு அனுகூலமாக இல்லை. எனவே, எந்த ஒரு காரியமும் ஒருமுறைக்குப் பலமுறை முயற்சித்த பிறகே முடியும். எதிலும் தடை தாமதங்கள் இருக்கவே செய்யும். பொறுமை மிகவும் அவசியம். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம். தேவையற்ற அலைச்சலும், வாழ்க்கைத்துணையால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் மனைவி மற்றும் மகளின் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவது நல்லது. பிள்ளைகளால் தர்ம சங்கடமான நிலைமைகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும்.

மாதப் பிற்பகுதியில் மேற்கண்ட வகைகளில் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். நவீன ரக மின்சார, மின்னணு சாதனங்களை வாங்குவீர்கள். உறவினர்களால் அனுகூலம் ஏற்படும் என்றாலும், சில பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். சகோதரிகளின் அன்பும் ஆதரவும் உங்களுக்கு மகிழ்ச்சி தரும். தாய்மாமன் வகை உறவுகளால் சில தர்மசங்கடமான சூழ்நிலையை எதிர்கொள்ள நேரிடும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தடை, தாமதங்கள் ஏற்படக்கூடும். சக ஊழியர்களிடம் போதுமான ஒத்துழைப்பு கிடைக்காது. மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது எதிர்காலத்துக்கு நல்லது.

தொழில் மற்றும் வியாபாரத்தில் எவ்வளவுக்கு எவ்வளவு உழைக்கிறீர்களோ அவ்வளவுக்கு இலாபம் கிடைக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். மறைமுகப் போட்டிகளை முறியடிப்பீர்கள். சக வியாபாரிகளுடன் இணக்கமாகப் பழகுவது நல்லது.

**கலைத்துறையினருக்கு:** கடினமாக முயற்சித்தால் மட்டுமே வாய்ப்புகள் கிடைக்கும். அரசால் மதிப்புறுத்தப்படுவீர்கள். படப்பிடிப்பு தொடர்பாக வெளிமாநில, வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

**மாணவர்களுக்கு:** கஷ்டப்பட்டு படித்தால் மட்டுமே தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். நண்பர்களுடன் பழகுவதில் மிகவும் கவனம் தேவை. சந்தேகங்களை அவ்வப்போது ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது.

**குடும்பப் பெண்களுக்கு:** சற்று சிரமம் தரும் மாதமாக இருக்கும். ஆனாலும், பெரிய அளவில் பாதிப்பு எதுவும் இருக்காது. அலுவலகத்துக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதி கரிக்கும்.

# வாழ்வை வளமாக்கும் சிவனுக்குரிய விரதங்கள்



சிவனுக்குரிய விரதங்கள் எட்டு. வாழ்வு வளமாக சிவனுக்கு உகந்த இந்த எட்டு விரதங்களை கடைப்பிடித்து வர வேண்டும்.

| | | |
|---|---|---|
| சோமவார விரதம் | – | திங்கட்கிழமை தோறும் |
| திருவாதிரை விரதம் | – | மார்கழித் திருவாதிரை |
| மகாசிவராத்திரி | – | மாசி தேய்பிறை சதுர்த்தசி |
| உமா மகேஸ்வர விரதம் | – | கார்த்திகை பௌர்ணமி |
| கல்யாண விரதம் | – | பங்குனி உத்தரம் |
| பாசுபத விரதம் | – | தைப்பூசம் |
| அஷ்டமி விரதம் | – | வைகாசி பூர்வபட்ச அஷ்டமி |
| கேதார விரதம் | – | தீபாவளி அமாவாசை |



## நாளை
## 02.12.2017
சனிக்கிழமை
## கார்த்திகை 16

திதி: சதுர்த்தி பி.இ. 12.39 வரை
நட்சத்திரம்: பரணி மு.ப. 11.24 வரை
சுபநேரம்: 03.15–04.45 வரை
ராகுகாலம்: 09.15–10.45 வரை

திருக்கார்த்திகை விரதம் – குமாராலயதீபம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். தேவையற்ற செலவுகளைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

**இடபம்:** செயல்களில் கலையழகும் உத்வேகமும் நிறைந்திருக்கும். தொடர்ந்து வந்த இடையூறு விலகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்.

**மிதுனம்:** மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். தொழில்வியாபாரம் செழிக்கும். தாராள பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய பொருள் வாங்குவர்.

**கடகம்:** பொது இடத்தில் வீண் விவாதம் பேச வேண்டாம். தொழிலில் நிலுவை பணிகள் அதிகரிக்கும். சேமிப்பு பணம் முக்கியச் செலவுக்குப் பயன்படும்.

**சிங்கம்:** நம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்பு உருவாகும். அவசியமற்ற செலவு செய்ய வேண்டாம்.

**கன்னி:** நியாய தர்மத்துடன் செயல்படுவீர்கள். தாமதமான பணி நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி விற்பனை செழிக்கும்.

**துலாம்:** இனிமையுடன் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் புதிய பரிமாணம் உருவாகும். குடும்பத்தினர் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** நன்றி மறந்து செயல்படுகிறவர்களை விமர்சிக்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கூடுதல் முயற்சி தேவை.

**தனுசு:** அதிக திறனுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். சேமிப்பு பணம் உரிய செலவுக்குப் பயன்படும்.

**மகரம்:** திட்டமிட்ட பணி இடையூறு இல்லாமல் நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். இலாபம் அதிகரிக்கும்.

**கும்பம்:** மன கஷ்டம் தீர தெய்வ வழிபாடு உதவும். தொழில் வியாபார நடைமுறை சராசரி அளவில் இருக்கும். பண வரவை சிக்கனம் செய்வது நல்லது.

**மீனம்:** குடும்ப உறுப்பினரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**பேஸ்புக்ல தத்துவம் சொன்னா லைக் விழும்**



**அதையே வீட்டில் சொன்னா மண்டைல கரண்டி விழும்**

**உலகத்திலேயே சொல் பேச்சு கேட்காத விலங்கு ஆடுதான்**



**காலாகாலமா ஆடு ஆடுன்னு சொல்றமே ஒன்னாவது ஆடியிருக்குதா?**



## டிசெம்பர் 7 ஆம் திகதி வெளியாகிறது 'கொடிவீரன்'

முத்தையா இயக்கத்தில் சசிகுமார் மகிமா நம்பியார், பூர்ணா, சனுஷா, விதார்த் நடிப்பில் உருவாகி இருக்கும் 'கொடிவீரன்' படம் டிசெம்பர் 7 ஆம் திகதி திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்சுவை அம்சங்களைக் கொண்டு இந்தப் படம் உருவாகியுள்ளது. இன்று இந்தப் படம் திரைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது எதிர்வரும் 7 ஆம் திகதியே படம் திரைக்குவரும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

போன வருஷம்
இந்த நேரம்
ஜெயாவுக்கு
உயிர்
இருக்கான்னு
பேசிட்டு
இருந்தானுங்க...
இப்போ உயில்
இருக்கான்னு
தேடுறானுங்க.



வந்தவன் வென்றான்;
வந்தவன் தோற்றான்;
வந்தவன் சலித்தான்;
வந்தவன் மகிழ்ந்தான்;
வந்தவன் அழுதான்;
வந்தவன் நொந்தான்;
வந்தவன் கிடந்தான்;

அனைத்து "வந்தவனும்"
ஒருநாள் சென்றேவிட்டான்.



**twitter.com/SaranyaTwtzz**

மன்னிக்க தெரிந்த அனைவருமே கடவுள்தான்! பிழைகளைத் திருத்தி கொள்ள தெரிந்த அனைவருமே மனிதர்கள்தான்!

**twitter.com/nandhu_twitts**

அதிஷ்ட காற்று வீசவில்லை என்று ஏங்குவோர் கவனத்திற்கு..! இன்னும் முப்பது வருடம் கழிந்து வீசப்போவது அதிஷ்ட காற்றாகத்தான் இருக்கும்....! மரங்கள் தொடர்ந்து வெட்டப்பட்டால்..!!

**twitter.com/mekalapugazh**

பேச நேரமில்லாமல் ஓடி உழைத்தவன். பேச ஆளில்லாமல் முதுமையைக் கழிக்கிறான்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 9 | | | | 5 | |
| | 9 | | | | | 3 | | 1 |
| | | 7 | 1 | | 6 | | | |
| 3 | | | 5 | 8 | 7 | | | |
| 4 | 7 | | | | | | 8 | 6 |
| | | | | 1 | 4 | | | 7 |
| | | | 4 | | | 8 | 1 | |
| 1 | | 4 | | | | | 2 | |
| | 5 | | | | 1 | | | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 7 | 2 | 5 | 8 | 4 | 9 | 6 |
| 9 | 2 | 4 | 6 | 3 | 1 | 5 | 8 | 7 |
| 6 | 5 | 8 | 9 | 4 | 7 | 2 | 3 | 1 |
| 1 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 5 | 4 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 7 | 6 | 8 |
| 8 | 4 | 6 | 5 | 7 | 3 | 1 | 2 | 9 |
| 4 | 3 | 5 | 7 | 6 | 9 | 8 | 1 | 2 |
| 2 | 6 | 1 | 3 | 8 | 4 | 9 | 7 | 5 |
| 7 | 8 | 9 | 1 | 2 | 5 | 6 | 4 | 3 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



வயிறு
எரிச்சல் என்பது
உடல்நோய்..
வயிற்றெரிச்சல்
என்பது
மனநோய்.

அனாதை
இல்லத்தில் அன்பு
தர ஆள் இல்லை,
முதியோர் இல்லத்தில்
அன்பைப் பெற ஆள்
இல்லை.!



# புத்திசாலித்தனம்

கத்தியைத் தீட்டாதே! உந்தன் புத்தியைத் தீட்டு என்று ஒரு பெரியவர் அறிவுரை கூறினார். அதனைக் கேட்ட ஒரு சிறிய பையன் "அது எப்படிப் பெரியவரே! புத்தியைத் தீட்டுவது? கத்தியைத் தீட்டுவதென்றால் ஒரு கருங்கல்லில் கத்தியைத் தேய்க்கலாம்! புத்தியைத் தீட்டு என்றால் தலையினைத் தரையிலே தேய்க்க முடியுமா?" என்று கேட்டான். உடனே அந்தப் பெரியவர் "இந்தப் பையனுக்கு புத்திக் கூர்மை குறைவு" என்று புரிந்து கொண்டார்.

ஒரு சமயம் சாக்கிரட்டீஸிடம் அவரது சீடன் ஒருவன் "அறிவுக்கும் புத்தி சாரித்தனத்துக்கும் என்ன வேறுபாடு என்று கேட்டான். அதற்கு சாக்கீரட்டீஸ் அவனிடம் "நான் இதற்குப் பதில் கூறமுன் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார். என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் என்றான் சீடன்.

"அதோ அங்கே ஒரு வயதான பெரியவர் உட்காந்திருக்கிறார் பார்! நேராக அவரிடம் போ. "இங்கேயிருந்து பக்கத்திலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?" என்று அவரிடம் கேட்டு வா என்றார் சாக்ரட்டீஸ். சரி! என்று சொல்லி விட்டுச் சென்ற சீடன் சாக்கிரட்டீஸ் கூறிய பெரியவரிடம் "பெரியவரே! இங்கேயிருந்து பக்கத்திலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?" என்று கேட்டான். பெரியவர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை! சீடன் மறுபடியும் அதே கேள்வியினைக் கேட்டான். அப்போதும் அவர் பதில் சொல்லவில்லை. உடனே இவன் ஒரு முடிவுக்குக்கு வந்தான். அதாவது "சரி பெயரிவர் ஒரு மாதிரியாகத் தெரிகிறார். புத்தி சுயாதீனம் இல்லாதவர் போல் உள்ளது" என்று நினைத்துக் கொண்டு வந்த வழியிலேயே திரும்பி நடந்தான். இவன் சிறிது தூரம் வந்தவுடனே அந்தப் பெரியவர் இவனைக் கூப்பிட்டு "நீ இங்கேயிருந்து பக்கத்துக் கிராமத்துக்குப் போய்ச் சேர ஐந்து நிமிடம் ஆகும்" என்றார். இப்போது சீடன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். பின்னர் அவரிடம் "ஏங்க பெரியவரே இந்தப் பதிலை நீங்கள் முதலிலேயே சொல்லியிருக்கலாம் அல்லவா? என்னைத் திரும்பிப் போக விட்டு பின்பு அழைத்து அதற்குப் பிறகு இப்படிச் சொல்கிறீர்களே" என்றான்.

பெரியவர் "நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் நான் எப்படியப்பா நீ கிராமத்துக்குப் போய்ச் சேர ஆகக் கூடிய நேரத்தைச் சொல்ல முடியும்? அதனால்தான் உன்னை நடக்கவிட்டு உன் வேகத்தைக்கணக்கிட்டுஅதன்பிறகுநேரத்தைச்சொன்னேன்" என்றார். அதற்குச் சீடனால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை. அவன் சாக்கிரட்டீஸிடம் திரும்பி வந்து நடந்தவற்றைக் கூறினான். அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம் என்றார் சாக்கிரட்டீஸ்.

இந்தப் புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வரவேண்டும். என்பதற்காகத்தான் கத்தியைத் தீட்டாதே. புத்தியைத் தீட்டு! என்று பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

## நான் வளர்க்கும் நாய்க்குட்டி

சின்னஞ் சிறு நாய்க்குட்டி
சிங்கார நாய்க்குட்டி
பொன்னைப் போலும் நாய்குட்டி
புதுமையான நாய்க்குட்டி

துள்ளிவரும் நாய்க்குட்டி
துணைக்கு நல்ல நாய்க்குட்டி
கள்ளமில்லா நாய்க்குட்டி
கருணை மிக்க நாய்க்குட்டி

வாலை ஆட்டும் நாய்க்குட்டி
வந்து நக்கும் நாய்க்குட்டி
வேவு பார்க்கும் நாய்க்குட்டி
வீட்டைக் காக்கும் நாய்க்குட்டி

என்றும் எனது நாய்க்குட்டி
எதற்கும் அஞ்சா நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி



## சிறந்த தானம்

அளவுக்கு அதிகமாக இருக்கும் பொருளையே ஒருவர் தானமாகக் கொடுக்க முன்வருவது இல்லை. இந்த நிலையில் உயிருக்கு ஆதாரமாகக் கருதப்படும் குருதியைத் தானமாக வழங்குவதில் ஒருவர் சாதனையே படைத்திருக்கிறார். அந்த மனித நேயம் மிக்க சாதனையாளரின் பெயர் மாரிஸ்கிரஸ்விக் இவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர்.

1994ஆம் ஆண்டு தனது 18ஆவது வயதில் இருந்து இவர் குருதித் தானம் செய்து வருகிறார். கடந்த 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி வரை 188.9லீற்றர் குருதியைத் தானமாக வழங்கி கின்னஸ்சாதனை நூலில் இடம்பிடித்துள்ளார்.





## ஐவகை நிலங்களும் அவற்றின் பெயர்களும்

1. மலையும் மலை சார்ந்த பிரதேசம் - குறிஞ்சி
2. காடும் காடு சார்ந்த பிரதேசம் - முல்லை
3. வயலும் வயல் சார்ந்த பிரதேசம் - மருதம்
4. கடலும் கடல் சார்ந்த பிரதேசம் - நெய்தல்
5. மணலும் மணல் சார்ந்த பிரதேசம் - பாலை

## நீங்களும் முயன்று பாருங்கள்


பெமிதா பாத்திமா வயது 17, சாஜிதர் வயது 16, மெகருன்னிசா வயது 15 இவர்கள் மூவரும் சகோதரிகள். இவர்களிடம் திருக்குறளில் எந்தக் குறளைக் தலைகீழாகப் புரட்டிக் கேட்டாலும் மூவருமே பளிச்சென்று சொல்வார்கள். குறளில் முதல் வார்த்தையைச் சொன்னாலும் இறுதி வார்த்தையைச் சொன்னாலும் உடனே அந்தக் குறளைக் கடகடவென்று சொல்கிறார்கள். மேலும் எந்த அதிகாரத்திலாவது குறள் எண்ணைக் குறிப்பிட்டுக் கேட்டால் கூட அந்தக் குறள் அவர்களிடமிருந்து வந்து விடுகிறது. மூவரும் 40 நிமிடங்களில் 1330 குறள்களையும் பார்க்காமல் ஒப்புவித்து வருகிறார்கள். சில விநாடிகளுக்கு ஒரு குறள் வீதம் சொல்கிறார்கள். இந்த அற்புதமான ஆற்றல் எப்படி வந்தது...? பெமிதா பாத்திமா சொல்கிறார். "நான் 8ஆம் வகுப்பு படித்து வரும்போது ஓய்வு கிடைக்கும் நேரத்தில் திருக்குறளை மனப்பாடம் செய்து வந்தேன். பின்னர் என் தங்கைகளுக்கும் சொல்லிக் கொடுத்தேன்" என்றார். இவர்கள் மூவரும் திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் படித்து மனப்பாடம் செய்கிறார்கள். இவர்கள் திருக்குறளை விரும்பியதற்கான காரணத்தை இப்படிச் சொல்கிறார்கள். "திருக்குறளில் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துக் கருத்துகளும் உள்ளதால் அதை விரும்பிக் கற்கிறோம் என்கின்றனர். தந்தை மீரான் தாயார் ஆரிபாவுமே. இருவரும் இவர்களுக்கு ஆசான்களாக இருந்து குறள்களைப் பயிற்றுவித்துள்ளார்கள்.



முயற்சி செய்தால் சாதனைகளையும் சாராணமாகச் செய்யலாம் என்பதற்கு இந்த மூன்று சகோதரிகளுமே சான்று.

## சேர்த்து எழுதுதல்

1. மா + மரம் = மாமரம்
2. கலை + விழா = கலைவிழா
3. கயல் + விழி = கயல்விழி
4. நெல் + வயல் = நெல்வயல்
5. தேன் + மொழி = தேன்மொழி
6. மழை + நீர் = மழைநீர்
7. கோழி + முட்டை = கோழிமுட்டை
8. மலை + நாடு = மலைநாடு
9. குளிர் + பானம் = குளிர்பானம்
10. உறுதி + மொழி = உறுதிமொழி
11. மரம் + கிளை = மரக்கிளை
12. பொன் + குடம் = பொற்குடம்
13. நீளம் + துணி = நீளத்துணி
14. கடல் + கரை = கடற்கரை
15. தொழில் + சாலை = தொழிற்சாலை
16. மரம் + வேர் = மரவேர்
17. நிலம் + மேல் = நிலமேல்
18. உளம் + மாற்றம் = உளமாற்றம்
19. மனம் + மாற்றம் = மனமாற்றம்
20. அறம் + நெறி = அறநெறி



## வழிகாட்டுவோம்

## நிறுத்தற் குறிகளை பயன்படுத்தல்

**கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

1. மனிதனுக்குப் பல விலங்குகள் உதவி புரிகின்றன
2. காட்டில் குரங்கு மான் சிங்கம் கரடி ஆகிய மிருகங்களைப் பார்த்தோம்
3. மரஞ்செடி கொடிகள் என்பவற்றைத் தருகின்றன
4. ஐயா வீதியின் ஓரமாக நடவுங்கள்
5. காலையில் எழுந்தவுடன் செய்ய வேண்டியவை யாவை
6. என்னுடைய புத்தகத்தைக் காணவில்லை என்று குமுதா அழுதாள்
7. உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழுகின்றன

## மஞ்சள் பாலில் நிறைந்துள்ள மகிமைகள்

வெறும் பாலைக் குடிக்காதே, அதில் ஒரு துளி மஞ்சள் தூளைக் கலந்து குடி' என்று எமது பாட்டிமார் குறிப்பிடுவர். காய்ச்சல் பிடித்தால், தொண்டை வறண்டால், வறட்டு இருமல் வந்தால் மட்டுமே நாம் மஞ்சள் தூள் பாலினை அருந்துகிறோம். முன்னோர்கள் கூறிச் சென்றதை சரியாகப் புரிந்துகொண்டு பின்பற்றாததுதான் இன்றைக்குப் பல நோய்களுக்குக் காரணம். அவற்றுள் மஞ்சள் பாலின் இரகசியமும் ஒன்று. இது ஓர் ஆரோக்கிய அதிசயம். இதைக் குடிப்பதால் கிடைக்கும் மருத்துவப் பயன்கள் ஏராளம்.

✦ மஞ்சள் கலந்த பாலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாக இருப்பதால், தோல், சிறுகுடல், குடல் மற்றும் மார்பகப் புற்று நோய் வராமல் எம்மைப் பாதுகாக்கும். புற்று நோய்கலன்களைத் தடுக்கும்.

(24ஆம் பக்கம் பார்க்க)


## பனை அபிவிருத்திச் சபை

### வழங்குனர்களை பதிவு செய்தல் - 2018

சபையின் வேலைத்திட்டங்களுக்கு பொருள்கள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குனர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். (காலை 09 மணி முதல் மாலை 04 மணிவரை)

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 12.12.2017 இற்கு முன் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9" X 4") இடது பக்க மேல் மூலையில் வழங்குனர்களைப் பதிவு செயத்தல் 2018 எனக் குறிப்பிட்டு தலைவர் பனை அபிவிருத்திச் சபை, தலைமை அலுவலகம், தேசிய வீடமைப்புச் செயலகம், முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ரூபா 1000 இனை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக சபையின் தலைமையகத்தில் காசாளரிடம் வைப்புச் செய்யலாம் அல்லது சபையின் கணக்கு இலக்கம் 1093004 இலங்கை வங்கிக் கிளை, யாழ்ப்பாணம் எனும் வங்கிக் கணக்கில் வைப்பிடலாம். பெற்றுக்கொண்ட பற்றுச்சிட்டை (பொது 172) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்ங்கள் நிராகரிக்கப்படும்.

**வழங்கும் சேவைகள் விவரம் வருமாறு**

1. கட்டட நிர்மாண வேலைகள்
2. நிலமும் கட்டடமும் பராமரிப்பு வேலைகள்
3. கட்டட மூலப்பொருள்கள்
4. வாகனம் தொடர்பான சேவைகள்
5. நுகர்வுப் பொருள்கள்
6. இலத்திரனியல் பொருள்கள்
7. மின்னியல் பொருள்கள்
8. துணிவகைகள்
9. காகிதாதிகள் எழுது பொருள்கள்
10. உணவு வகை
11. தளபாடங்கள்
12. ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள்
13. பனைசார் கைப்பணிக்கான உபகரணங்கள்
14. பனைசார் உணவு உற்பத்திக்கான இயந்திர உபகரணங்கள்
15. அச்சுப்பதிப்பு மற்றும் பதாதைகள்
16. பாதுகாப்பு/சுத்திகரிப்பு சேவை
17. உள்ளக தொலைபேசி இணைப்பு
18. ஏனையவை.

**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை.**



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
07 . 07 . 1940

மறைவு
01 . 11 . 2017

## அமரர் இராசன் சிவபாதம்
(கிளி)

கடந்த (01.11.2017) புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் இராசன் சிவபாதம் (கிளி) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.12.2017) வெள்ளிக்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் அல்வாய் சாமணந்தறை வைரவர் ஆலயத்தில் நடைபெற்று அஸ்தி தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் நூல் வெளியீட்டு நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் தங்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீலமயில் வாசா, அல்வாய் தெற்கு,
அல்வாய். 077 652 9077

குடும்பத்தினர்.



# MIGRATE TO CANADA

## FREE Seminar in JAFFNA

- Student Visa
- Work Visa
- Migration With PR



ICCRC
CRCIC





Conducted by:
Mrs. Manjula Ranamuka
Regulated Canadian
Immigration Consultant

## இலவச கருத்தரங்கு.

Date : 02 December Saturday
Venue : Tilko Hotel, Jaffna.
Time : 10.00 A.M

To reserve your seat today
Call : 077 794 6185

70/6, K.K.S. Road,
காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


## பணியாளர் வெற்றிடம்

எமது நிறுவனத்தில் பின்வரும் பணி வெற்றிடங்கள் காணப்படுகின்றது (உடனடி வேலைவாய்ப்பு) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

- பணியாளர்கள்
- கணினி அறிவுடையோர்
- கணக்காளர்
- சிட்டை எழுதுனர்

VACANCY

விண்ணப்பதாரிகள் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**ALL CEYLON DISTRIBUTORS**

இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் கோயில் வீதியில் 60 பேச்சஸ் காணியும், யாழ் மணல்தரை லேனில் 30 பேச்சஸ் காணித்துண்டும், யாழ் கந்தர்மடம் பலாலி வீதியில் 60 பேச்சஸ் காணியும், யாழ் வைத்திய சாலை வீதியில் CTB பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் 15 அடி அகலம் 200 அடி நீளம் கொண்ட இரண்டு கடைகளும், 15 அடி அகலம் 100 அடி நீளம் கொண்ட ஒரு கடையும், யாழ் வேம்படி சந்திக்கு அருகில் 1 ஆம் குறுக்கு தெருவில் 50 பேச்சஸ் காணியும் 120 பேச்சஸ் காணித்துண்டும், யாழ் நல்லூர் சிவன் கோயிலுக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் 30 பேச்சஸ் காணியும், யாழ் வைத்திய சாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக காந்தி வீதியில் 44 பேச்சஸ்காணித்துண்டும், யாழ் வைத்திய சாலை விதியில் 60 பேச்சஸ் காணியும் (சிக்னலுக்கு அருகில்), யாழ் சிவப்பிரகாசம் வீதியில் 100 பேச்சஸ் காணியும், யாழ் திருநெல்வேலிக்கு அருகில் பலாலி வீதியில் 100 பேச்சஸ் காணித்துண்டும், 140 பேச்சஸ் காணித்துண்டும், யாழ் நாவலர் வீதியில் பிறவுன் வீதிக்கு அருகில் 30 பேச்சஸ் காணித்துண்டும், யாழ் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 60 பேச்சஸ் காணியும், 100 பேச்சஸ் காணியும் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு : 077 723 2535**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune

சீட்டிழுப்பு வாரம் 096

சீட்டிழுப்பு திகதி 30.11.2017 வியாழக்கிழமை

| வெற்றி இலக்கங்கள் | | | | சுப்பர் இலக்கம் | அதிர்ஷ்ட மாதம் |
|---|---|---|---|---|---|
| 03 | 20 | 21 | 26 | 05 | மார்ச் |

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 6,404,740/= | ரூ. 5,717,276/= | ரூ. 1,559,820/= |

2017.12.02ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.


வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1930 . 04 . 30

மறைவு 2016 . 12 . 12

## அமரர் கந்தன் கிருஷ்ணர்

**திதி - திரயோதசி (01.12.2017 வெள்ளி)**

தந்தையாய் தலைவனாய் தரணியிலே வாழ வைத்து
சிந்தையிலே நின்றுறைந்த செம்மலே நீர் பிரிந்து
அந்தநாள் துன்பமதில் ஆண்டொன்று ஆனதுவோ
ஆறாத துயர் சுமந்து அல்லலுற வைத்தீரோ
கண்களில் நினைவாகி காட்சி தனில் மறைவாகி
கடவுளிடம் சென்றாலும் காலமதில் மறப்போமா ?
நெஞ்சமதில் நிலையாகி தெய்வமதில் இளைப்பாறி
விஞ்சு துயர் தனையாற்றி வேண்டுகின்றோம் என்றென்றும்
மீண்டுமொரு முறையிந்த மேதினியில் உமைக்காண

நாவற்காடு,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

நீங்கா நினைவுகளுடன் :
குடும்பத்தினர்.




**Mum & me**

*Baby Diapers*

உங்கள் அன்புச் செல்வங்களின் மெதுமையான சருமத்திற்கேற்ப அதி உயர் உறிஞ்சும் திறனுடன்

*1's -26.00* விலையில்

*4's, 10's, 20's, 30's, 40', & 60's- small, medium, large & extra large*

விநியோகஸ்தர்: வனிக்கா கேஜிக்கல்ஸ்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

MOB: 077 442 2367
TEL: 021 222 0077

CDDA Approved
ISO 9001


## சேவை நலன் பாராட்டுதல்



யாழ் போதனா வைத்தியசாலையில் 25 வருடங்கள் தாதிய உத்தியோகத்தராகவும் 12 வருடங்கள் விடுதிச் சகோதரியாகவும் 02 வருடங்கள் தாதிய பரிபாலகியாகவும் சிறப்புடன் கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெறும்

**திருமதி தனராணி அமிர்தலிங்கம்**

அவர்களின் சேவையை பாராட்டுவதோடு அவர்களின் ஓய்வுகாலமும் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்
யாழ்ப்பாணம்.

## மணி விழா வாழ்த்துக்கள்

யா /சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கடந்த 19 வருடங்களாக ஆசிரியராக கடமையாற்றி கல்லூரியின் விளையாட்டுத் துறையினைமேம்படுத்தி மாவட்ட மாகாண தேசிய நிலைகளில் பல சாதனை மாணவர்களை உருவாக்கி கல்விச் சமூகத்தின் அன்புக்கும் மதிப்பிற்கும் பாத்திரமான நிலையில் அரும் பணியாற்றி தனது 33 வருட ஆசிரிய சேவையிலிருந்து நேற்று (30.11.2017) ஓய்வு பெற்று இன்று (01.12.2017) மணிவிழாக்காணும்



**திருமதி சாரதபவானி சுந்தரலிங்கம்**

அவர்களின் அர்ப்பணிப்பான சேவையினை பாராட்டுவதுடன் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம்**

| | |
|---|---|
| புத்தளம் / நுரைச்சோலை முஸ்லீம் ம.வி | - 05.08.1984 - 14.08.1989 |
| யா / மீசாலை விக்கினேஸ்வரா ம.வி | - 15.08.1989 - 19.05.1996 |
| கிளி / இராமநாதபுரம் ம.வி | - 20.05.1996 - 29.04.1997 |
| யா / மீசாலை விக்கினேஸ்வரா ம.வி | - 30.04.1997 - 04.04.1999 |
| யா / டிறிபேக் கல்லூரி | - 05.04.1999 - 30.11.2017 |


CONGRATULATIONS

மணிவிழாக்குழு, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை பஞ்சலிங்கம்

**(உரிமையாளர், ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ், தாவடிச்சந்தி)**



தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பஞ்சலிங்கம் நேற்று (30.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லாச்சி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான த்ம்பிப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் திலகவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மாணிக்கவாசகர், அருளம்பலம், நவரத்தினம், சொர்ணபுஸ்பம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் பகீரதன் (சுவிஸ்), கிரிரதன், ஜெயதர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும் மேனகா (சுவிஸ்), சுகல்யா, பாலகுமாரா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலுக்ஷன், ஜனுக்ஷன், திஷானா, கிதுஜா காலஞ்சென்ற ஹரிணி மற்றும் மதுகிருஷ்ணா ஆகியோரின் அன்புப்பேரனும் இந்துஷன், தெமிஷன் ஆகியோரின் அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (2017.12.03) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
தாவடி, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மஞ்சள் பாலில் நிறைந்துள்ள மகிமைகள்

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

கீமோதெரப்பியால் உண்டாகும் பக்க விளைவுகளையும் குறைக்கும்.

- இதில் வைரஸ் எதிர்ப்பு மற்றும் பக்டீரியாக்களை எதிர்க்கும் தன்மை அதிகம் இருப்பதால் சளி, இருமல் தீரும் தொண்டை கரகரப்பாகும் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு கிடைக்கும். மஞ்சள் கலந்த பாலைக் குடிக்கும்போது, உடல் வெப்பம் அதிகரிக்கும். இதன் காரணமாக, நெஞ்சு சளி மற்றும் சைனஸ் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.
- மஞ்சள் கலந்த பால் கீழ்வாதத்தை குணமாக்கும். முடக்கு வாதத்தின் காரணமாக உண்டாகும், வீக்கத்தைக் குறைக்கும். தசை மற்றும் எலும்புகளில் ஏற்படும் வலியைக் குறைத்து வளைவுத் தன்மையை அதிகரிக்கும். முதுகுத்தண்டு மற்றும் மூட்டுகளை உறுதிப்படுத்தும்.
- இதை தினமும் குடித்து வந்தால், சருமம் பளபளப்பாகும். தோல்களில் ஏற்படும் புள்ளிகள், சொறி, சிரங்குகளுக்கு மஞ்சள் கலந்த பாலில் பஞ்சை நனைத்துப் பூசினால் விரைவில் குணமாகும்.
- ஆயுள் வேதம், `மஞ்சள் கலந்த பால் குருதியைத் தூய்மைப்படுத்தும்' என்கிறது. இது, குருதி ஓட்டத்தை அதிகரித்து புத்துணர்வு தரும்.
- இது, பைட்டோ ஈஸ்ட்ரோஜெனை (Phytoestrogens) உற்பத்தி செய்து, ஓமோன் குறைபாடுகளைச் சரிசெய்ய உதவும். அத்துடன் பெண்களின் கர்ப்பம் தொடர்பான பிரச்சினைகளையும் குணப்படுத்தும். மஞ்சளுக்கு வலியைக்குறைக்கும் தன்மை அதிகம் இருப்பதால், மாதவிடாய் காலங்களில் வரும் கடுமையான வயிற்றுவலியைத் தடுக்கும். கருவுற்ற பெண்கள் கர்ப்ப காலத்தில் தொடர்ந்து மஞ்சள் கலந்த பாலைக் குடித்து வருவது நல்லது.
- மஞ்சள் கலந்த பால், அழற்சிஎதிர்ப்புத் தன்மை மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட் நிறைந்தது. வயிற்றில் புண், உடல்வலி, வீக்கம், வயிற்றுப் போக்கு மற்றும் தலைவலிகளில் இருந்தும் நிவாரணம் தரும். சமிபாட்டுத் தொகுதியைச் சிறப்பாக இயங்கச் செய்யும்.
- இதை, கல்சியம் சத்துக்களின் மூல ஆதாரம்' என்றே கூறலாம். எலும்புகள் வலுவாக, உறுதியாக இருக்க உதவும். ஆஸ்டியோ பொரோசிஸ், எலும்புத் தேய்னம் ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கும்.
- அல்சைமர் (Alzheimer) நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இதைத் தொடர்ந்து பருகிவந்தால், நோயின் தீவிரம் குறையும்.

## மேலும்...

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 5 வாள்கள், 3 கோடரிகள், ஒரு கைக்குண்டு என்பன மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்தில் நடந்த வாள்வெட்டுச் சம்பவங்களில் தொடர்புடைய முக்கிய செயற்பாட்டாளர்களாகக் கருதப்படும் மூவர் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு, பியகமவில் கைது செய்யப்பட்ட நிலையில் மேலும் மூவர் நேற்றுக் கைதாகியுள்ளனர்.
வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்த 22 வயதான ஆப்தீன் மொஹம்மட் இக்ரம், 20 வயதுடைய கோண்டாவில் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த சிவகுமார் கதியோன், யாழ்ப்பாணத்தை சேர்ந்த 17 வயதுடைய ராசேந்திரன் சிந்துஜன் ஆகிய மூவருமே கடந்த செவ்வாய்க்கிழமை பியகமவில் உள்ள வீடொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.
யாழ். தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் செயற்பட்ட சிறப்புப் பொலிஸ் குழுவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.
கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் வவுனியா மற்றும் பரந்தன் பகுதிகளில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களின் அலைபேசிகள் கண்காணிக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர்.
வவுனியாவைச் சேர்ந்த 18 வயதான நவயோகராசா ஜீவதர்ஷன், பாபா எனப்படும் 22 வயதான நவராசா திவன்கர், 17 வயதான உடுவில் பகுதியைச் சேர்ந்த ரிச்சட் ரேமன் விருஷன் ஆகியோரே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.
இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் ஆவா குழு உறுப்பினர்கள் பலரைக் கைது செய்தனர். அப்போது அந்தக் குழுவின் தலைவனாகச் செயற்பட்டவர் உட்படப் பலர் சிக்கினர். அவர்கள் தற்போது சிறையில் உள்ளனர்.
அதன் பின்னர் இக்ரம் இந்தக் குழுவுக்குத் தலைமை வகித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கோப்பாய், மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதியில் இடம்பெற்ற சொத்து சேதங்கள், கொள்ளைகள், வாள் வெட்டுக்கள் உள்ளிட்ட பல சம்பவங்களுடன் இந்த ஆவா குழு தொடர்புபட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
ஆவா குழுவைக் கட்டுப்படுத்த வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஷான் பெர்னான்டோவின் நேரடிக் கட்டுப்பாட்டில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித்த பெர்னான்டோ மற்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சர் விஜித குணரத்ன ஆகியோரின் மேற்பார்வையில் கோப்பாய், மானிப்பாய் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் அடங்கிய மூன்று பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அவற்றின் தலைமைப் பொறுப்பு யாழ். தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமைப் பொலிஸ் பரிசோதகர் காமினி ஹேவாவிதாரனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை, பியகமவில் கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.
(உ-ற-26,8,31,37)

## மைத்திரியுடன்...

என்றும் அவர் கூறினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
ராஜபக்ச ஆட்சியைப் போன்று தவறுகள் மற்றும் குறைபாடுகளை மூடி மறைத்து சட்ட ஆட்சியைக் காலடியில் போட்டு நசுக்குவதற்கும், சமூக நியாயத்தை குழிதோண்டிப் புதைக்கவும் நல்லாட்சி அரசு தயாராக இல்லை. கடன் பொறிக்குள் சிக்கியிருந்த நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடியதுடன், அரச பயங்கரவாதமும் கோலோச்சியிருந்தது.
இந்த நிலமையை மாற்றி நாட்டை புதியதொரு பாதைக்கு நுழைக்க நானும், அரச தலைவரும் பாடுபட்டுவருகின்றோம். அந்தப் பயணத்துக்கான பாதை முட்கள் நிறைந்தவை யாகும்.
பொய்யான குழிகளில் விழுந்துவிடாமல், ஏமாற்றமடையாமல் அந்தப் பயணத்தில் முன்சென்று பண்பாடுமிக்க அரசொன்றையும் நீதியான சமூகமொன்றையும் மக்களாட்சி மிக்க இலங்கையையும் உருவாக்கும் நிமித்தம் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் - என்றார்.
(உ-5)

## 7 பேர்...

உடனடியாக உதவிகளை வழங்க அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பணிப்புரை வழங்கியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்றைய தினம் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு உடனடியாக வழங்கப்படவுள்ளது.
பதுளை, காலி மாவட்டங்களில் தலா 3 பேரும், கம்பகா மாவட்டத்தில் ஒருவருமாக மொத்தம் 7 பேர் உயிரிழந்துள்ளனர். காலி மாவட்டத்தில் மூவரும், அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் தலா ஒருவருமாக 5 பேர் காணாமற் போயுள்ளனர்.
(உ-5)
(விரிவான செய்தி பக்:13)

## இ.போ.ச...

கைவிட்டு நேற்றுப் பிற்பகலில் உடனடியாகவே சேவைக்குத் திரும்பினர் ஊழியர்கள்.
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய தலைமை முகாமையாளர் உபாலி கிரிவத்துடுவவை அந்தப் பதவியிலிருந்து உடனடியாக இடம்மாற்றப்படுவார் என்றும் வடபிராந்திய தலைமை முகாமையாளராக கேதீஸ் நியமிக்கப்படுவார் என்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைமையகம் வழங்கிய வாக்குறுதியை அடுத்தே சேவைப் புறக்கணிப்புக் கைவிடப்பட்டது என்று ஊழியர் சங்கம் தெரிவித்தது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், போக்குவரத்துச் சபையின் தலைவருடன் நேற்றுக் காலை நடத்திய பேச்சை அடுத்தே இந்த வாக்குறுதி வழங்கப்பட்டது என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கம் தெரிவித்தது.
உறுதிமொழி வழங்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இ.போ.ச. ஊழியர்கள் வெடி கொளுத்தித் தமது மகிழ்சியைக் கொண்டாடினர்.
இ.போ.ச. ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் நடத்திவந்த சேவைப் புறக்கணிப்புப் போராட்டத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.
இதற்கிடையே நேற்றுக் காலை இந்தப் பிரச்சினை தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் பேசினார். இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்படுவதுடன் விசாரணை முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சம்பந்தன் தலைமையிலான குழுவினரிடம் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
"வடமாகாண பிராந்திய முகாமையாளரின் செயற்பாடுகள் ஏற்கக்கூடியதாக இல்லை. அவர் கட்சி ஒன்றினதும் அமைப்பாளராக இருக்கின்றார். அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அது தொடர்பில் அமைச்சர் கவனம் எடுக்க வேண்டும். மேலும் பிராந்திய போக்குவரத்து முடக்கப்படாத வகையில் உடனடியாக நடவடிக்கைகளை அமைச்சர் எடுக்க வேண்டும்" என்று அமைச்சரிடம் சம்பந்தன் வலியுறுத்தினார்.
அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா, இந்த விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து விசாரணைகளை முன்னெடுப்பதோடு இந்தப் பிரச்சினைக்கு தற்காலிகத் தீர்வாக முகாமையாளருக்கு பணி இடமாற்றம் வழங்குவது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவருடன் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.
(உ-5,31,37)

## ஒகி...

கடும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.
இதனால் வடக்கு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடும் மழை, காற்று வீசும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், கடல் கடும் கொந்தளிப்புடன் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.
வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று இரவு 10 மணிக்கு வெளியிடப்பட்ட சிறப்பு ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் நிலைகொண்ட தாழமுக்கம் புயலாக வலுவடைந்தது. இந்தப் புயலுக்கு ஒகி என்று பெயர் சூட்டப்பட்டது.
இந்தப் புயல் நேற்றுமுன்தினம் இரவு இலங்கையின் தென்கடல் பகுதியின் ஊடாக நாட்டைக் கடந்தது. இதனால் கொழும்பு உள்ளிட்ட தென்பகுதியில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. நேற்று இரவு 10 மணிக்கு இந்தப் புயல், அரேபியக் கடலில் கொழும்பிலிருந்து மேற்கு திசையில் 400 கிலோ மீற்றர் தொலைவில் நிலை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதன் பாதிப்பு இன்று வரையில் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டது. தரையில் காற்று 50 தொடக்கம் 60 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் என்றும், 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.
கடலில் காற்று 90 தொடக்கம் 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.
(உ-5)

## ரணில்...

வர் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார். அதையடுத்து பௌத்த பீடங்களின் தேரர்கள் ஒருவாறு இழகி வந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் கூட்டமைப்புடன் தொடர்ந்து பேசுவோம் எனவும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.
சம்பந்தனின் காலத்தில் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே தமது விருப்பம் எனவும் பௌத்த பீடங்களின் முக்கிய தேரர்கள் மனம் திறந்து பேசினர்.
அதேவேளை, புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையை நாட்டு மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தாமல் இறுதி வரைவையே முன்வைத்திருந்தால் பிரச்சினை எழுந்திருக்காது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
இடைக்கால அறிக்கையை அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாக விமர்சிப்பதால் சிங்கள பௌத்த மக்களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.
புதிய அரசமைப்புக்கான இறுதி வரைவை விரைந்து தயாரிக்குமாறு தலைமை அமைச்சர் மற்றும் கூட்டமைப்பு ஆகியோரிடம் பௌத்த பீடங்களின் தேரர்கள் கோரிக்கை விடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து புதிய அரசமைப்புக்கான இறுதி வரைவை விரைந்து தயாரிப்பது என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.
(உ-5)

## 336...


கள் எழுந்தன. தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.
இதனை அடுத்து தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக நீதிமன்றத்திலிருந்த வழக்கை மீளப்பெறுவதற்கு மனுதாரர்களுடன் பேச்சு நடத்த தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் அந்தக் குழுவில் அடங்கியிருந்தனர். இதற்கிடையில் மனுதாரர்களுக்கும், உள்ளூராட்சி அமைச்சருக்கும் இடையிலான பேச்சில் சமரசம் எட்டப்பட்டது. வழக்கை மீளப் பெற மனுதாரர்கள் இணங்கினர்.
இந்த வழக்கு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தபோதும் நேற்றைய தினம் மன்றில் அதனை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கோரி கடந்த திங்கட் கிழமை நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில் மனு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஷகீட், தேர்தல்கள் திணைக்களத்தினால் 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளதாலும் தேசிய நலனைக் கருத்திற்கொண்டும், அமைச்சருடன் தமது கட்சிக்காரர் ஏற்படுத்தியுள்ள சமரசத்தைக் கருத்தில் எடுத்தும் தமது மனுவை திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.
மன்றில் முன்னிலையாகியிருந்த சட்ட மா அதிபர் ஜயந்த ஜயசூரிய, வழக்கை மீளப் பெற அனுமதிப்பதில் எதிர்ப்புக்கள் இல்லை என்றும் வழக்குச் செலவைக் கோரக் கூடாது என்றும் தெரிவித்தார். மனுதாரர் தரப்பு இதற்கு இணங்கியதை அடுத்து மேன் முறையீட்டு நீதிமன்றம் வழக்கை மீளப்பெற அனுமதித்ததுடன், டிசெம்பர் 4ஆம் திகதி வரை விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை முற்றாக நீக்கி உத்தரவிட்டு வழக்கு விசாரணையையும் நிறைவுறுத்தியது.
இதையடுத்து 336 உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முடுக்கி விட்டுள்ளது.
(உ-5,31)

## 18 முதல்...

உள்ளூராட்சி மன்றங்களுக்குமான வேட்பு மனுக்களை எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை தாக்கல் செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு திங்கட்கிழமை காலையில் வெளியாகும் என்பதுடன், நாட்டின் ஒட்டுமொத்த உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல் திகதி, எதிர்வரும் 27ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரால் வெளியிடப்படும் என்றும் தெரியவருகின்றது.
ஏற்கனவே 93 உள்ளூராட்சி சபைகளுக்கான கட்டுப் பணத்தை ஏற்கும் பணிகளை தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.
(உ-5,101)

## தடை நீக்க...

தடையை நீக்கும் உத்தரவில் நீதிபதிகள் கையொப்பம் இடாததால் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்துவதில் சிக்கல் எழுந்தது. எனினும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா வழங்கிய உறுதிமொழிக் கடிதத்தை அடுத்து தேர்தலுக்கான தடைகள் அனைத்தும் விலகின.
உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு விடுத்த அரசிதழ் (வர்த்தமானி) மீது தடை விதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவைத் திரும்பப் பெறுவதாக மனுதாரர்கள் நேற்று நீதிமன்றில் அறிவித்தனர். இதையடுத்து அரசிதழ் மீது விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவை நீதிபதிகள் நீக்கி உத்தரவிட்டனர்.
எனினும் அது தொடர்பான நீதிமன்ற உத்தரவுப் பிரதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நேற்று மாலையே கிடைக்கப் பெற்றது. அதிலும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஒப்பமிட்டிருக்கவில்லை. இதனால் அந்த உத்தரவு செல்லுபடியாகக் கூடியதா என்கிற அச்சம் ஏற்பட்டது.
இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் விடுமுறை என்பதால் நீதிபதிகளின் கையெழுத்துடனான உத்தரவைப் பெற திங்கட்கிழமை வரை காத்திருக்கவேண்டியிருக்கும். திங்கட்கிழமை வரை காத்திருந்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 93 சபைகளுக்குமான தேர்தலுடன் சேர்த்து எஞ்சிய சபைகளுக்கும் தேர்தலை நடத்த முடியாத சட்டச் சிக்கல் ஏற்பட்டுவிடும். எனவே அதற்கு முன்பாக வேட்பு மனுக்கோரல் அறிவிப்பை விடுக்க வேண்டிய கட்டாயம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு.
இது தொடர்பில் ஆணைக்குழு, உள்ளூராட்சி அமைச்சின் செயலருக்கு தெரியப்படுத்தியது. நீதிபதிகளின் ஒப்பமில்லாமல் தமது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்றும், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சபைகளுக்கும் சேர்த்து ஒரே நாளில் தேர்தலை நடத்துவதானால் திங்கட்கிழமை தம்மால் தேர்தலுக்கான வேட்பு மனுக்கோரல் அறிவிப்பை விடுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டினர்.
நீதிபதிகளின் கையொப்பம் இடப்படாத உத்தரவுப் பிரதியை வைத்துக்கொண்டு தாம் தேர்தல் அறிவிப்பை விடுத்த பின்னர் ஒருவேளை திங்கட்கிழமை நீதிபதிகள் அந்த உத்தரவில் கையெழுத்திடவில்லையானால் அது நீதிமன்ற அவமதிப்பாகிவிடும் என்பதையும் தெரிவித்தனர்.
இதனையடுத்து இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவினர், உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள், சட்டவாதிகள் கலந்துரையாடினர்.
கடைசியில் நீதிமன்ற உத்தரவை அடுத்து தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடக் கோரும் எழுத்துமூலமான உறுதியளிப்பை உள்ளூராட்சி அமைச்சர் வழங்கினால், அரசிதழைத் தாம் தயார் செய்வார்கள் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவினர் குறிப்பிட்டனர்.
உள்ளூராட்சி அமைச்சரினால் அதற்குரிய உறுதியளிப்பு வழங்கப்பட்டது. இதனையடுத்து நேற்று மாலை 6 மணிக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், வேட்புமனுக் கோரும் அரசிதழில் கையெழுத்திட்டனர்.
(உ-5,101)



# 700 இலக்குகளை வீழ்த்துவார் லையன்

## லீமன் நம்பிக்கை

"பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 700 இலக்குகளை லையன் வீழ்த்துவார்" என்று நம்பிக்கை தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் லீமன்.

ஆஷஸ் தொடரில் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளமையால் லையனின் பங்களிப்புத் தொடர்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், அவர்மீது அளப்பெரிய நம்பிக்கையை வெளிப்படுத்தினார் லீமன்.

"எங்களது சுழற்பந்து வீச்சாளர் நாதன் லையன் 70 டெஸ்ட் ஆட்டங்களில் 274 இலக்குகளை வீழ்த்தி அற்புதமாகச் செயற்பட்டு வருகிறார். அவருக்கு இப்போது 30 வயது ஆகிறது. இதே போன்று தொடர்ந்து தன்னம்பிக்கையுடன் செயற்படும் பட்சத்தில் 700 இலக்குகளை அவரால் வீழ்த்த முடியும் என்று நம்புகிறேன்" என லீமன் மேலும் தெரிவித்தார். (ம)

# மாஷல் ஆட்ஸ் கழகத்துக்கு கணிசமான அளவு பதக்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 1

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திவரும் தேசிய ரீதியிலான தொடரில், முல்லைத்தீவு ஒக்கிநாவன் மாஷல் ஆட்ஸ் கழகத்துக்கு கணிசமான அளவு பதக்கங்கள் கிடைத்தன.

கொழும்பு சுகததாச அரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஒக்கிநாவன் மாஷல் ஆட்ஸ் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கனகலிங்கம் 56-60 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் தங்கப்பதக்கமும், தே.அருள்தாஸ் 46-50 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கமும், வை.வசந்தன் 36-40 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கமும், கஜேந்திரன் 41-45 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கமும், கருணராஜா 36-40 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

41-45 வயதுப்பிரிவு கராத்தே பயிற்றுநர்களுக்கான குமித்தே போட்டியில் மாஷல் ஆட்ஸ் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த நாகேந்திரன் வெண்கலப்பதக்கத்தையும், 21வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான குமித்தே போட்டியில் சமந்த குமார வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

முடிந்தால் அடித்தாடுங்கள்

# இங்கிலாந்து வீரர்களுக்கு நாதன் லையன் சவால்

முடிந்தால் தனது பந்துவீச்சை அடித்தாடுமாறு இங்கிலாந்து வீரர்களை சீண்டியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் லையன்.

ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை ஆரம்பமாகும் நிலையில் இவ்வாறான சவாலை இங்கிலாந்து வீரர்களுக்கு வழங்கியுள்ளார் லையன்.

இங்கிலாந்து அணியினர் எனது பந்துவீச்சை அடித்தாடினால் நிச்சயம் எனது வலையில் விழுவர். எனது பந்துவீச்சை அடித்துத் துவைத்து என்னை பந்துவீச்சிலிருந்தே தூக்குமாறு செய்தால் எனக்கு அது பிடிக்கவே செய்யும். நிச்சயம் கடந்த டெஸ்ட் ஆட்டத்தை விட அடுத்துவரும் டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியினர் எனக்கு எதிராக சிறந்த உத்தியுடன் இறங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் இப்படிப்பட்ட சவால்கள்தான் கிரிக்கெட் ஆட்டத்தின் வேடிக்கையே. உலகின் தலைசிறந்த வீரர்களுக்கு எதிராகப் பந்து வீசும் சவால்களை நான் எப்போதும் விரும்பியே இருக்கிறேன். வீரர்கள் அடித்து விளையாடும்போதுதான் எனக்கும் இலக்குகளை வீழ்த்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். எனவே இது எதிர்பார்ப்புகளை அதிகரிக்கிறது. சவாலை எதிர்நோக்குகிறேன் என லையன் மேலும் தெரிவித்தார். (ம)

# ஆஸி. வீரர்களுக்கு கட்டுப்பாடு இல்லை

## லீமன் பதில்

ஆஷஸ் தொடரின்போது ஆஸ்திரேலிய வீரர்கள் இரவு நேரத்தில் வெளியே செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வெளிவரும் செய்திகளை அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் லீமன் மறுத்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் ஸ்ரோக்ஸ், நபரொருவருடன் இரவு விடுதியொன்றில் கைகலப்பில் ஈடுபட்டதை அடுத்து, அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆஷஸ் தொடருக்கான அணியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார். இவ்வாறான அசம்பாவிதங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என்பதற்காக ஆஷஸ் தொடரின் போது இங்கிலாந்து வீரர்கள் தமது விடுதிகளை விட்டு இரவு நேரத்தில் வெளியில் செல்வதற்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. ஆஸ்திரேலிய வீரர்களுக்கும் இவ்வாறான தடை விதிக்கப்பட வுள்ளது என்று வெளியான தகவலை



லீமன் மறுத்துள்ளார்.

"நிச்சயமாக அது போன்று தடை விதிக்கமாட்டோம். எங்களது வீரர்கள் சரியான வழியில் செல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அது மட்டுமின்றி அவர்கள் ஒன்றும் சிறுவர்கள் கிடையாது. நல்ல அனுபவசாலிகள்" என லீமன் மேலும் தெரிவித்தார். (ம)



# டெஸ்ட் ஆட்டங்களே முதன்மையானவை

## கோக்லி தெரிவிப்பு

பன்னாட்டு அரங்கில் சிறந்து விளங்குவதற்கு, டெஸ்ட் ஆட்டங்கள் மிகவும் முக்கியத்துவம் மிக்கவையாக உள்ளன என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

டெல்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"பன்னாட்டு ரீதியில் சிறந்து செயற்பட விரும்பினால், டெஸ்ட் ஆட்டங்களை நாம் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும். அதுவே அனைத்துக்கும் அடித்தளம். டெஸ்ட் ஆட்டங்களை விட்டு தூரமாகப் போனால் எம்மால் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட முடியாது. அனைத்து இளம் வீரர்களும் டெஸ்ட் ஆட்டங்களை நேசிக்க வேண்டும். அது மிகவும் அவசியமானதும்கூட" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

# சிறைச்சாலைகள் அணி அசத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 1

சிங்கப்பூர் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் இலங்கை சிறைச்சாலைகள் அணி வெற்றிபெற்றது.

சிங்கப்பூர் சிறைச்சாலைகள் அணியை எதிர்த்து இலங்கை சிறைச்சாலைகள் அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் இலங்கைச்சிறைச்சாலைகள் அணி வெற்றிபெற்றது. இலங்கை சிறைச்சாலைகள் அணியில் இடம்பெற்றிருந்த தமிழ் வீரர்களான கோபன், கனிஸ்ரன் இருவரும் கோல்களைப் பதிவுசெய்தனர்.' (ம-23)



## டோனி பங்கேற்ற நிகழ்வில் அப்ரிடிக்கு ஆதரவாக முழக்கங்கள்



காஷ்மீரில் இந்திய அணியின் நட்சத்திர வீரர் டோனி பங்கேற்ற நிகழ்வொன்றில், அப்ரிடிக்கு ஆதரவாக முழக்கங்கள் எழுப்பப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. டோனி டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். இந்திய அணி டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடும் போது டோனி பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது வழக்கம். இந்திய இராணுவத்திலும் பதவி வகிக்கும் அவர் தற்போது காஷ்மீருக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ளார். அவ்வாறு நேற்றுமுன்தினம் நிகழ் வொன்றில் டோனி பங்கேற்கச் சென்றபோது, அப்ரிடிக்கு ஆதரவாக முழக்கங்கள் எழுப்பப்பட்டதை அடுத்து சிறிது பரபரப்பு ஏற்பட்டது. (ம)



## முதலிடத்தில் இந்திய அணி

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தல் பட்டியலில் இந்திய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

பன்னாட்டு கிரிக்கெட் சபை தனது தரப்படுத்தல் பட்டியலை நேற்றுமுன்தினம் புதுப்பித்தது. 125 புள்ளிகளுடன் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. 111 புள்ளிகளுடன் தென்னாபிரிக்க அணி இரண்டாவது இடத்திலும், 105 புள்ளிகளுடன் இங்கிலாந்து மூன்றாவது இடத்திலும், 97 புள்ளிகளுடன் நியூசிலாந்து நான்காவது இடத்திலும், 97 புள்ளிகளுடன் ஆஸ்திரேலிய ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

94 புள்ளிகளுடன் இலங்கை ஆறாவது இடத்திலும், 88 புள்ளிகளுடன் பாகிஸ்தான் ஏழாவது இடத்திலும், 75 புள்ளிகளுடன் மேற்கிந்தியத் தீவுகள் எட்டாவது இடத்திலும், 72 புள்ளிகளுடன் பங்களாதேஷ் ஒன்பதாவது இடத்திலும், வெறும் 2 புள்ளிகளுடன் சிம்பாப்வே 10ஆவது இடத்திலும் உள்ளன.

**முதலாவது இடத்தை தீர்மானிக்கும் தொடர்**

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் ஜனவரியில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு அணிகளும் தரப்படுத்தல் பட்டியலில் முதல் இரண்டு இடங்களிலும் உள்ள அணிகள் என்பதால் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான தொடர் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைத் தீர்மானிக்கும் வகையில் அமைய வாய்ப்புக்கள் அதிகம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## நியூசிலாந்து – தீவுகள் டெஸ்ட் இன்று ஆரம்பம்

நியூசிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

வெலிங்டனில் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு இன்றைய ஆட்டம் ஆரம்பமாகும். அடுத்த ஆட்டம் ஹமில்டனில் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன.

ஒருநாள் தொடரின் ஆட்டங்கள் முறையே டிசெம்பர் 20, டிசெம்பர் 23, டிசெம்பர் 26 ஆகிய திகதி களிலும், ரி-20 தொடரின் ஆட்டங்கள் முறையே டிசெம்பர் 29, ஜனவரி 1, ஜனவரி 3 ஆகிய திகதிகளிலும் நடைபெறவுள்ளன. (ம)

## பதிலடி கொடுக்குமா இங்கிலாந்து அணி?


ஆஷஸ் தொடரின் இரண்டாவது ஆட்டம் அடிலெய்டில் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெறுமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிஸ்பெய்னில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 10 இலக்குகளால் வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டம் அடிலெய்டில் நாளை ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றால் தொடரில் 1:1 என்று சமநிலை வகிக்கலாம். மாறாக தோல்வியடைந்தால் அடுத்த மூன்று ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே இங்கிலாந்தால் கிண்ணத்தைக் கைப்பற்றக்கூடிய நெருக்கடி நிலை ஏற்படும்.

**ஆடுகளம் எத்தகையது**

அடிலெய்ட் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானது. நாளை ஆரம்பமாகும் ஆஷஸ் ஆட்டம் பகலிரவு ஆட்டமாக அமையவுள்ளது. எனவே வெயில் கடந்த பின்னர்தான் ஆட்டம் ஆரம்பமாகப்போகிறது. வெயில் கடந்த பின்னர் ஆட்டம் ஆரம்பமாகின்ற காரணத்தால் ஆடுகளத்தில் இருக்கும் புற்கள் வாடாமல் தொடர்ந்து புத்துணர்ச்சியுடன் இருக்கும். இவ்வாறான நிலையில் ஆடுகளம் நாள் முழுவதும் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக இருக்க வாய்ப்புள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின் இந்த ஆட்டம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு உரித்தானது என்றால் அதில் மிகையாக ஒன்றுமில்லை. (ம)



## பந்தாடியது பார்சிலோனா


லா லிகா தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து மோர்சியா இந்த ஆட்டத்தில் மோதியது.

ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் அலெக்சர் பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.

19ஆவது நிமிடத்தில் பக்கியூ மற்றொரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது பார்சிலோனா.

அலெக்சிஸ் 48ஆவது நிமிடத்தி லும், டெனிஸ் 60ஆவது நிமிடத்திலும், ஜோஸ் 76ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)



## அண்டர்சன் - ஜடேயா இடையே கடும் போட்டி

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன் முதலிடத்தில் உள்ளார். அவருக்கும் இரண்டாம் இடத்தில் உள்ள இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் ஜடேயாவுக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இதன்படி அன்டர்சன் 891 புள்ளிகளையும், ஜடேயா 880 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். தென்னாபிரிக்க வீரர் ரபாடா 876 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இந்திய அணியின் அஸ்வின் 849 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், இலங்கை அணியின் கேரத் 807 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். (ம)

# அறிவித்தல்

நேற்றைய தினம் ஒளிபரப்பு செய்யப்படவிருந்த
அபிவிருத்தி லொத்தர் சபையின்
விசேட சீட்டிழுப்பான
"சுப்பர் போல் Lucky Novembere"
தவிர்க்கமுடியாத காரணத்தால் 02/12/2017
சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.
30/11/2017 க்கான
சீட்டிழுப்புக்குரிய
"சுப்பர் போல் Lucky Novembere"
லொத்தர் சீட்டுக்கள் அனைத்தும்
02/12/2017 இடம்பெறும்
விசேட சீட்டிழுப்புக்கு
செல்லுப்படியாகும் என்பது
குறிப்பிடத்தக்கது.



அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 356, லைறிதி லெல்லின் ஆர்டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 2333 546 // 47 துரித அழைப்பு: 0114 824 824

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 16.07.1934 — மறைவு 01.11.2017

கடந்த 01.11.2017 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்
### பொன்னையா சதாசிவம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (01.12.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ், சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

11/4, முதலாம் ஒழுங்கை,
பொற்பதி வீதி, கொக்குவில்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பேரம்பலம் (பிள்ளையார்)



நாவலடிக்கேணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பேரம்பலம் (பிள்ளையார்) (30.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் செல்வநாயகம் மகேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் லீலாவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற உமாதேவி, மீனாட்சி, குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கெங்காதேவி, கௌரி, தவமணிதேவி, கமலாதேவி, மயூரன், துவாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறிதரன், இராசலிங்கம், சுகந்தன், விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்வியா, மிதுரி, கஜன், அனுசன், குருபரன், அபிராமி, பிரவீனா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2017) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடிக்கேணி,
காரைநகர்.
தகவல்:
குடும்பத்தினர். 021 320 6631

## தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கொழும்பு பல்கலைக்கழகம்

க.பொ.த சா/த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்கமுடியும்.
உ/த 2017 தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம். வேலை தேடுவோர்
பதவி உயர்வுக்கு விணணப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது.
விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என் மூன்று
பிரிவுகளாக நடைபெறும். புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்கு
Type DIT<Name> & send to 772395895

MCS யாழ் பல்கலைக்கழகம் அருகில்
Winner of Best Performances Award

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1420
சீட்டிழுப்பு திகதி 2017.11.30
வெற்றி இலக்கங்கள் 05 17 58 65 O
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 12,887,344/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 92
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2017.11.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,163,195/-
வெற்றி இலக்கங்கள் 21 41 54 72 B
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## Group and Personal Class

Tamil and English Medium
பழனியாண்டவர் கோயிலடி கோண்டாவில் கிழக்கு
### புதிய கல்வியாண்டு - 2018
தரம் 6 முதல் O/L வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
03.12.2017 ஞாயிற்றுக்கிழமை
ஆண்டு 9,10,11 காலை 6 மணி
ஆண்டு 6,7,8 பிற்பகல் 1 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(வரையறுக்கப்பட்ட மாணவர்கள் - ஒரு வகுப்பில் 35 பேர் மட்டுமே)
தொடர்பு 077 045 9855
வழக்கமான ஆசிரியர் குழாம் R.மோகன்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 13.06.1941 — உதிர்வு 04.12.2014

அமரர்
### சின்னப்பொடியர் கந்தையா

கருணை பொழியும் கண்களும்
கருத்து நிறைந்த வாக்கும்
மழலைக் கண்ணீர் துடைக்கும்
கரங்களும்
நன்மை மறவாத உச்சமும் கொண்டு
வானுறையும் தெய்வமாகிவிட்ட
அமரரின் ஆத்மா சாந்தியடைய
வேண்டுகின்றோம்.

குமரநகர், கைதடி மத்தி, கைதடி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னப்பா தங்கராசா



குருசு மதவடி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வராகி அம்மன் கோவில், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னப்பா தங்கராசா நேற்று (30.11.2017)வியாழக்கிழமைகாலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னப்பா - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் யோகராசாவின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சுப்பர் தங்கமுத்துவின் மருமகனும் அசோக், அஜித்தன், அஜித்தா ஆகியோரின் தந்தையும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் கிசோபன், சதுஸ்ரிபன், லிதுஸ்ரினா ஆகியோரின் பாட்டனும் தர்மராசா, காத்தலிங்கம், தவமணி, துரைசிங்கம், லச்சுமணன், செல்வராசா, கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராகி அம்மன் கோவில், கொக்குவில்.
077 846 8761
தகவல்:
குடும்பத்தினர்.



## வேண்டும் ஸ்ரோக்ஸ் வோக்ஸ் வலியுறுத்தல்

பென் ஸ்ரோக்ஸ், பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு மீண்டும் அணியில் இணைய வேண்டும் என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் வோக்ஸ்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர், இரவுநேர விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஸ்ரோக்ஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இருந்து ஸ்ரோக்ஸ் நீக்கப்பட்டுள்ளார். இதையடுத்தே வோக்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

"ஒரு இங்கிலாந்து கிரிக்கெட் வீரனாகவும், நல்ல நண்பனாகவும், பென் ஸ்ரோக்ஸ் அணியில் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர் அணியில் இணைந்தால், இரு கரம் நீட்டி வரவேற்போம். அவர் பிரச்சினைகளில் இருந்து மீண்டு வந்து ஆட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்" என வோக்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1986, பூசம், 11 இல் செவ்வாய், கிரக பாவம் 26, கட்டட ஒப்பந்தகாரராக தொழில் புரியும் மணமகனுக்கு O/L, A/L படித்த மணமகள்
தொடர்பு :
சசி திருமணசேவை
Viber : 077 044 3589
076 773 9264

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.